



# தமிழரசு

ஜூன் 1 - 15, 1998 ரூ.3







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

## அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
எய்ட்ஸ்
சென்னை - 8

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


★ மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் புகழாரம் .................... 2

★ மாண்புமிகு முதலமைச்சர் பிறந்தநாள் செய்தி .................... 3

★ அரசு ஆணைகள் .................... 4

★ காயிதே மில்லத் பிறந்தநாள் விழாவில் கலைஞர் .................... 6

★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு .................... 9

★ கல்வி சிறக்கும் திருவாரூர் .................... 17

★ தமிழர் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம் .................... 20

★ காவலர் கடமை .................... 26

★ கலைஞர் கவிதைகளில் மரங்கள் .................... 28

★ கலைஞரின் தமிழ் .................... 31

★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அறிவிப்புகள் .................... 33

★ திருவாரூர் மாவட்டத்தில் பால்பெருக்குத் திட்டங்கள் .................... 36

★ பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் .................... 38

★ காவிரித் தாயின் கால்படும் இடங்கள் .................... 40

★ கால்நடை மருத்துவக் கல்லூரி கட்டடத் திறப்புவிழா - கலைஞர் உரை .................... 41

★ விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் கலைஞர் உரை .................... 44

★ திருச்சியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலைஞர் உரை. .................... 47


## திருக்குறள்

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" - குறள்

பெற்றோர் - வாழ்க்கைத் துணை - குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும். (கலைஞர் உரையிலிருந்து)


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
வைகாசி - ஆனி
ஜூன் 1-15, 1998
மலர் : 28 இதழ்: 23


### முதல் பக்க அட்டையில்...

சென்னையில் - கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்திறப்பு விழாவில் மேதகு ஆளுநர் செல்வி மீபாத்திமா பீவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஆகியோர்.

### கடைசிப் பக்க அட்டையில்...

விழுப்புரம் - மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்புவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்கள்.



# “பல்கலைக்கழகங்களின் மேலான வளர்ச்சிக்கு முதலமைச்சர் கலைஞர் பாடுபட்டு வருகிறார்!”



- மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் புகழாரம்!

சென்னை மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் ரூ.1 கோடியே 60 இலட்சம் செலவில் அமைந்துள்ள, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தினை, 26.5.98 அன்று மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார்.

இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள், தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

“கல்வி, மனித வாழ்க்கையில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. நம் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், நன்மைக்கும் மற்றும் அமைதியான சமூகநிலைக்கும் கல்வி ஒரு நம்பிக்கையூட்டும் கருவியாகும். உண்மையான அறிவை வளர்த்தால்தான், கல்வியின் நோக்கம் - அதாவது தரம் பார்த்து அணுகும் முறை மற்றும் சமப்படுத்தப்பட்ட மனநிலையை உருவாக்குதல் ஆகியவற்றாலேயே ஈடேறும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

வருங்காலம் நமது கைகளில்தான் உள்ளது. எனவே, ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதில் நாம் நமது வலிமை மற்றும் பலவீனத்தைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பத் திட்டமிட வேண்டும்.

பல்லாயிரமாண்டுக் கால - நம் பாரம்பரியமும், மதிப்பும் இந்தியாவின் மாபெரும் சக்தியாகத் திகழ்கிறது.

நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ பாரத சமுதாயம் எவ்வளவு தான் நாகரீகமாக மாறினாலும், அது நமது ஒழுக்கம் மற்றும் கலாச்சார மதிப்பை இழந்துவிடக் கூடியதாக இருந்திடல் கூடாது.

## கல்வி அவசியம்

மனிதநேயம் மற்றும் சரிநிகரான சமுதாயத்தை உருவாக்க மனிதனுக்குக் கல்வி மிகவும் அவசியம் ஆகிறது. தொழில் கல்வி பயின்று, வேலை பார்ப்பவர்களில் இந்தியா உலகத்தில் 3-வது இடம் வகிக்கிறது.

நாம் தற்போது ஏழ்மையை ஒழிக்கப் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறோம். கல்வியறிவுக் குறைவுதான் ஏழ்மைக்கு முக்கியக் காரணமாகும். கல்வி நிறுவனங்களை நடத்தத் திறமை வாய்ந்த வல்லுனர்கள் தேவைப்படுகிறார்கள்.

இவர்களால்தான் கிராம மக்களை முன்னேற்றும் வகையில் திறம்படச் செய்யமுடியும். கல்வி பயின்றவர்கள் கிராம மக்களுக்குப் பணிசெய்யவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பல்கலைக்கழகங்கள்

இன்றைய இளைய தலைமுறையினர் இந்தப் பணியில் ஈடுபட வேண்டும். இளைய தலைமுறையினர் இந்தியாவை வளமாக உருவாக்கும் பொறுப்புணர்ச்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல இந்தியப் பல்கலைக்கழகங்கள் பெரிதும் உதவுகின்றன. மாணவர்களுக்குக் காலச் சூழ்நிலைக்கு ஏற்றபடி புதிய தொழில்நுட்பங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அப்படி சொல்லிக் கொடுத்தால்தான் நாம் நல்ல இடத்தைப் பிடிக்க முடியும். கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் இன்னும் பழமை வாய்ந்த நிலையில் உள்ளது.

## கல்வியில் மாற்றம்

காலச்சூழ்நிலைக்கு ஏற்றபடி கல்வியில் மாற்றம் கொண்டுவர வேண்டும். ஆசிரியர்கள், தாங்கள் பயிற்றுவிக்கும் திறனை அதிகப்படுத்த வேண்டும். இதை இந்தியா முழுவதும் கொண்டுவரவேண்டும். பல்கலைக் கழகங்களில் இதை உடனடியாகக் கொண்டு வர முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் ஆரம்பப் பள்ளிகளிலாவது அமல்படுத்த வேண்டும்.

## கலைஞருக்குப் பாராட்டு

பல்கலைக்கழக வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறப்புடன் பாடுபட்டு வருகிறார். அவருக்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எனது உறுதுணையும், ஒத்துழைப்பும் என்றும் உண்டு.

இவ்வாறு மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் பேசினார்.

நிர்ணயிக்கப்படாததும், நாமே நிர்ணயித்துக் கொள்ள முடியாததுமான இயற்கையான மனித ஆயுட் காலத்தில் எழுபத்தி நான்கு ஆண்டுகளைக் கடந்து எழுபத்தி ஐந்தில் நான் அடியெடுத்து வைக்கிற நாள் இந்த - சூன் மூன்றாம் நாளாகும். நான் பிறந்த பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் மொழியும் தமிழர் உரிமையும் காத்திட மூண்டெழுந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் 1938 சூன் மூன்றாம் நாள் தான் தொடங்கப்பட்டது என்பதையும் அந்நாளில் அப்போர்க்களத்து இளஞ்சிப்பாய்களில் ஒருவனாக என்னை இணைத்துக் கொண்டு பொதுவாழ்வில் புகுந்தேன் என்பதையும் எண்ணிடும்போது எத்துணை இன்ப அலைகள் இதயத்தில் மோதுகின்றன.

பாச உணர்வும், அன்புப் பிணைப்பும் கொண்ட நேசமிகு பெரியோர்களும், தாய்மார்களும், என் உயிரினுமேலான உடன்பிறப்புக்களும், இதனை என் பவள விழா ஆண்டு எனக் கூறி வாழ்த்துகின்றனர்.



# கலைஞரின் பவள விழாச் செய்தி...

இந்திய நாட்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டின் நிறைவையும் - என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டுள்ள இந்தக் கழகத்தின் பொன்விழா ஆண்டின் முகப்பையும் இணைத்துக் கொண்டுள்ளது என் பவளவிழா என்கிற போது ஓர் உணர்ச்சிப் பிரவாகம், பெருமிதம், என்னுள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தான் செய்கிறது.

உலக அளவில் சமாதானத்தையும் - நாட்டின் ஒற்றுமையையும் - சமுதாய அளவில் அறிவியல் எழுச்சியையும் - அதன் தாக்கமாக அமைதிசூழ் வளமிகு - எதிர்காலத் தலைமுறையையும் உருவாக்கிட, மனிதநேய அடிப்படையில் அமைந்திட வேண்டிய வலிமைசேர் மாளிகையின் அடித்தளத்துக் கற்களில் ஒருவனாக இருக்கிறோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, அவ்வாறு இருப்போர் அனைவரையும் என் உடன்பிறப்புக்களாகக் கருதி என் பொதுவாழ்வுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

இந்தப் பயணத்தில் இடர், துயர், இன்பம், துன்பம், எதிர்ப்பு, ஆதரவு, ஏச்சு, பேச்சு, இழிவு, பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழி நடத்திய அண்ணாவையும் நினைத்துக் கொண்டு - இலட்சியத்தில் இம்மியளவும் சருக்கல் இல்லாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன்.

அறுபது இலட்சத்துக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புக்களையும் - அன்பெனும் அமுதூட்டி ஆதரவுக் கரம் நீட்டித் துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப் பெருமக்களையும் - அரசியலுக்கும் கட்சிப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டு வாழ்த்தி அருளுகின்ற அனைத்து நெஞ்சங்களையும் - தூய துணைகளாகக் கொண்டு எழுபத்தி நான்கு ஆண்டுகளைத் தாண்டி விட்டோமே என்ற மலைப்புடன் திரும்பிப் பார்க்கிறேன். என் விழிகள் மட்டும் விரிந்திடவில்லை - பெருமூச்சு காரணமாக என் சுவாசப்பைகளும் விரிந்திடுகின்றன.

இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் - இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளுடன் - எஞ்சியுள்ள பயணத்தைத் தொடருகிறேன். என் கடன், பணி செய்து கிடப்பதே. ❒

# பிளஸ் டு தேர்வில், மாநில அளவில் முதல் 3 இடங்கள் பெற்ற

## மாணவ மாணவியருக்குக் கலைஞர் பாராட்டு

1998 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுத் தேர்ச்சியடைந்த மாணவ, மாணவியர் 13.6.98 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்கள்.

தமிழகப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியரிடையே ஆர்வத்தை வளர்த்திட வேண்டுமென்னும் நோக்கத்துடன் 10ஆம் வகுப்பிலும், 12ஆம் வகுப்பிலும் தமிழை ஒரு பாடமாகவாவது எடுத்துப் படித்து, அதிக மதிப்பெண்கள் பெற்று, அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவ, மாணவியரின் உயர் கல்விச் செலவுகளை அரசே ஏற்கும் திட்டத்தினை 1996ஆம் ஆண்டு முதல் இந்த அரசு அறிமுகப்படுத்திச் செயல்படுத்திவருகிறது.

இத்திட்டத்தின்படி, கடந்த ஏப்ரல் திங்களில் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பின்வரும் மாணவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, அவர்கள் தொழிற்கல்வி உட்பட எந்த வகையான கல்வியைப் பெற விரும்பினாலும், அதற்குரிய செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்குமெனக் கூறி, அதன் அடையாளமாக ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபாய் வழங்கினார்.

| பெயர் | மதிப்பெண்கள் | தரம் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| செல்வி. சி.சத்யா | 1176 | முதல் இடம் | அவிலா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர். |
| செல்வன்.ஏ.சண்முகசுந்தரம் | 1170 | இரண்டாம் இடம் | எம்.எஸ்.பி.எஸ்.என். நினைவு மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல். |
| செல்வன் கே.பிரதீப் | 1169 | மூன்றாம் இடம் | டி.ஏ.வி.மெட்ரிகுலேஷன்மேல்நிலைப்பள்ளி, கோபாலபுரம், சென்னை - 86. |

மேலும், செல்வி. ஜி.தனலட்சுமி, சென்னையில் உள்ள ஜெனரல் கரியப்பா மேல்நிலைப்பள்ளியில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் வரைவாளர் (கட்டம்) பாடத்தில் 600-க்கு 594 மதிப்பெண்கள் பெற்று அப்பாடத்தில் மாநில முதன்மையுடன் சிறப்பான தேர்ச்சியைப் பெற்றுள்ளார்.

வறுமைச் சூழ்நிலை மிகுந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்த போதிலும் மிகவும் முயன்று படித்துச் சாதனை புரிந்துள்ள செல்வி.ஜி.தனலட்சுமியைப் பாராட்டி, ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி இம்மாணவிக்கும் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறி, அதன் அடையாளமாக 5,000/- ரூபாய் வழங்கினார்.

மாவட்ட அளவில் அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்கும், இதே போல அவர்களின் உயர் கல்விக்கான முழுச் செலவினையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. அரசின் இந்த உதவியைப் பெறும் தகுதி வாய்ந்த 87 மாணவ மாணவியரின் பட்டியல் தனியே வெளியிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர். க.அன்பழகன் ஆகியோருடன் பிளஸ் டு தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ மாணவிகள்.




## தமிழகத்தில் உள்ள 1,228 காவல் நிலையங்கள்

## ஒவ்வொன்றிற்கும் நிலையான முன்பணம்

## ரூ.5,000/- அனுமதி : கலைஞர் ஆணை

காவல் நிலையங்களில் ஏற்படும் சில்லறைச் செலவினங்களுக்குப் போதுமான முன்பணம் ஒதுக்கப்பட வில்லையென்பதால், இனிமேல் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஆண்டுக்கு ரூ.5,000/- இதற்கென ஒதுக்கப்படும் என 25.5.1998 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கிணங்க, தற்போது தமிழகத்தில் உள்ள 1,228 காவல் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் நிலையான முன்பணம் ஆண்டிற்குத் தலா ரூ.5,000/- வழங்கிட கலைஞர் அவர்கள் 13.6.1998 அன்று ஆணையிட்டுள்ளார்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி ரூ.25ஐ ரூ.35/- ஆக உயர்த்தியும், முதல்நிலை மற்றும் தலைமைக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி ரூ.30ஐ ரூ.40/- ஆக உயர்த்தியும் வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## சத்துணவுத் திட்டம்:

## ஒவ்வொரு குழந்தைக்கும் வாரம் ஒரு முட்டை வழங்க முதலமைச்சர் கலைஞர் ஆணை

இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைத்து உரையாற்றியபோது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சத்துணவுத் திட்டத்தில் 1989 முதல் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் முட்டை, இனி வாரம் ஒருமுறை வழங்கப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி ஜூன் 1 ஆம் தேதி முதல் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்துச் சத்துணவு மையங்களிலும் சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு முட்டை வீதம் வழங்கிட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் எழுபத்தி மூன்று இலட்சம் குழந்தைகள் பயனடைவர். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 45 கோடி ரூபாய் செலவாகும்.

## அதிக அளவில் விதவைப் பெண்களுக்கு உதவித் தொகை :

## விதிகளைத் தளர்த்தி முதல்வர் கலைஞர் ஆணை

நலிந்த பிரிவைச் சார்ந்த - ஆதரவற்ற முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அதனை 21.4.1998 முதல் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

விதவைப் பெண், கணவனால் கைவிடப்பட்ட மனைவி ஆகியோருக்கு 18 வயதிற்கு மேற்பட்ட வாரிசு இருந்தால், இந்த உதவித்தொகை கிடைக்காது என்று ஏற்கெனவே விதிகள் இருக்கின்றன. இந்த விதிகள் தளர்த்தப்பட வேண்டுமென்று, 23.4.98 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் சமூகநலத் துறை மானியக் கோரிக்கையின்போது, உறுப்பினர்கள் பலரும் கேட்டுக்கொண்டார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தக் கோரிக்கையினை ஏற்று, தகுதியின் அடிப்படையில் அனைத்து ஆதரவற்ற விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மாதம் ரூ.150 உதவித்தொகை பெறுவதற்கு ஏற்ப, 18 வயதிற்கு மேற்பட்ட வாரிசு இருந்தால் உதவித்தொகை கிடைக்காது என்ற விதிமுறையை நீக்கி ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையினால் மறுமணம் செய்யாத விதவைப் பெண்கள், 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள், விவாகரத்து பெற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோர்க்கு 20 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும் அவர்கள் முதியோர் உதவித்தொகை பெற வழி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்த ஆண்டு முதல், அதிக அளவிலான பயனாளிகள், முதியோர் உதவித்தொகை பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச தொழிற்கல்வி

இதுவரை பட்டதாரிகள் அல்லது பட்டயதாரிகள் (டிப்ளமோதாரர்கள்) இல்லாத ஆண்டு வருமானம் ரூ.25 ஆயிரத்துக்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் முதன் முதலாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் 500 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், 500 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இலவச கல்வித் திட்டம் வழங்கப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2-5-97 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்பிறகு கடந்த 24-9-97 முதல் இந்த எண்ணிக்கை இரு பிரிவுகளுக்கும் தலா 1000 என உயர்த்தப்பட்டது. தற்போது இந்த உச்சவரம்பு முற்றிலும் அகற்றப்பட்டு இந்த தகுதிகள் வாய்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். ★



# மனித நேயப்பயிரை - மதநல்லிணக்கப் பயிரை யாரும் வேலி தாண்டி வந்து அழிக்கவிடாமல் காப்போம் !

- காயிதேமில்லத் பிறந்தநாள் விழாவில் கலைஞர் உரை

"கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களை நான் மிக மிக நெருங்கி அறிந்தவன், அவரோடு பழகுகின்ற இனிய வாய்ப்பைப் பெற்றவன், அவருடைய அன்பு மழையில் நனைந்தவன், அவருடைய எளிமையை ரசித்தவன், அவருடைய அறிவைப் புகழ்ந்து பாராட்டியவன், இன்றைக்கும் பாராட்டிக்கொண்டிருப்பவன், அவருடைய ஆற்றலை வியந்து போற்றியவன்.

ஒருமுறை உலக நிகழ்ச்சிகள் சிலவற்றை அறிஞர் அண்ணா அவர்களோடு நாங்கள் எல்லாம் அமர்ந்து பகிர்ந்துகொண்டிருந்த வேளை - அப்பொழுது நாஞ்சிலார் அண்ணா அவர்களிடம் பேசும்பொழுது, இஸ்ரேலுக்கும், இஸ்லாமிய நாட்டிற்கும் ஏற்பட்ட உறவு முறிகின்ற சில நிகழ்ச்சிகளைப் பற்றி பேசிய நேரத்தில், நாஞ்சிலார் இஸ்ரேல் பக்கத்தினுடைய நியாயத்தை எடுத்துச் சொன்னார்.

அப்பொழுது அண்ணா சொன்னார், "என்னதான் நியாயம் அங்கே இருந்தாலும், என்னிடத்திலே இஸ்ரேலா, இஸ்மாயிலா என்று கேட்டால், எனக்கு இஸ்மாயில்தான் வேண்டும். இஸ்ரேலைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னார். அந்த அளவிற்குக் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களிடத்திலே அவ்வளவு அன்பினை பதிய வைத்திருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதைப்போலவே தந்தை பெரியார் அவர்கள், காயிதேமில்லத் அவர்களுடைய குணங்களிலே சொக்கிப் போய் அவரைத் தன்னுடைய அருமைத் தோழராக ஏற்றுக் கொண்டவர்.

இன்றைக்குக் காயிதேமில்லத் அவர்கள் இல்லை என்றாலுங்கூட, அவர் இல்லாத குறையை இங்கே நாம் இன்றைக்கு உணர முடிகின்றது.

## தமிழ்மொழியே இந்தியாவின் பொது மொழியாக வேண்டும் என்று முழங்கியவர்

ஆனால்-அரசியல் சாசனம் எழுதப்பட்ட அந்த நேரத்தில் இந்தியாவினுடைய பொதுமொழி பற்றிய வினாக்குறி தோன்றியபோது, அந்த அரசியல் நிர்ணய சபையிலே "இந்தியாவினுடைய பொதுமொழியாக என்ன மொழி இருக்கவேண்டும் ?" என்று கேட்டபோது, "இலக்கிய வளத்தால், கலை நயத்தால், தொன்மையால் எல்லா வகையிலும் வளம் பெற்ற மொழியான தமிழ் மொழிதான் இந்தியாவினுடைய பொதுமொழியாக இருக்க வேண்டும்" - என்றுரைத்தார் கண்ணியத்தினுடைய காவலர் காயிதே மில்லத் அவர்கள்.

அவர் இந்த நாட்டுப் பற்றில் எவ்வளவு அரும் பெரும் சிகரமாகத் திகழ்ந்தார் என்பதற்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சியை மாத்திரம் உங்களுக்குக் குறிப்பிட நான் விரும்புகின்றேன்.

இந்தியா - பாகிஸ்தான் இரு நாடுகளாகப் பிரிந்த பிறகு, 1948-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அவர்களை காயிதேமில்லத் அவர்கள் சந்தித்த அந்த நேரத்தில் லியாகத் அலிகான் சொன்னார்; "இந்தியாவில் வாழும் நாலரைக் கோடி இஸ்லாமியரின் நினைவை பாகிஸ்தான் என்றென்றும் மறவாது" என்று.

அதைக் கேட்டதும் காயிதேமில்லத் உடனடியாகச் சொன்ன பதில்; "முன்கதைகளை எல்லாம் மறந்துவிடுங்கள், நாம் அன்னியராகி ஆறுமாதங்களாகி விட்டன. எங்கள் சர்க்கார் எங்களை நியாயமாக நடத்தும் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அவசியப்பட்டால்

எங்கள் உரிமைகளை சத்தியப் பாதையில் போராடிப் பெற்றுக்கொள்ள எங்களுக்கு உறுதி உண்டு. எங்கள் நிலைக்காக நீங்கள் இரங்க வேண்டாம்" என்று பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அவர்களிடத்திலே சொன்னவர் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள்.

### வரலாற்றில் இடம் பெறத்தக்கவர்

பாகிஸ்தான் பிரதமர் தொடர்ந்து கேட்டார்; "இருக்கட்டும், உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள், எது வேண்டுமானாலும் செய்கிறேன்" என்று லியாகத் அலிகான் கேட்டார்.

அப்போது காயிதேமில்லத் அவர்கள் கூறிய வார்த்தைகள் வரலாற்றில் இடம் பெற வேண்டியவை. அவர் சொன்னார்; "எங்களுக்கு வேறு ஒன்றும் செய்யவேண்டாம். ஒன்றை மாத்திரம் செய்யுங்கள். எங்கள் நாட்டில் எது நடந்தாலும் எங்களுக்காக கவலைப்படாமல் உங்கள் நாட்டில் வாழும் சிறுபான்மை இந்து மக்களின் நன்மைக்கு ஆவன செய்திட வேண்டுகிறேன். எக்காரணம் கொண்டும் எத்தகைய இடையூறும் அங்குள்ள இந்துக்களுக்கு நீங்கள் இழைக்கக் கூடாது. இது ஒன்றே நீங்கள் எங்களுக்காகச் செய்ய வேண்டிய உதவி" - என்று கூறிய அந்த கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள் இன்றைக்கு இல்லை.

### எல்லோரும் சகோதரர்கள்

இன்றைக்கு அவர் இல்லை என்றாலுங்கூட அவருடைய பெயரால் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதி ஒன்று உண்டு; மேற்கொள்ள வேண்டிய சூளுரை ஒன்று உண்டு; அதுதான் மத நல்லிணக்கம். அதுதான் மனிதநேய உணர்வு. அதற்காகத்தான் அவர் பாடுபட்டார்.

பெரியாரும், காயிதே மில்லத்தும், அறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் இந்துக்கள் - முஸ்லிம்கள் எல்லோரும் சகோதரர்களாகத்தான் வாழ்ந்தோம். இன்றைக்குக்கூட அப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

ஒரு மரத்திலே இருக்கின்ற கிளையில் சில புல்லுருவிகள் தோன்றலாம். அந்தப் புல்லுருவிகளை வெட்டுவதற்காக ஆயுதமெடுத்தால் மரத்தையே வெட்டுவதாகப் பொருள் அல்ல. புல்லுருவி எடுக்கப்பட்டால் மரம் மேலும் வளம் பெறும் என்பதற்காகத்தான் புல்லுருவிகளை வெட்டுவதற்காக முனைகிறோம்.

களை எடுப்பதற்காகச் செல்பவனைப் பார்த்து "பயிரை அழிக்க வருகிறாயா ?'' - என்று கேட்பது பைத்தியக்காரத்தனம். களை எடுக்கப்பட்டால்தான் பயிர் செழிக்கும் என்பதை உணர்ந்தவர்கள் நாம்.

### ஆயிரங்காலத்துப் பயிர்

இந்தப் பயிர் சாதாரணப் பயிர் அல்ல. கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தும், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும், இவர்களெல்லாம் பாடுபட்டு வளர்த்த பயிர். ஆயிரங்காலத்துப் பயிர். நம்முடைய மத ஒற்றுமைப் பயிர். மத நல்லிணக்கப் பயிர். நம்முடைய மனித நேயப்பயிர்.

அந்தப் பயிரைக் காப்போம், காப்போம், யாரும் வேலிதாண்டி வந்து அந்தப்பயிரை அழிப்பதற்கு அனுமதியோம், அனுமதியோம் - என்ற சூளுரையை கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் பிறந்த நாளில் மேற்கொள்வோம்".

**- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5-6-98ல் நடைபெற்ற காயிதேமில்லத் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலிருந்து.**

## கலைஞர் ஆட்சியில் விவசாயிகள் நலன்

- இந்தியாவிலேயே முதன் முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.
- விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 44 கோடி ரூபாய் நிலவரி ரத்து. வரி செலுத்தியவர்களுக்கு அடுத்த ஆண்டு ஈடு செய்யப்படும்.
- விவசாயிகளின் குறுகியகாலக் கூட்டுறவுக் கடன், மத்திய காலக் கடனாகவும் - மத்தியகாலக் கடன், நீண்டகாலக் கடனாகவும் நீட்டிப்பு. அபராத வட்டித் தொகை 50 கோடி ரூபாய் தள்ளுபடி.
- நெல் கொள்முதல் விலை : குவிண்டாலுக்கு

| | 1995-96ல் கடந்த ஆட்சியில் | 1997-98ல் கலைஞர் ஆட்சியில் |
|---|---|---|
| மோட்டா ரகம் | ரூ.360 | ரூ.415 |
| சன்ன ரகம் | ரூ.375 | ரூ.445 |
| போக்குவரத்து இடைநிகழ் செலவு | ரூ.5 | ரூ.35 |
| கொள்முதல் அளவு | 1½ லட்சம் டன் | 18 லட்சம் டன் |

- மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையை விட கலைஞர் அரசு ரூ.35 அதிகம் தருகிறது.
- நெல் கொள்முதலில் இதுவரை 18% வரை ஈரப்பதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 20% வரை ஈரப்பதம் அனுமதி.
- விவசாயிகள் விளைபொருள் விற்பனைக்கு வசதியாக எந்த ஆண்டுமே இல்லாத அளவிற்கு, இவ்வாண்டு 926 நேரடி கொள்முதல் நிலையங்கள்.
- கரும்பு விலை நிர்ணயம்:- ஒரு டன்னுக்கு

| | | |
|---|---|---|
| 1995-96ல் | கடந்த ஆட்சியில் | ரூ.560 |
| 1996-97ல் | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலை | ரூ.459 |
| கலைஞர் ஆட்சியில் நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.599 |
| 1997-98ல் மத்திய அரசு நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.484.50 |
| கலைஞர் ஆட்சியில் நிர்ணயித்த | குறைந்தபட்ச விலை | ரூ.660 |
| | அதிகபட்ச விலை | ரூ.846 |

- கரும்பு பயிர்க்கடன் ரூ.45,000 லிருந்து ரூ.55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ.25,000 லிருந்து ரூ.35,000 ஆகவும் உயர்வு.
- 1996 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்கு நிவாரணமாக 55.15 கோடி ரூபாய் 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள்.
- 1997 நவம்பரில் விவசாயிகளுக்கு உட்பட வெள்ள நிவாரண நிதி 59 கோடி ரூபாய்.
- இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால், 1000 ரூபாய்; மாடு இறந்தால் 5000 ரூபாய்; கன்று இறந்தால், 3,000 ரூபாய் நிவாரணம்.
- சென்னை, மதுரை, திருச்சி, பொள்ளாச்சி ஆகிய 4 மண்டலங்களிலும் உள்ள 200 ஏரிகளைத் தூர்வார ரூ.20 கோடியில் பணிகள்.
- காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளுக்கு கடந்த ஆண்டில் 12 கோடி ரூபாய்; இவ்வாண்டில் 20 கோடி ரூபாய்.
- இராமநாதபுரம் மாவட்டம் நாராயணகாவேரி, ரகுநாதகாவேரி, சங்கரத்தேவன் பாசனக்கால்வாய்களில் 7.41 கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து புனரமைக்கும் பணிகள். இதனால் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் சாயல்குடி பகுதிகளில் 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.
- யூரியா உர விற்பனை வரி 4% லிருந்து 2% ஆக குறைப்பு.
- உணவு உற்பத்தி :

  1995 - 96ல் 68 இலட்சம் மெட்ரிக் டன்.

  1997 - 98ல் 95 இலட்சம் மெட்ரிக் டன்.
- நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயில் இருந்து 150 ஆக உயர்வு.

# வரலாற்றிலேயே முதன் முதலாகக் காவிரி டெல்டா பகுதிகளில் பாசனக் கால்வாய்களில் தூர்வாரும் மாபெரும் செயல் திட்டம்

## கலைஞர் அரசின்

சீரிய முயற்சியால் ஆசியாவிலேயே சிறந்த பாசன அமைப்புள்ள டெல்டா பகுதிகளில் தூர்வாரும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெறுகின்றன. இதனால் டெல்டா பகுதியின் பொருளாதாரம் உயர்வதுடன் விவசாயிகளின் வாழ்விலும் வளம் கொழிக்கும்.



தூர்வாருவதற்கு முன்பு
கேட்பாரற்றுக் கிடக்கும் காட்டாமணக்குப் புதர்கள்



திருவாரூர் - ஓடம்போக்கி ஆற்றில் தூர் வாரும் பணி

- தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள காவிரி டெல்டா பகுதிகளில் ஆண்டாண்டு காலமாக மண்மூடி, காட்டாமணக்குப் புதர்களால் அடைபட்டுக் கிடந்த பாசனக்கால்வாய்களில் தூர்வாரும் பணிக்குக் கடந்த ஆண்டு ஒதுக்கீடு 12 கோடி ரூபாய், இவ்வாண்டு ஒதுக்கீடு 20 கோடி ரூபாய்.
- மேலும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு 7.5 கோடி ரூபாய்.
- கடலூர் மாவட்டத்திற்கு இப்பணிக்கு இவ்வாண்டு ஒதுக்கீடு 3 கோடி ரூபாய்.
- 294 பொக்லைன், ஜேசி.பி., புல்டோசர் ஆகிய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகள்.
- கடந்த ஆண்டில் ஆறுகள், வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களில் 2110 கி.மீ. தூரத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டன.
- இவ்வாண்டில்:

| | | |
|---|---|---|
| ஆறுகள் | 480 | கி.மீ. |
| வடிகால்கள் | 1050 | கி.மீ. |
| பாசன வாய்க்கால்கள் | 300 | கி.மீ. |
| | 1830 | கி.மீ. |

- இத்துடன், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1500 கி.மீ. தூர்வாரும் பணிகள்.
- மொத்தம் 5440 கி.மீ. தூர்வாரும் பணிகள்.

**விவசாயிகளுக்கு நன்மைகள்:**

ஆறுகளிலும் - கால்வாய்களிலும் தடையில்லா நீரோட்டத்தின் வாயிலாக, பாசனநீர்ப் பகிர்வு உறுதியளிக்கப்படுகிறது.

மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்குச் சேதங்கள் தடுக்கப் படுகின்றன.



தூர்வாரும் பணிக்குப் பின் கால்வாயின் தோற்றம்




# அரசுத் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவீர் !

## மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் உரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் - காவல் துறை அதிகாரிகளின் இரண்டுநாள் மாநாடு 5.6.98 அன்று தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தொடங்கியது.

1996 ஆம் ஆண்டில் அமைந்த இந்த ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து - இப்போது 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கும் வேளையில் - கடந்த காலச் செயல்பாடுகள் குறித்து ஆராயவும், அடுத்து நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்துத் திட்டமிடவும் இங்கே கூடியுள்ளோம்.

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 27.3.98 அன்று சட்டப்பேரவையில் வைக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அந்தத் திட்டங்களுக்கெல்லாம் உரிய அரசாணைகள் 15.6.98க்குள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு, அதற்கேற்ப உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு அவை அன்றாடம் அறிவிக்கப்பட்டும் வருகின்றன.

### சட்டம் - ஒழுங்கு

அரசு வகுக்கும் திட்டங்களின் பயன்கள், எதிர்பார்ப்புக்கு ஏற்ப மக்களைச் சென்று சேர வேண்டும். அதற்குரிய வகையில் சட்டம் ஒழுங்கு நிலை மாநிலத்தில் முழுமையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மிக முக்கியமானதாகக் கருதுகிறது. மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு நிலை பராமரிக்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சியரும் காவல்துறை அதிகாரிகளும் இணைந்து செயலாற்றிட வேண்டும்.

புலனாய்வுத் துறையின் மூலமும், வருவாய்த் துறையினர் மூலமும் வரும் தகவல்களை மாவட்ட ஆட்சியரும் காவல் துறை அதிகாரிகளும், உடனுக்குடன் பரிமாறிக் கொள்வதுடன், அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து - உறுதியுடன் செயல்படுத்திடல் வேண்டும்.

சமூகத்தில் ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்கு - அரசும் நிர்வாகமுமே பழிகளைச் சுமக்க நேரும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இந்த உண்மையினை உணர்ந்து, நாட்டின் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவதில் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பினை ஏற்றிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அதிகாரிகளும் தங்களுடைய கடமைகளைப் பொறுப்புடன் ஆற்றுவதன் மூலம் இந்த அரசுக்குப் பெருமை சேர்ப்பதுடன் தங்களுடைய புகழையும் மதிப்பையும் உயர்த்திக்கொள்ளுதல் வேண்டும்.

கடந்த பல மாதங்களாகத் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை சீரியமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டில் இதுவரை ஐந்து இடங்களில் துப்பாகிச் சூடுகள் நிகழ்ந்துள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டைப் பார்க்கும் போது இது மிகமிகக் குறைவானதாகும். எனினும் இந்த எண்ணிக்கையும் குறையுமேயானால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

10.9.97 அன்று நடைபெற்ற காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டத்தில் காவலில் இருக்கும்போது கைதிகள் மரணமடைவதைத் தடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொண்டேன். குற்றங்கள் ஒன்றிரண்டு கண்டுபிடிக்கப்படா விட்டாலும் பரவாயில்லை; கைதிகளைத் துன்புறுத்தும் பழக்கத்தைக் காவல்துறை கைவிட வேண்டுமென நான் அப்பொழுது குறிப்பிட்டேன். அந்த என் வேண்டுகோளை மனதில் கொண்டுக் காவல்துறை சீரிய முறையில் செயல்பட்டுள்ளது.

## காவல் கைதிகள் நிலை

கடந்த ஆறு மாதங்களில் தமிழகத்தில் உள்ள காவல்நிலையங்களில் காவல் கைதி மரண நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை என்ற செய்தியை அறிந்து மிகுந்த மனநிறைவடைகிறேன். இதே நிலை தொடர்வதற்குத் துணை நிற்க வேண்டுமென்று காவல்துறை நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1997 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பின், தென்மாவட்டங்களில் வகுப்புக் கலவரங்கள் எதுவும் நிகழவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும் திறம்படச் செயல்பட்டதன் காரணமாகவே இந்த நிலையினை நம்மால் எய்திட முடிந்துள்ளது.









கோவை குண்டு வெடிப்பிற்குப்பின், காவல்துறை அங்கு தமது பணிகளைத் திறம்பட நிறைவேற்றியதன் மூலம் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## தீவிரவாதத்தை ஒடுக்குவோம்

தீவிரவாதத்திற்கு இந்த அரசு சிறிதும் இடம் தராது. எந்தப் பக்கமிருந்து தீவிரவாதம் தலைகாட்டினாலும் அதனை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதில் உறுதி பூண்டுள்ளோம்.

அதன் காரணமாகத்தான் தீவிரவாதத் தடுப்புச் சட்டம் ஒன்றை அண்மையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றியுள்ளோம். தீவிரவாதிகள் எந்த மதத்தினராயினும், அவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்று காவல்துறை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஏதும் அறியாத அப்பாவி மக்கள் எந்த விதத்திலும் பாதிப்புக்கு ஆளாகக்கூடாது என்பதிலும் காவல்துறையினர் கண்ணும் கருத்துமாய்ச் செயலாற்றிடவேண்டும்.

ஒரு குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிவிடுவதை விட, ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது நீதியின் அடிப்படைத் தத்துவமாகும்.

ஊழலற்ற, ஒளிவுமறைவு இல்லாத திறமையான நிர்வாகத்தை (Administration - free from corruption, transparent and efficient) வழங்கிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் தலையாய குறிக்கோளாகும்.

இந்த இரண்டாண்டு காலத்தில் இக்குறிக்கோளை உறுதி செய்து நிறைவேற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. என்றாலும் ஒரு சில அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், இந்த அரசின் மேல்மட்டத்தில் ஊழல் இல்லை; கீழ் மட்டத்தில் ஊழல் முழுமையாக அகற்றப்படவில்லை என்று சொல்லிவருகின்றன. இந்த விமர்சனத்தில் துளியேனும் உண்மையில்லை என்று ஒதுக்கி விடுவதற்கில்லை.

கீழ் மட்டத்தில் (at the cutting edge level) தவறுகள் நடக்குமாயின் அது மாவட்ட ஆட்சியாளர்களின், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் பணித்திறனுக்கு விடப்பட்ட சவாலாகக் கருதி, அதனைத் தடுத்து நிறுத்திட வேண்டும்.

நான் எல்லா அதிகாரிகளையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் செய்கின்றனர் என்ற கருத்து எனது கவனத்திற்கு வந்துள்ளது. உரிய முடிவைத் தக்க நேரத்தில் மேற்கொள்ளத் தவறுவது, பல்வேறு தீய விளைவுகளுக்கு வழி வகுத்துவிடும். எனவே இந்த மெத்தனப் போக்கு உடனடியாகக் கைவிடப்பட்டாக வேண்டும்.

## ஊழலைவிடக் கொடுமையானது

அதைப்போலவே எங்கே தவறு நடந்துவிடுமோ என அஞ்சி, எதையும் செய்யாமல் காலத்தைக் கழிப்பதும் கொடுமையானதாகும். ஊழலைவிடக் கொடுமையானது, கடுமையானது - தனக்கு விதிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிக்க முயற்சி செய்வதாகும் (Escaping from responsibilities).

எனவே, ஒரு பொறுப்பில் ஒரு அலுவலர் எவ்வளவு காலம் இருந்தார் என்பது பெருமை அல்ல; எப்படிப் பணி ஆற்றினார், எவ்விதம் தன் பொறுப்புக்களை நிறைவேற்றினார் என்பதுதான் பெருமை தருவதாகும். எனவே இனி பணித்திறன் மதிப்பீடு (Performance Assessment) இந்தத் திசையில்தான் அமையும்.

## வளர்ச்சித் திட்டங்கள்

இந்த அரசு 1996ஆம் ஆண்டில் பொறுப்பேற்றது முதல் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் தலையாய கவனம் செலுத்திவருகிறது.

## குடிநீர்த் திட்டங்கள்

தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து 1996-97 ஆம் ஆண்டில் 154 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதியும், 1997-98 ஆம் ஆண்டில் 4,500 குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு குறைந்த அளவு 40 லிட்டர் வீதம் குடிநீர் கிடைக்கும் வகையில் 250 கோடி ரூபாய் செலவில் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## குடியிருப்புகளுக்குக் குடிநீர்

1998-99 ஆம் ஆண்டில் அந்த நிதி ஒதுக்கீடு 30 கோடியாக உயர்த்தப்பட்டு 5,398 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது.

கிராமப்புற பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு முன்னுரிமை செலுத்துவதுடன் நகர்ப்புறப் பகுதி வாழ் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதில் கடந்த இரண்டாண்டுகளாக மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

மாவட்ட ஆட்சியர்கள் குடிநீர்த் தட்டுப்பாடு காணப்படும் இடங்களை முன்னதாக அறிந்து அப்பகுதிகளின் குடிநீர்த் தேவைகளை உடனடியாகவும், விரைந்தும் நிறைவு செய்திடக்கூடிய வகையில் செயலாற்றிட வேண்டும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் வாரியம், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அலுவலர்களுடன் இருவாரங்களுக்கு ஒருமுறை கலந்தாய்வு செய்து, குடிநீர்த் திட்டச் செயல்பாட்டில் இடையூறுகள் இருப்பின் அவற்றை உடனடியாகக் களைந்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.



## ஆதிதிராவிட இனமக்களுக்குத் தொகுப்பு வீடுகள்

தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் 13.5.96 அன்று நிலுவையாக இருந்த பணிகளின் கணக்கெடுப்பின் படி, 83,487 தொகுப்பு வீடுகள் கட்டப்படாமல் இருந்தன.

தொகுப்பு வீடுகள் கட்டுவதில் இந்த அரசு தந்த ஊக்கம் காரணமாக, இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 1,66,420 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேலும் 44,899 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தையும் 30.9.98க்குள் கட்டி முடித்திட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அனைத்து முயற்சிகளையும் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

இவற்றை உடனடியாகக் குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்கவும், அத்துடன் இந்த ஆண்டில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 60,000 தொகுப்பு வீடுகளையும் உரிய காலத்தில் கட்டி முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கிராமங்கள், அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு கடந்த ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்னும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

அத்திட்டத்தின்படி கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய 212 சட்டப்பேரவை தொகுதிகளில் - ஒரு தொகுதிக்கு ஆண்டுக்கு ஒரு ஊராட்சி மன்றம் என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஆண்டில் 212 ஊராட்சிகளில் 51.86 கோடி ரூபாய் செலவில் 36,289 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 18,970 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த கன மழையும், 98 ஜனவரியில் பாராளுமன்றத் தேர்தலையொட்டி தேர்தல் ஆணையம் விதித்த தற்காலிகத் தடைகளும் பணிகளை முடிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கான முக்கியக் காரணங்கள் என்றாலும் இவற்றை விரைந்து முடித்திட மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களை விரைவில் தேர்வு செய்க

நடப்பு ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த ஆண்டிற்குரிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களை விரைவில் தேர்வு செய்து உடனடியாகத் திட்டப்பணிகளைத் தொடங்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் அனைத்தையும் முடிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்கள் முனைந்து செயலாற்றிட வேண்டும்.

## நமக்கு நாமே திட்டம்

இத்திட்டத்தில் கடந்த ஆண்டில் 2,698 கிராமங்களில் 5,311 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைகளில் 2,336 பணிகள் 100 சதவீதம் மக்கள் பங்குடன் செயல்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 2,975 பணிகள் மக்கள் பங்குடன் அரசு நிதியையும் சேர்த்து செயல்படுத்தப்பட்டன.

மொத்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட 5,311 பணிகளில் இதுவரை 3,897 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு 23.90 கோடி ரூபாயாகும். இதில் 8.28 கோடி ரூபாய் மக்கள் பங்காகப் பெறப்பட்டுள்ளது.

இந்த நமக்கு நாமே திட்டத்திற்கு இந்த ஆண்டின் நிதி ஒதுக்கீடாக அரசு 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இதை ஒரு சாதாரணத் திட்டமாகக் கருதாமல் சமூக, பொருளாதார மாற்றத்தைக் கிராம மக்களிடையே ஏற்படுத்தும் ஒரு கருவியாக மதித்து **(Instrument for Socio Economic Change)** மக்களின் நேரடி ஈடுபாட்டுடன் இத்திட்டத்தை செம்மையாகச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முயற்சி செய்யவேண்டும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்த மற்றொரு புதிய திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமாகும்.

கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு 58.75 கோடி ரூபாய் நிதி அளிக்கப்பட்டது.

மொத்தம் 4901 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 2,076 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுக்கான பணிகளை இந்த நிதியாண்டின் முடிவுக்குள் முழுவதுமாக நிறைவேற்றி முடிக்கக்கூடிய வகையில் கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த கால அட்டவணைப்படி, பணிகள் அனைத்தும் முடிவடைதற்கு உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்தி நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்,கடந்த ஆண்டுகளுக்குரிய ஒதுக்கீடுகள் மூலம், தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களிலும் தனிக்கவனம் செலுத்தி, அவை அனைத்தையும் 30.9.98க்குள் நிறைவேற்றி முடித்திட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

## அனைத்துக் கிராமங்களிலும் மனுநீதித் திட்டம்

மனுநீதித் திட்டம் பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டம் மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துக் கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்ற அளவில் செயல்படுத்தப்படுகிறது.

மூன்று ஆண்டு காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் இத்திட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருக்குமானால், அருகருகே உள்ள கிராமங்களைச் சேர்த்து இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், எல்லாக் கிராமங்களிலும் 3 ஆண்டு காலச் சுழற்சியில் மனுநீதித் திட்டம் செயல்படுத்தப்படக்கூடிய சூழ்நிலையை உறுதிசெய்ய வேண்டும் என, 14.10.97 அன்று வருவாய்த் துறையின் மூலம் அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ள விவரத்தை இங்கு நினைவுபடுத்துவதுடன், இந்த மனுநீதித் திட்டம் தவறாமல் நடத்தப்பட வேண்டும் என்றும், மனுநீதி நாள் நடந்த ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர் வழங்கிய மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் உறுதி செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கப்படக்கூடிய கோரிக்கை அல்ல எனப் பலமுறை பதிலளித்தும், திரும்பத் திரும்ப வைக்கப்படும் கோரிக்கைகள் கணிசமான அளவுக்கு உள்ளன என்பதை நான் அறிவேன். எனவே இதுபோன்ற கோரிக்கைகளின் மீது, துணை ஆட்சியர் நிலைக்குக் குறைவில்லாத அலுவலர் ஒருவர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு உண்மை நிலையைக் கண்டறிவது அவசியம். பொதுமக்களின் எந்தக் கோரிக்கையையும் அலட்சியப்படுத்தப்படுதல் கூடாது. கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்திடவும், கூடாது. மாவட்ட ஆட்சியரின் பணித்திறனில், பொதுமக்களின் கோரிக்கைகளில் எத்தனைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்ற மதிப்பீடும் அடங்கும்.

**குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிவிடுவதை விட, ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதே நீதியின் அடிப்படை!**

## குறைகளோ குற்றச்சாட்டுகளோ இன்றி குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும்

பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைக்கும் நோக்கத்துடனும் குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டு தற்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துவருகிறது. இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கும்பணி தொடங்கப்பட்டு தற்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துவருகிறது.

இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணிகளில் குழப்பங்களும் குற்றச்சாட்டுகளும் இல்லாத வகையில் - நியாயமான முறையில் - தகுதிவாய்ந்த மக்கள் அத்துணைப் பேருக்கும், குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைகள் வழங்குவதில் உள்ள பிரச்சினைகளைப் பல்வேறு பத்திரிகைகள் வரிசைப்படுத்தி உள்ளன. அவற்றில் நியாயமானவைகளையும், கவனத்தில் கொள்ள வேண்டியவைகளையும் கருத்தில் கொண்டு, குறைகளோ குற்றச்சாட்டுகளோ எதுவும் இல்லாமல், குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும்.

நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் கிடைப்பது இல்லை என்றும், கடையில் தேவையான பொருள்கள் இருப்பு இல்லை என்றும், சில நேரங்களில் எடை குறைவாகவும், தரமற்ற அரிசி வழங்கப்படுவதாகவும், சில கூட்டுறவுச் சங்கங்களில் போதிய பண வசதியில்லாததால் உரிய நேரத்தில் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்றும், சில நேரங்களில் கடைகள் மூடியிருப்பதாகவும் புகார்கள் உள்ளன.

பொதுமக்களுக்கு வழங்கத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை அனைத்துப் பொருள்களும் சிவில் சப்ளைஸ் குடோனில் போதுமான ஒதுக்கீடு உள்ளது.

மண்ணெண்ணெயும் போதுமான ஒதுக்கீடு உள்ளது.

பொதுவிநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் சீராக நடைபெற வேண்டும் என்பதிலே அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் எல்லா நாட்களிலும் நியாய விலைக் கடைகளில் இருக்கவேண்டும் என்பது முக்கியமான கட்டளையாகும்.

இந்த ஆணையை நிறைவேற்றுவதில் எந்த ஒரு அதிகாரியும் எந்த ஒரு பகுதியிலும் சுணக்கம் காட்டக்கூடாது.

## எந்தப் புகாரும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்

எந்தப் பொருளாவது எடை குறைவாகக் கொடுக்கப்பட்டால், புகார் செய்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் புகாரும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

அதே போன்று, அறிவிக்கப்பட்ட விடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் கட்டாயமாகக் கடைகள் திறக்கப்பட்டிருக்க வேண்டும். இதிலே எந்தவிதமான தொய்வும் இருக்கக் கூடாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தை சிறப்பாக, எவ்வித குறைகளுக்கும், குற்றச் சாட்டுகளுக்கும், விமர்சனத்திற்கும் கிஞ்சிற்றும் இடமின்றிச் செயல்படுத்த வேண்டும்.

சிவில் சப்ளைஸ் குடோனிலிருந்து நியாயவிலைக் கடைக்கு பொருள்கள் சென்று சேரும் வரை எந்த இடத்திலும் எடைக் குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

இது சரிவரச் செயல்படுத்தப்பட்டால் மற்ற குறைபாடுகள் தானாகவே கட்டுபடுத்தப்படும் என்று கருதுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது விநியோக முறைத் திட்டச் செயல்பாட்டினை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கடைவாரியாகத் தீவிர ஆய்வு செய்து, பொது விநியோக முறைத்திட்டச் செயல்பாட்டில் எந்தக் குறைபாடும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## சிறுசேமிப்பு இலக்கினை எய்துக

சிறுசேமிப்புத் திட்டம் மாநில அரசின் நிதி திரட்டும் முயற்சிகளின் முக்கியக் கூறாக விளங்குகிறது.

இத்திட்டத்தின் நிகர வசூலில் 75 விழுக்காடு தொகை மத்திய அரசினால் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் 1,400 கோடி ரூபாய் வசூல் இல்லரத இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் சமூக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவைப்படும் பெருமளவிலான நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு, இலக்கினை எய்தும் முயற்சியில் மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாக ஈடுபட்டிட வேண்டுமென்று நான் வலியுறுத்திட விரும்புகிறேன்.

## சமத்துவபுரப் பணிகள்

இந்திய சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி, தமிழக அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகின்ற சமத்துவபுரம் திட்டம் குறித்து அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட 50 சமத்துவபுரங்களையும் 15.8.98-க்குள் அமைத்து முடித்திடுமாறு அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதனை நினைவுபடுத்துகிறேன். இப்பணியில் எந்தவிதச் சுணக்கமுமின்றி உடனடியாக நிறைவேற்றி, தமிழக மக்களிடையே சாதி, மத உணர்வுகள் அகன்று சமத்துவ நெறிகள் தழைக்கக்கூடிய சூழ்நிலைகள் பெருகி வளர்ந்திட உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவு பெற - பகுத்தறிவு பெருக கல்வி கேள்வி மிகவும் முக்கியம்.
>
> - கலைஞர்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் நடைபெற இருக்கும் வளர்ச்சிப் பணிகள், சமூக நலப் பணிகள் பற்றிய விவரங்களைத் துறைவாரியாகத் தொகுத்து, பத்திரிகை யாளர்களுக்கு விவரங்கள் தரலாம்.

மாதம் ஒரு முறையாவது பத்திரிகையாளர் களின் கூட்டத்தைக் கூட்டி மாவட்டத்தில் நடைபெறும் முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுடைய முன்னேற்றம் குறித்து, மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலே விவரங்கள் தரலாம். அதேபோல மாதந்தோறும் ஆற்றிய சமூக நலப்பணிகள் பற்றிய விவரங்களும் பத்திரிகையாளர்களுக்குத் தரலாம்.

இதுமட்டும் அல்லாமல் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையிலிருந்து வரக்கூடிய விளம்பரச் சுவரொட்டிகள் மற்றும் அறிவிப்புகள், ஏடுகள் சரியான முறையில் மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று அடைகின்றனவா என்பதையும் பார்க்கவேண்டும்.

## சத்துணவுத் திட்டத்தின் முழுப் பொறுப்பு

சத்துணவுத்திட்டத்தின் முழுப்பொறுப்பும் மாவட்ட ஆட்சியரையே சாரும். 1989-ல் மாதம் இருமுறை முட்டை வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு, இப்பொழுது 1.6.98 முதல் வாரம் ஒருமுறை முட்டை வழங்கும் திட்டம் செயல்முறைக்கு வந்துள்ளது. முட்டை வழங்கும் திட்டம் முறையாக - நிறைவாகச் செயல்படுத்தப்பட மாவட்ட ஆட்சியரின் தீவிரமான கண்காணிப்பு மிகவும் அவசியம்.

மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலை அதிகாரிகள் ஒரு இடத்திற்கு முகாம் செல்லும்போது, நேரே அந்த இடத்திற்குச் சென்று பணி முடித்து மீண்டும் தலைமை இடத்திற்குத் திரும்புவது நல்ல பயனைத் தராது. முகாம் செல்லும்போதும், திரும்பும்போதும் எங்கெல்லாம் பணிகள் நடைபெறுகின்றனவோ, எங்கெல்லாம் நியாய விலைக்கடை, சத்துணவுக் கூடம் உள்ளதோ அங்கெல்லாம் இறங்கி ஆய்வு செய்யவேண்டும். ஆய்வு செய்யும்போது பயனாளிகளை விசாரிக்க வேண்டும். பொதுமக்களிடம் விசாரிக்க வேண்டும். விசாரிக்கும் பொழுது பல விவரங்கள் தெரியவரும். அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு குறைகளைக் களைய வேண்டும். அப்படிச் செய்தால்தான், மக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் மீது நம்பிக்கை வளரும். குறிப்பாக ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளையும், பள்ளிகளையும், உணவு விடுதிகளையும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் தொடர்ந்து ஆய்வுசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அங்கே நிலவும் அடிப்படை வசதிகள் பற்றிய நிலை தெரியவரும்; அதன்மீது உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வசதியாக இருக்கும்.

இந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அதிகாரிகளும் இந்த அரசு செயல்படுத்தும் திட்டங்கள் முழு அளவில் வெற்றிகளை ஈட்டுவதற்குத் தக்க வகையிலும் - நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை முழுமையாகப் பராமரிக்கப்படுவதற்கு உகந்த வகையிலும், கருத்துக்களை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்.



## மன்னார்குடி திருக்கோயில்

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி, ஒப்சாள மன்னர்களின் தலைநகராக இருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். தட்சிண துவாரகை, செண்பகாரண்யம் ஆகிய புராணப்பெயர்களும் இவ்வூருக்கு உண்டு.

மன்னார்குடியில் உள்ள அருள்மிகு இராசகோபாலசுவாமி திருக்கோயிலும், வடுவூரில் உள்ள அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயமும் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

இராசகோபாலசுவாமி கோயிலில் அக்காலத்தில் சமணர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன; இப்போது வைணவக் கோயிலாகத் திகழும் இதில் 16 கோபுரங்கள், 7 பிரகாரங்கள், 17 மீட்டர் உயரம் உள்ள ஒற்றைக்கல்லால் ஆன கருங்கல் தூண், அக்காலத்துப் பாவை விளக்குகள் ஆகியவை உள்ளன.

இந்தக் கோயிலில் இருக்கும் கருட வாகனம், ஆங்கிலேய அதிகாரி ஒருவரால் செய்து கொடுக்கப் பட்டதெனச் சொல்லப் படுகிறது.

1970களில். இவ்வூரைச் சேர்ந்த மன்னை ப.நாராயணசாமி அவர்கள் தமிழ்நாடு அரசு அமைச்சரவையில் அமைச்சராக இருந்த காலத்தில். அவரால் மன்னார்குடி பெற்ற பலன்கள் ஏராளம்!

## திருவாரூர் மாவட்டத்தில்...

★ நெட்டிவேலைப்பாட்டில், கோயில் போன்ற உருவங்கள் அமைப்பதில் திருத்துறைப்பூண்டி வட்டாரம் சிறந்து விளங்குகிறது; நவராத்திரி கொலுப் பொம்மைகளும் இப்பகுதியில் அதிகம் அழகுடன் செய்யப்படுகின்றன.

★ கைத்தறித் தொழிலும் ஓரளவுக்குத் திருவாரூர் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகிறது; நன்னிலம் வட்டாரத்தில் பட்டு லுங்கி தயாரிக்கப்படுகிறது!

★ திருவாரூர் மாவட்டம் - சிறந்த பல நாதசுர மேதைகளும், தவில் வித்வான்களும், இசை மேதைகளும், நடனக் கலைவாணர்களும் இன்னபிற கலைவல்லாரும் பிறந்து பெருமைபெற்ற மாவட்டமாகும்.

★ திருவாரூர் மாவட்டத்தில் உள்ள எட்டுக்குடி, எண்கண் ஆகிய ஊர்களில் அமைந்திருக்கும் அருள்மிகு முருகன் திருக் கோயில்கள் புகழ்பெற்றவை.

★ விருந்து உபசரிப்பில் திருவாரூர் மாவட்ட மக்கள் சிறந்து விளங்குகின்றனர். திருமண வீட்டிற்கு வருவோர்க்கு மட்டுமல்ல; சாவு வீட்டிற்கு வருவோர் முன்னும் வெற்றிலைப்பாக்குத் தட்டு வைக்கிறார்கள். காபி- வெற்றிலைப் பாக்குப் பழக்கம் பெரும்பாலானோரிடம் உள்ளது.

★ நாடகக் கலையின் முன்னோடியான சம்பந்த முதலியார் பிறந்த ‘பம்மல்’, புகழ்பெற்ற எழுத்தாளர் துரைசாமி ஐயங்கார் ஆகியோர் பிறந்த ‘வடுவூர்’ ஆகியவை இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள் தான்.

★ ★ ★

# கல்வி சிறக்கும் திருவாரூர்

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்றார், உலகப் பொதுமறையாம் குறள் தந்த திருவள்ளுவர்.

இந்தவகையில், அந்த மூன்றின் நிலைக்களனாக விளங்குவதனாலே தான் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக நாடாளும் பெரும் பொறுப்பினை ஏற்றுச் சிறப்படைந்து வருகிறார்.

சிலபேர் - 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' காக்கும் பொறுப்பிலிருக்கின்ற கலைஞருக்குள்ள துணிவும் தூங்கிடா இயல்பும் எமக்குத் தெரியும்; ஆனால்...ஒன்று "அவர் ஒரு பட்டதாரியல்லவே" என்று சொல்லாமலே சொல்லித் தலையைச் சொறிந்திடக் கூடும்.

பூமிதான இயக்கத்தாலே புவிமெச்ச வாழ்ந்த வினோபாபாவேயை நமக்குத் தெரியும். அவர் படித்தார்; பட்டம் பெற்றார். ஆனால் முடிவாக என்ன செய்தார் தெரியுமோ?

'என்னுடைய அறிவுத் தகுதியினை நிர்ணயிக்கும் தகுதி இந்தத் தாள்களுக்கோ, இன்னொருவருக்கோ இல்லை!' என்று கூறி, அவ்வளவு சான்றிதழ்களையும் கிழித்தெறிந்து விட்டார்.

**உலகானுபவம்**

ஆகவே, கல்விநலம் என்பது வெறும் படிப்பினாலே மட்டும் அமைவதில்லை; உலகானுபவத்தாலும் அமையும்.

'பள்ளிக்கூடம் இல்லாத ஊருக்குப்
பயணம் போறேண்டா - அங்கே
படிக்க வேண்டியது நெறயா இருக்கு
படிச்சிட்டு வாறேண்டா'

- என்று அந்தக் காலத் திரைப்படப் பாடல் ஒன்று உணர்த்துவது இதைத்தான்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் தொடவேண்டிய கடமை நமக்குண்டு; பள்ளிப் படிப்போ பகட்டுப் பட்டமோ




கலைஞர் அவர்கள் திருக்குவளையில் தொடக்கக் கல்வி பயின்ற பள்ளி



**கலைஞர் அவர்கள் திருவாரூரில் 5-ஆம் வகுப்பில் சேர்ந்த பாடசாலை**

இன்றி, எல்லோராலும் அனுபவப் படிப்பை அத்தனை எளிதிலே பெற்றுவிட முடியாது!

கலைஞரைப் போலச் சிலரால்தான் - மிகமிகச் சிலரால்தான் அத்தகைய 'அற்புதங்களைச்' செய்துகாட்டிட இயலும் - இயல்கிறது.

சின்னவயதில் கல்விமேல் அவருக்கிருந்த ஆர்வம் பெரிது; இதனாலேதான் அவர்கள் குடும்பமே திருக்குவளை கிராமத்திலே இருந்து திருவாரூருக்குக் குடிபெயர்ந்த சம்பவமும் நிகழ்ந்தது.

### படிப்பதற்குப் போராட்டம்

1936ஆம் ஆண்டு, ஆரூரில், தியாகராசர் ஆலயத்தினருகே இருந்த கழக உயர்நிலைப்பள்ளியில், 5ஆம் வகுப்பில் சேர்ப்பதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அந்தப் பாடசாலையில் தலைமையாசிரியராக அப்போது இருந்த கஸ்தூரி ஐயங்கார் என்பாரோ, ஏதேதோ காரணங்களைக் காட்டி அவ்வகுப்பில், சிறுவனாயிருந்த கலைஞரைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்.

அவரிடம் பேசித் தோற்றார்கள் இவருடைய பெற்றோர்.

கலைஞரோ விடுவதாயில்லை; ''ஐந்தாம் வகுப்பில் இங்கே என்னைச் சேர்த்துக் கொள்ளாவிட்டால், எதிரே உள்ள கமலாலயம் குளத்தில் குதித்து உயிர்துறப்பேன்'' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட்டு அங்கேயே உட்கார்ந்து போராடத் தொடங்கிவிட்டார்!

அவருடைய பிடிவாத குணம் கண்டு அதிர்ந்துபோன தலைமையாசிரியரே முடிவில் பின்வாங்க நேர்ந்தது; ஐந்தாம் வகுப்பிலே அமோகமாக அன்றைக்கே சேர்த்துக் கொள்ளப்பட்டார் கலைஞர்!

அனேகமாக அவர் தொடங்கி வெற்றி கண்ட முதல் போராட்டமாக இந்தச் சம்பவம்தான் இருக்கக்கூடும்!

பிறகு - அவரோடு சேர்ந்து தாய்மொழிப்பற்றும், தணியாத தமிழினப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் வளர்ந்திடலாயின.

### ஏடும் பெருமையும்

இதன் விளைவாகத்தான் - 'தமிழ் மாணவர் மன்றம்' அவரால் தொடங்கப்பெற்றது; 'மாணவர் நேசன்', 'முரசொலி' ஆகிய ஏடுகள் முகிழ்த்தன.

எனினும் - படிப்பிலும், ஒழுக்கத்திலும் கலைஞர் நெறிதவறாமலே இருந்து வந்தார். 1940 முதல் 1945 வரை அந்தத் திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்த பெரும்புலவர் சி.முத்துகிருட்டின நாட்டார் அவர்களே இதுபற்றிப் பிற்காலத்தில் எழுதிய கவிதை இது:

---

திருவாரூர் மாவட்டம் :

**கல்வி நிலையங்கள்**

- *திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி - திருவாரூர்.*
- *அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியற் கல்லூரி - கோவில் வெண்ணி, நீடாமங்கலம் வட்டம்.*
- *மன்னார்குடி ராஜகோபாலசாமி அரசு கலைக்கல்லூரி - மன்னார்குடி.*
- *செங்கமலத்தாயார்மகளிர்கல்லூரி - மன்னார்குடி*



புலிவலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் கட்டப்படும் பாடசாலைக் கூடுதல் கட்டடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிடல்.

"பேரும் புகழும் பெரிதும் பெற்ற
திருவா ரூரெனும் செழும்பதி யதனில்
உயர்ந்து விளங்கிய உயர்நிலைப் பள்ளியில்
ஐம்பதாம் ஆண்டு ஆதற்கு முன்னர்
தமிழா சிரியனாய்த் தமிழ்ப்பணி புரிந்தேன்!;

அன்று நிலவிய ஒன்பதாம் வகுப்பில்
**கலைஞர் கருணாநிதி** கற்றிடல் ஆனார்
என்பால் பெரிதும் அன்புகொண்டுள்ளார்
அப்போது பயின்ற மாணவர் தம்முள்
**கருணா நிதியே** என் கருத்தினுக் கேற்ற
மாணவ ராக மதிக்கப் பெற்றார்!

சீரிளமைப் பருவத்தே செந்தமிழ் மொழியில்
பெரிதும் பற்றொடு பேசவும் எழுதவும்
வருதல் தன்னையே வழக்கமாகக் கொண்டுளார்
அதன்பய னாக அந்த வகுப்பிலே
"மாணவர் நேசன்" என்னும் பெயரோடு
ஏடு ஒன்று முதலில் எழுந்தது
அந்தநல் ஏடு அடுத்துச் சின்னாளில்
துண்டுத் தாளாய்த் தோன்றி வளர்ந்தது!—

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய தமிழகம் வாழ்க குறள்நெறி
வாழிய கருணா நிதியும் வாழகவே!"

## இப்போதுள்ள கல்விக்கூடங்கள்

இப்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மொத்த மேனிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 42 ஆகும். இதில் அரசினர் மேனிலைப் பள்ளிகள் 24; அரசின் உதவியோடு நடத்தப்படும் மேநிலைப்பள்ளிகள் 13; ஆதி திராவிடர் நலத்திட்ட மேநிலைப்பள்ளி 1; மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 4 ஆகும்.

உயர்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 91; இதில் அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் 56; அரசின் உதவியோடு நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் 35 ஆகும்.

நடுநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 118; ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் 76; அரசின் உதவியோடு நடத்தப்படும் நடுநிலைப் பள்ளிகள் 35; நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் 6; ஆதிதிராவிடர் நடு நிலைப்பள்ளி 1.

இம்மாவட்டத்தில் இருக்கின்ற ஆரம்பப்பள்ளிகள் 683; ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் 578; அரசு உதவியோடு நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகள் 70; நகராட்சி ஆரம்பப் பள்ளிகள் 9; ஆதிதிராவிடர் நலத் திட்ட நடுநிலைப்பள்ளிகள் 26.

இவ்வாறாக, புதிய மாவட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம் இப்போது கல்வி சிறக்கும் மாவட்டமாகக் களைகட்டி வருகிறது.

திருவாரூர் அரசினர் கல்லூரி மாணவர் இல்லம்



தொழில் கல்லூரி (Professional College) ஒன்றும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - திருவாரூரில் ஒன்றும், மன்னார்குடியில் ஒன்றுமாக இரண்டும், தொழில் பயிற்சி நிலையங்கள் (ITI) இரண்டும் இருக்கின்றன.

★ ★ ★

திருவாரூர் மாவட்டம் :

# தமிழர் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம்

நீதிக்கட்சியின் வரலாறு, தனியொரு நூலாகவே தொகுக்கப்படும் அளவிற்கு மிக நீண்டதாகும்.

தஞ்சை மாவட்டத்தில் அக்கட்சியின் ஆணிவேராகத் திகழ்ந்த தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் வரலாறு பற்றி உணர்த்துவதே இந்தக் கட்டுரை.

பன்னீர்செல்வத்தின் முன்னோர் 1811ஆம் ஆண்டு வாக்கில்தான் திருவாரூரை அடுத்த செட்டியாபுரத்தில் நிலம் வாங்கிக் காலூன்றினார்கள். மிகவும் செல்வச் செழிப்புள்ள சுமார் 200 ஏக்கர் நிலம் உடைய கத்தோலிக்க கிறித்துவக் குடும்பம் இவர்கள் குடும்பம். அதில் அன்பும் பண்பும் கொண்டு செல்வச் செறுக்கின்றி அடுத்தவர் மெச்ச வாழ்ந்த தாமரைச் செல்வம், இரத்தினம் அம்மையார் ஆகியோரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் நாம் மறக்கவியலாப் புகழ்கொண்ட பன்னீர் செல்வம். அவர் பிறந்தது 1.6.1888-ல்.



மூத்தவர் செபாஸ்டின் திருச்செல்வம் இரண்டுபேரும் கற்பதில் ஆர்வத்தோடிருந்தனர். அப்போதெல்லாம் செட்டியாபுரம் பகுதியில் கல்வி வசதி பெற வழியில்லை; ஆகவே, தஞ்சாவூரில் வழக்கறிஞராக இருந்த தம் தமையனார் வீட்டில் தங்கிப் படிக்க வகைசெய்தார் தந்தையார்.

### காதல் திருமணம்

தஞ்சைப் படிப்பு முடித்தபின் திருச்சிராப்பள்ளியில் உள்ள புனித வளனார் பள்ளியில் பன்னீர்செல்வத்தின் படிப்புத் தொடர்ந்தது. கல்லூரியில் இடைநிலைப் படிப்பு படித்துக்கொண்டிருக்கும் போதே அவருக்கும் பெரும்பண்ணையூரைச் சேர்ந்த முத்துசாமி என்பாரின் மகள் பொன்னுப்பாப்பாளுக்கும் திருமணம் நடந்தேறியது. இது காதல் திருமணம்.

மருத்துவக் கல்விமேல் ஆர்வத்தோடிருந்த திருச்செல்வம், அயர்லாந்திற்குப் போனார்; பன்னீர்செல்வத்திற்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தது.

இருவருமே இவ்வாறு இங்கிலாந்தில்தான் படித்தனர். எனினும், வெவ்வேறு இடங்களிலேயே தங்கிப் படித்தார்கள். பின்னர் 'கிரேய்ஸ்-இன்' (Grays Inn)னில் சட்டம் படிக்கலானார் பன்னீர் செல்வம். அந்நாட்டு நாகரிகப்படி உண்ணவும் உடுத்தவும் பேசவும் இவருக்குப் பழக்கமேற்பட்டது. சட்டப்படிப்பிற்குத் தேவையான வாதத்திறமை மிகவும் உடையவரானார்; எனினும் கல்வி மீதான கவனம் குறைந்திடப் பெறவில்லை.

இதற்கிடையே தமிழகத்தில் அவர் மனைவிக்கொரு பெண் குழந்தை பிறந்தது; மேரி என்று அக்குழந்தைக்குப் பெயரிடப்பட்டது. இச்செய்தி செல்வத்திற்குப் பெரும் மகிழ்வளித்தது.

26.1.1912-ல் இலண்டனில் சட்டக் கல்வியை நிறைவுற முடித்துப் பட்டம் பெற்றார் பன்னீர்செல்வம். இதற்கடுத்த வாரமே அதற்கான பட்டியலில் கையொப்பமிட்டு, முழுத்தகுதியும் பெற்றார். பிறகு அதே ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழகம் திரும்பி 23-ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் பதிவு செய்துகொண்டார்.

20.11.1916-ல் 'நீதிக்கட்சி' தொடங்கப்பட்டது. முகமதியர், கிறித்தவர், பிராமணரல்லாத மற்ற சமயத்தாரிடையே சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதே இக்கட்சியின் முக்கியக் கொள்கை. ஏ.டி.பன்னீர்செல்வம் உடனே இதில் உறுப்பினரானார். 1918-ல், தஞ்சையில் பிராமணரல்லாதார் மாநாடு நடத்தி அம் மாவட்டத்தையே அக்கட்சியின் கோட்டை ஆக்கினார்.

இவ்வகையில் - த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு, நெடும்பலம் ஆர்.சாமியப்ப முதலியார், குடந்தை கந்தசாமி மூப்பனார், நாகை வி.பி.வி.காயாரோகணம் பிள்ளை, ஐ.குமாரசாமிப் பிள்ளை ஆகியோரும் செல்வத்திற்கு உறுதுணையாயினர்.

எல்லோரிடமும் பேதம் பாராட்டாமல் பழகிடும் பண்பு பன்னீர்செல்வத்துக்கு இருந்தது. நடுத்தர உயரமும், கறுத்த மேனியும், அகன்ற நெற்றியும், வட்டமுகமும் முறுக்கு மீசையும் உறுதிமிக்க அவருடைய கம்பீரத் தோற்றமும், கணீரென்ற சொல்லாற்றலும் எல்லோரையும் கவர்ந்திழுப்பதாக இருந்தது. தஞ்சை மாநகரில் இருந்த பல்வேறு பொது அமைப்புகளும் அவரை விரும்பியழைத்துக் கவுரவித்தன. பல அமைப்புகளில் அவர் தலைவராகவும் ஆனார்.

### நகரசபைத் தலைவர்

இத்தகைய செல்வாக்குடைய செல்வம் 1918ஆம் ஆண்டில் தஞ்சாவூர் நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்ததன் காரணமாகத் தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் கல்விக் குழு ஆகியவற்றிலும் உறுப்பினராக்கப்பட்டார். 1922 முதல் 1924 வரை தஞ்சை மாவட்ட உயர்நிலைக் கல்விக்குழுவின் தலைவராகவும், பிறகு தஞ்சை மாவட்டக் கல்விக்குழுத் தலைவராகவும், தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தஞ்சை மாவட்டக் கழகத் துணைத் தலைவராகவும் கூட அவர் பதவி வகித்தது உண்டு. இதனாலெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் கல்வி தழைத்தது. இவர் நிர்வாகக் காலத்திலேதான் 'திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரி', 'அரசர் கல்லூரி' எனப் பெயர் மாற்றம் பெற்றுச் சிறந்தது. இந்தச் சமயத்திலேதான் அதாவது 1927ல் தந்தை பெரியார்-செல்வம் சந்திப்பும் தோழமையும் ஏற்பட்டது. இந்திய அரசியலை ஆராய வந்த சைமன் கமிஷனே, தஞ்சையில் இவர் நிர்வாகச் சிறப்பு கண்டு பாராட்டியது. லஞ்ச ஊழலற்ற நிர்வாகம் எனப் புகழ்ந்தது.

மிகப்பெரும் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும் மற்றவர் துயர்கண்டு, தானும் துன்புறும் குணமுடையவராக இருந்தார் பன்னீர்செல்வம். வாடி வருவோரின் வாட்டம் போக்கும் குணம் பெற்றிருந்ததாலோ

என்னவோ, குடும்ப நிர்வாகமெல்லாம் அவர் மனைவி பொன்னுபாப்பாளிடமே இருந்தது. இருப்பினும் கணவன் மீது பெரிதும் பாசம் கொண்டிருந்தார். அவருடைய தந்தையாரும் தன் மகளின் நிர்வாகத் திறன் கண்டு 132 ஏக்கர் நிலம் வாங்கி அவர் பெயரில் எழுதிவைத்தார்.

செல்வத்தின் தயாள சிந்தை காரணமாகவோ அல்லது சொத்து சேர்ப்பதில் நாட்டமின்றி இருந்ததாலோ என்னவோ அவருடைய கடைசிக் காலத்தில் இந்தப் பெரும் சொத்து அவரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் இலண்டனில் படித்துவந்த தன் மகனுக்குக் காரை விற்றுப் பணம் அனுப்பியிருக்கிறார், செல்வம்.

பன்னீர்செல்வமும் பொன்னுபாப்பாளும் குறைவற்ற மக்கட் செல்வம் பெற்றிருந்தனர்; எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள் அவர்கள். அவர்களில் இருவர் மட்டும் கொழுந்திலேயே கருகிப் போயினர்.

அவருடைய அண்ணன் திருச்செல்வம் - பெரும் சொத்திற்கு அதிபதியானாரே தவிர, பிள்ளைப் பேறு அடைந்தாரில்லை.

**தேடிவந்த பதவிகள்**

நீதிக்கட்சியின்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த செல்வம், தஞ்சை மாவட்டக் கழகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடத்திற்குப் 'பனகல் கட்டடம்' என்றே பெயரிட்டார். அங்குதான் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் இப்போது இயங்கி வருகிறது.

கடும் உழைப்புக்குச்சொந்தக்காரரான செல்வம், தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக மட்டுமல்ல; நீதிக் கட்சியின் தஞ்சை மாவட்டத் தலைவராகவும் திகழ்ந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நாளடைவில் பெரிதும் உடல் நலிவுற்ற பொன்னுபாப்பாள் 12-4-1934ல் இறந்து போனார்; அதற்கு முன் தம் பெயரிலிருந்த சொத்தையெல்லாம் தம் மக்கள் பெயரில் எழுதிவைத்து, தனது கணவரே அவர்களின் காப்பாளராக இருக்குமாறு குறிப்பிட்டிருந்தார்.

1930ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற நீதிக்கட்சியார், பி.முனுசாமிநாயுடு தலைமையில் அமைச்சரவை அமைத்தனர். இத்தேர்தலில் திருச்சி-தஞ்சை கிறித்துவத் தொகுதியில் நீதிக்கட்சி வேட்பாளராக நின்று பன்னீர்செல்வம் பெரும் வெற்றி பெற்றார். அந்த ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டும் இலண்டனில் நடைபெற்ற 2 வட்ட மேசை மாநாடுகளிலும் இந்திய கிறித்துவர்கள் சார்பாகச் செல்வமும் கலந்துகொண்டார்.

கல்வியின் பொருட்டும், பணியின் பொருட்டும் - தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி சென்னை இலண்டன் என்று சுற்றிய அவர் 1-4-1938 அன்றுதான் தம் குடும்பத்தோடு சில காலம் வந்து தங்கினார். அக்கிராமத்தார் அனைவருடைய சொத்துக் கணக்கையும் எடுத்து ஆவணங்களாக்கினார். ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் பேருதவி புரிந்தார்; குளம் வெட்டினார்; புனித தெரசாள் கோயில் கட்டினார்; ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறச்செய்தார்; இவ்வளவுக்கும் பிறகே, கிராம மக்கள் சம்மதத்தோடு செட்டியாபுரம் என்ற அச்சிற்றூரின் பெயரைச் செல்வபுரம் என்று அவர் மாற்றினார்.

இங்கிலாந்தில் படித்துவிட்டுத் திரும்பினார் அவர் மகன் ஜார்ஜ்; அவர் வைத்த கைகாட்டி தான் 'செல்வு புரம்' என ஒரெழுத்துப் பிழையோடு இன்றும் அங்கே காணப்படுவதாகும்.

**செல்வம் போதும்**

சாதிமத வேறுபாடுகளைக் கண்டித்து வந்த, நீதிக்கட்சியில் அங்கம் வகித்த பெரியவர்களே சர்.பிட்டி தியாகராசச் செட்டியார், டாக்டர் சி.நடேச முதலியார், சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், ராஜா சர் முத்தையா செட்டியார், என்றெல்லாம் தம் பெயரோடு தம் சாதிப் பெயரையும் ஒட்டவைத்துக் கொண்டிருந்த காலம் அது!

அக்காலத்திலேயே ஏ.டி.பன்னீர் செல்வம் என்று மட்டுமே கையெழுத்திட்டு வந்த பெருமையுடையவர் செல்வம் ஒருவரே! மக்களெல்லாம் செல்வம் என்றே இவரைக் குறிப்பிட்டு மகிழ்வார்கள்.

17-2-1929ல் செங்கற்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டில் அவ்வியக்கத்தினர் தமது பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என ஒரு தீர்மானம் கூறியது. பெரியாரும் ஊ.பு.சவுந்தரபாண்டிய நாடாரும்கூட இனி அப்படிச் சேர்க்கமாட்டோம் என்று உறுதி கூறினார்கள் மறுநாள் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டிற்குச் செல்வமே தலைமை தாங்கினார்.

தமிழகத்தில் 1-4-1937ல் கே.வி.ரெட்டி தலைமையில் அமைந்த நீதிக்கட்சி இடைக்கால அமைச்சரவையில் செல்வம் நிதி-உள்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

அடுத்த நான்காம் மாதமே 14-7-1937ல், தமிழ்நாட்டில் புதிய அமைச்சரவை அமைந்தது. அதன் முதலமைச்சர் பொறுப்பேற்றார், சி.ராஜகோபாலாச்சாரியார். இதுகண்டு நீதிக்கட்சியினரும் சுயமரியாதை இயக்கத்தாரும் இனி நடக்கக்கூடாததெல்லாம் நடந்துவிடுமோ என்று அஞ்சினார்கள். அதற்கேற்பவே, அடுத்த மாதமே 11-8-1937ல் - ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளில் இந்தி கட்டாயப் பாடமாகும் என்று அறிவித்தார் 'ராஜாஜி'.

தமிழ் நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன; பலரும் இந்தி எதிர்ப்புக் களம் புகுந்து

**சர்.ஏ.டி. பன்னீர் செல்வத்தைப் பற்றி**

ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர். கிருஷ்ணசாமி "பார்லிமெண்டேரியன்" என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்துக்கேட்டார்களாம். நீங்கள் நல்ல பார்லிமெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னராம். இதுதான் நல்ல பார்லிமெண்டேரியனுக்கு அழகு என்பார்கள்.

- கலைஞர்

*(சட்டப்பேரவை உரையிலிருந்து)*

திருவாரூர் மாவட்டம்

**ஊரகத் தொழில்**

அ) கிராமப்புற நூற்பு நிலையங்கள் - 6 - மன்னார்குடி, நீடாமங்கலம், பேட்டை, திருத்துறைப்பூண்டி, இருள்நீக்கி மற்றும் இனான்குடி.

ஆ) ஆதிதிராவிடர் பாய்முடையும் சங்கம் - திருப்பாலக்குடி

இ) கிராமப்புற நூற்பு நிலையங்கள் - பெரம்பூர் மற்றும் நீடமங்கலம் ஆகிய இடங்களில் அமைத்திட (1997-98ல்) உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் போர்க்கால அமைச்சரவை ஏற்பட்டது; இந்திய அமைச்சருக்கு உதவியாக இருந்த ஆலோசனைக் குழுவில், செல்வம் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இது நடந்தது 10-1-1940ல் ஆகும். இச்செய்தி நீதிக்கட்சியினர் அனைவரையும் அகமகிழச் செய்வதாக இருந்தது.

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அச்சமயத்தில் நீதிக்கட்சியினர் திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இந்தியா சுதந்திரம் பெற்றால் ஆரிய நாடு, பாகிஸ்தான், திராவிட நாடு என்றே இந்நாடு பிரிக்கப்படவேண்டும் எனப் பிரச்சாரம் செய்துவந்தார் பெரியார். இக்கருத்து வலுப்பெறப் பன்னீர்செல்வம் இங்கிலாந்து பயணம் உதவும் என எல்லோரும் நம்பினர்.

இங்கிலாந்து நாட்டிற்குப் பணியாற்றச் செல்லவிருக்கும் செல்வத்துக்கு வழியனுப்பு விழா விருந்தளிக்கப் பலரும் 'நான்-நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தார்கள்.

கைதாயினர். ஆனால், வாக்குவன்மை மூலமே வெல்லமுடியும் என்ற நம்பிக்கையுடையவரான செல்வம்-கிளர்ச்சி, மறியல், போராட்டம் எதிலும் ஈடுபடவில்லை; அதேநேரத்தில் தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துவந்தார்.

இந்தி எதிர்ப்பைப் பொறுத்தமட்டில் தந்தை பெரியாரின் பணி, அக்காலத்தில் சிறப்பிடம் பெற்றது. கடுங்காவல் தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது அரசு. பெல்லாரி சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டார் தந்தை பெரியார். இதையொட்டி வந்த பெரியார் பிறந்தநாள் விழாக் கூட்டங்கள் 'அவரை விடுதலை செய்ய வேண்டும்' என்று அரசை எச்சரிக்கும் கூட்டங்களாக நடைபெற்றன. சென்னையிலும் வேலூரிலும் நடைபெற்ற கூட்டங்களுக்குச் செல்வமே தலைமையேற்றுத் தரையதிர முழங்கினார்.

இந்தி எதிர்ப்பு விவாதத்தில் அவர் ஒருமுறை சட்டப்பேரவையில் பேசிக்கொண்டிருந்த போது ஓர் காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து - "பெரியார் என்கிறீர்களே, அப்படியென்றால் யார்?" என்று கேட்டார்; செல்வம் சட்டென்று "அப்படியென்றால் மகாத்மா என்று அர்த்தம்" என்றார்.

**இருவரும் ஒருவரும்**

ஒருமுறை சட்டமன்றத்தில் முதலமைச்சராயிருந்த ராஜாஜி - "சோமசுந்தர பாரதியார், ஈ.வெ.ரா. ஆகிய இரண்டு பேர்தானே இந்தியை எதிர்க்கிறார்கள்?" என்று கேட்டபோது "நீங்கள் ஒருவர்தானே இந்தியை ஆதரிக்கிறீர்கள்?" என்று சூடாகப் பதிலுக்குக் கேட்டார் செல்வம்.

"1920 முதல் நீதிக்கட்சி அரசு புரிந்த பணிகளை, இன்னும் ஐம்பதாண்டுகள் ஆனாலும் காங்கிரஸ் அரசால் செய்யமுடியாது" என்று சட்டமன்றத்திலேயே எடுத்துரைத்தார் அவர்.

அக்கூட்டத்தில்தான் செல்வம், ஏ.துரைசாமி முதலியார், ராஜா சர் முத்தையா செட்டியார் ஆகிய மூவரும் துணைத் தலைவராகவும், கி.ஆ.பெ.விசுவநாதம் பொதுச் செயலாளராகவும், அண்ணா அவர்கள் வட்டார அமைப்பாளர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டார்கள். பெரியாரின் எண்ணப்படி சி.பாசுதேவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பெரியார் விடுதலையான பின், சி.என்.அண்ணாதுரை, பொ.வேதாசலம், சி.டி.நாயகம், குமாரசாமிப் பிள்ளை ஆகியோரைச் செயற்குழு உறுப்பினர்களாக நியமித்தார்.

**ராஜாஜி அமைச்சரவை பதவி விலகியது**

இதற்குப் பிறகு 21-2-1940ல் மாநில ஆளுநரின் ஆணைப்படி கட்டாய இந்தித் திணிப்புக் கைவிடப்பட்டது.

இரண்டாம் உலகப்போருக்கு இந்தியர்கள் ஆங்கில அரசுக்கு ஆதரவளிக்கக்கூடாது என்று காங்கிரசார் முடிவு செய்திருந்தனர். அதே சமயம் நீதிக்கட்சி அவர்களுக்கு ஆதரவளிப்பது என முடிவு செய்தது. இதைப்பற்றி விளக்கித் தமிழகமெங்கும் பெரியார், செல்வம், அண்ணா போன்றவர்கள் செய்த பிரச்சாரத்தின் பலனாக இராணுவத்தில் எண்ணற்ற தமிழர்கள் சேரலாயினர்.

**கடைசிக் கடிதம்**

பம்பாய்க்குச் சென்று, அங்கிருந்து விமானத்தில் கராச்சிக்குப் போய்ச்சேர்ந்தார் செல்வம். அங்கே ஒருநாள் தங்கிய அவர், தனது பயணம் பற்றி, தந்தை பெரியாருக்கு 29-2-1940ல் ஒரு கடிதம் எழுதினார். அதுவே அவர் எழுதும் கடைசிக் கடிதமாக இருக்கும் என்று அப்போது தவறிப் போய்க்கூட யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

அப்படிப் பயணமானபோது அவர் வங்கிக் கணக்கில் வெறும் 15 ரூபாய் 2 அணா மட்டும் தான் இருந்தது.

ராஜா சர் முத்தையா செட்டியாரிடம் ரூ.3000 கடன் வாங்கிக் கொண்டே அவர் புறப்பட்டிருந்தார். பிற்காலத்தில், அவர் மகன் ஜார்ஜ் முயற்சியால் கிடைத்த பயணத் தொகையால்தான் அந்தக் கடன் அடைக்கப்பட்டது.

1-3-1940 அன்று காலையில் 'அனிபால்' என்கிற இராணுவ விமானம் செல்வத்தை ஏற்றிக்கொண்டு கராச்சியைவிட்டுப் புறப்பட்டது; காலை 5 மணியளவில் பறக்கத் தொடங்கிய அவ்விமானம் பத்தரை மணியளவில் 'ஜிவானி' விமான நிலையத்தை அடைந்தது; அரைமணி நேரம் கழித்து அங்கிருந்து வானில் பறந்த விமானம், அன்று மாலை 5 மணிக்குள் ஷார்ஜா விமான நிலையத்தை அடைந்திருக்க வேண்டும்; ஆனால் அப்படிச் சென்று சேரவில்லை!

**உறுதியான மரணச் செய்தி**

வேறுபல விமானங்கள் மூலமும் கப்பல்கள் மூலமும் தேடப்பட்டது. பின்பு பன்னீர்செல்வம் பயணம் செய்த அனிபால் விமானம் ஓமான் தீபகற்பத்தின் அருகே வளைகுடாவில் விபத்துக்குள்ளாகி விழுந்துவிட்டது; அதிலிருந்த யாருமே உயிர்தப்பவில்லை என்கிற கொடிய செய்தி மறுநாள் உறுதிப்படுத்தப்பட்டது! உற்றார் உறவினர் மட்டுமல்ல; தமிழகமே இச்செய்தி கேட்டுக் கதி கலங்கிக் கண்ணீர் வடித்தது!

**பிறந்தநாள் விழா**

1-6-1988 அன்று சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் நூற்றாண்டுப் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டன. திருவாரூரிலும், திருச்சியிலும், சென்னையிலும் நடைபெற்ற இவ்விழாக்கள் திராவிடர் கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் கொண்டாடப்பட்டன. கலைஞர், பேராசிரியர், மன்னை திரு. ப.நாராயணசாமி, திரு.அ.க.அ.அப்துல் சமது, திரு.கி.வீரமணி ஆகியோர் அவ்விழாக்களில் பங்கேற்று செல்வத்தின் சிறப்புகளை எடுத்து விளக்கினார்கள்.

- பி.எல்.ராஜேந்திரன்

## திருவாரூர் மாவட்டம்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

திருவாரூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவிகள் :

வீட்டுமனைப் பட்டா 1,601 பேர்களுக்கு வழங்கப் பட்டன. இதற்கான செலவுத் தொகை ரூ.37,00,182.

ஆறு ஆதிதிராவிடர் கிராமக் குடியிருப்பு மற்றும் சுடுகாட்டுக்கு ரூ.6,41,619 செலவில் பாதைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இலவசத் தையல் இயந்திரம் ரூ.2,41,200 செலவில் 134 பேர்களுக்கு வழங்கப்பட்டது.

இலவசச் சலவைப்பெட்டி ரூ.13,541 செலவில் 11 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

வசதி செய்தல், சுடுகாட்டு கப்பிச்சாலை அமைத்தல் போன்ற பணிகள் ரூ.18,62,124 செலவில் செய்யப்பட்டன.

19 ஆதிதிராவிடர் உழவு மாட்டுக் கடன் பெற ரூ.57,000 மான்யம் வழங்கப்பட்டது.

மேலும் வன்கொடுமை தடுப்புச் சட்ட நிவாரணம் ரூ.42 பேர்களுக்கு ரூ.2,62,500 வழங்கப்பட்டது.

உணவு விடுதியில் தங்கிப் பயிலும் 1,633 மாணவ, மாணவிகளுக்கு ரூ.31,56,600 உணவிற்காக வழங்கப் படுகிறது.

ஆதிதிராவிட நலத்துறைப் பணிகள் செம்மையாக நடைபெற மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுக்கள், வன் கொடுமை கண்காணிப்புக்குழு, கொத்தடிமை, பாடநூல் விநியோகக் கண்காணிப்புக் குழுக்கள், விடுதி மாணவ மாணவியர் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளன.



கல்வி உதவித்தொகையாக 20,824 பேர்களுக்கு ரூ.37,90,548 வழங்கப்பட்டது.

இலவசச் சீருடை 4,794 மாணவர்களுக்கு வழங்கப் பட்டது.

ஆதிதிராவிட நலப்பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 4,452 மாணவ மாணவிகளுக்கு ரூ.3,89,664 செலவில் புத்தகங்கள் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.

பொது பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்கள் 8651 பேர்களுக்கு ரூ.7,78,734 செலவில் இலவசப் புத்தகம் வழங்கப்பட்டது.

குறிப்பேடுகள் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 32,208 மாணவ மாணவிகளுக்கு ரூ.15,31,100 செலவில் வழங்கப்பட்டன.

இதுதவிர பள்ளி கட்டடங்கள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல், விடுதி கட்டடங்கள் கட்டுதல் புதுப்பித்தல். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருஸ்தவக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்

திருவாரூர் மாவட்டத்தில் சமத்துவபுரம் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் அலிவலம் மற்றும் நொச்சியூர் ஆகும்.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 40 ஆதிதிராவிடர்கள், 25 பிற்பட்ட வகுப்பினர், 25 மிகப் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் 10 இதர வகுப்பினர் வீட்டு மனைபெறத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் வீட்டு மனை இலவசமாக வழங்கப்படும்.

வீடுகட்ட ரூ.35,000ம் மானியமும், கூட்டுறவுத் துறை மூலம் ரூ.10,000 கடனும் வழங்கப்படும்.

சமத்துவபுரத்தில் 30 அடி தார்ச்சாலைகள், மின்வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பள்ளி, விளையாடுமிடம், நியாய விலைக்கடை, தொலைக்காட்சிப் பெட்டி ஆகிய வசதிகள் உண்டு.

அலிவலத்தில் அனைத்துத் துறையிலும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திருவாரூர் மாவட்டம் :

# பறவைகள் சரணாலயங்கள்






திருவாரூர் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயங்கள் இரண்டு அமையவிருக்கின்றன. ஒன்று வடுவூர், மற்றொன்று உதயமார்த்தாண்டபுரம். வடுவூர், திருவாரூர் மாவட்டத்தின் மேற்கு எல்லையாகும். இங்குள்ள 316 ஏக்கர் ஏரியில் உன்னி கொக்கு, முக்குளிப்பான், கரண்டி மூக்கன், சிறவி, நமக்கோழி, பாம்புதாரா போன்றவைகளும் வேறு பல வெளிநாட்டுப் பறவைகளும் படைபடையாய் வருகின்றன.

அந்த ஏரியின் பரப்பளவு 1356 ஏக்கர், கொள்ளளவு 38.88 மில்லியன் கன அடி, கரைமட்டம் 27.20 மீட்டர், கரையின் நீளம் 1200 மீட்டர். நான்கு மதகுகள் கொண்ட வடுவூர் ஏரியைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகள் இந்தப் பறவைகளுக்கு ஏற்ற வகையில் பெரிதும் உதவுவதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு அரசு வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இப்பகுதி விரைவிலேயே முறைப்படி பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட உள்ளது. இதேபோல் உதயமார்த்தாண்டபுரமும் விரிவாக்கம் பெறும்.

அதன்பின் சுற்றுலாப் பயணிகள் வருகை இப்பகுதியில் அதிகரிக்கும். எனவே அதற்கேற்ற வகையில் அதன் சுற்றுப்புறத்தில் வசதி வாய்ப்புக்கள் உண்டாக்குவதைப் பற்றி, மாவட்ட நிர்வாகம் பெரிதும் முனைந்திருக்கிறது.

---

திருவாரூர் எழுத்தாளர்

# கலைஞர்



அந்தக் காலத்தில் கலைஞரைத் திருவாரூர் முரசொலி எழுத்தாளர் என்றால்தான் பலபேருக்குத் தெரியும்.

தந்தை பெரியார் அவர்களின் 'குடிஅரசு' ஏட்டில் கலைஞர் வேலைக்குப் போய்ச்சேர்ந்த போது, 13.10.1945 ஏட்டில் வெளிவந்த விளம்பரம் இது :

திருவாரூர் முரசொலி எழுத்தாளர் தோழர் மு.கருணாநிதி அவர்களின் தற்கால முகவரி :

**மு.கருணாநிதி**

C/o. குடிஅரசு ஆபீஸ், ஈரோடு.



திரு.வி.க.அரசு கலைக்கல்லூரி



கலைக்கல்லூரி - அண்ணாசிலை

# திருவாரூர் மாவட்டம்




திருவாரூர் சந்திப்பு-புகைவண்டி நிலையம்



தென்னை அணிவகுக்கும் கிராமப்புறச்சாலை



வாழைக்கேற்ற மண்வளம்



கோடை வெப்பம் தணிக்கக் குளிரிளநீர்



அங்காள பரமேஸ்வரி கோயில்



பன்னை - இராசகோபால சுவாமி ஆலயக் கல்தூண்

திருவாரூர் மாவட்டம்:

# காவலர் கடமை

சட்டம் - ஒழுங்கு எவ்விதச் சோதனைக்கும் ஆளாகாத மாவட்டமாக இருக்கிறது திருவாரூர் மாவட்டம்.

திருவாரூர் காவல் மாவட்டம் 19.8.96 முதல் பிரிக்கப்பட்டு, செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து 23 காவல் நிலையங்களும் தஞ்சை மாவட்டத்தில் இருந்து 2 காவல் நிலையங்களுமாகப் பெற்று, 25 காவல் நிலையங்கள் அடங்கியதாக உள்ள இந்த மாவட்டத்தில், சட்டம் ஒழுங்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில் சீரும் சிறப்புமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.எம்.இராம சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கூடுதல் கண்காணிப்பாளர், 6 துணைக் கண்காணிப்பாளர்கள், 22 காவல் ஆய்வாளர்கள், 45 உதவி ஆய்வாளர்கள், 236 தலைமைக் காவலர்கள், 264 முதல்நிலைக் காவலர்கள் மற்றும் 17 இரண்டாம் நிலைக்காவலர்களுடன், 25 காவல் நிலையங்கள் மற்றும் தனிப்பிரிவுகளும் திருவாரூர் மாவட்டத்திலே இயங்கிவருகின்றன.

**மகளிர் காவல் நிலையம்**

இது தவிர - பெண் உதவி ஆய்வாளர் ஒருவர், 5 பெண் தலைமைக் காவலர்கள் மற்றும் 5 பெண் முதல் நிலைக் காவலர்களுடன் மன்னார்குடியில் பெண் காவல் நிலையம் இயங்கிவருகிறது.

திருவாரூர் நகரத்திலும், மன்னார்குடி நகரத்திலும் போக்குவரத்துப் பிரிவுகள் தனிப்பட அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகவே - மாவட்டக் குற்றப்பிரிவு, மாவட்டத் தனிப்பிரிவு, மாவட்டக் குற்ற ஆவணக்கூடம், தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் சேமப்படைப் பிரிவுகள் ஆகியவைகளும் உருவாக்கப்பட்டு, திறம்பட இயங்கிவருகின்றன.

**உடனடி நடவடிக்கை**

திருவாரூர் நகரக்காவல் கட்டுப்பாட்டு அறை, வான்செய்தி பொருத்திய வாகனத்தில் அதிரடிப்படையினர் 24 மணி நேரமும் மிகுந்த விழிப்புடன் செயலாற்றி வருகிறார்கள்.

திருவாரூர் நகரில் கள்ளச்சாராயம் விற்பனை செய்தல், சூதாட்டம் நடத்துதல், தனியே செல்லும் பெண்களைக் கேலி செய்தல் மற்றும் கலவரம் நடக்கும் இடங்கள் போன்ற தகவல்களைத் தொலைபேசி எண் 100க்கு தகவல் கொடுத்தால் போதும்; தகவல் கொடுத்த 2 நிமிடத்துக்குள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த 100 என்ற எண்ணுக்கு போன் செய்தால் கட்டணம் கிடையாது, தகவல் கொடுப்பவரின் பெயர் விவரம் எல்லாம் இரகசியமாகவே வைத்துக் கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த பல்வேறு கொலை மற்றும் கொலை முயற்சிகளில் சம்பந்தப்பட்டு, இதுவரையில் காவல் துறையினரால் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்த 7 முஸ்லீம் இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களுடன் - திருவாரூர் நகருக்கு அருகில் இருக்கும் மருதப்பட்டினம் கிராமத்தில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த 6.12.97ஆம் தேதி திருச்சி இரயில்வே நிலையச் சந்திப்பில் நின்றுகொண்டிருந்த 'பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலில்'



விளமல் - கல்லுப்பாலம் அருகே ரூ.70,000 பெறுமானமுள்ள 'குருடாயில்' கடத்திய லாரிகளைப் பிடித்த திருவாரூர் காவலர் படை.



*திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்டிய பல்துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்*

வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்; மேலும் சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் சென்னை அண்ணாசாலை டிவிஎஸ் அருகில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடிப்பதற்கு முன்பு காப்பாற்றப்பட்ட சம்பவத்திலும் சென்னை துணை போலீஸ் கமிஷனர் திரு.மாசாணமுத்து அவர்களுக்கு வெடிகுண்டு பார்சல் அனுப்பிய ஜிகாத் கமிட்டியின் மாநிலத் தலைமை நிலையச் செயலாளரும் முஸ்லீம் தீவிரவாதியுமான அலி அப்துல்லா கொரடாச்சேரி அருகில் உள்ள அத்திக்கடையில் கத்தியுடன் கைது செய்யப்பட்டது. திருவாரூர் மாவட்டக் காவல் துறையின் திறம் மிக்க நடவடிக்கைக்கோர் சான்றாகும்.

கடந்த பிப்ரவரியில் கூத்தாநல்லூர் அருகே உள்ள லெட்சுமாங்குடியில் இந்துக்கள் - முஸ்லீம்களிடையே துளிர்விட்ட கலவரம் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரால் ஓரிரு நாட்களிலேயே அடக்கப்பட்டு, அதன் வேகம் அக்கம்பக்கத்து ஊர்களுக்குப் பரவாமலும், இனக்கலவரமாக வளராமலும் தடுக்கப்பட்டது.

திருவாரூர் நகரில் தியாகராசர் கோயிலில் உள்ள ஆழித்தேரோட்டம் நடைபெற்றபோது, எவ்விதச் சிறு அசம்பாவிதம்கூட நடக்காமல் காவல்துறையினரால் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

**மதுக் குற்றங்கள்**

திருவாரூர் காவல் மாவட்டம் தொடங்கிய நாளில் இருந்து 16 கார்களும், 3 லாரிகளும், 4 வேன்களும், 46 மோட்டார் சைக்கிள்களும், மதுக் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கைப்பற்றப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டு 10,425 மதுக்குற்ற வழக்குகளும், 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய 7.051 வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், மதுக்குற்றங்களைக் கண்டுபிடிக்க இம்மாவட்டத்தில் உள்ள பேரளம் காவல் நிலையச் சரகம் வேலங்குடி கிராமத்தில் ஓர் உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்களைக் கொண்டு மதுவிலக்குச் சோதனைச் சாவடி தொடங்கப்பெற்றுள்ளது; இவர்கள், வண்டி வாகனங்கள் மூலம் மதுக்கடத்தலைத் தடுக்கச் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் 'ரௌடி'களின் நடவடிக்கைகளும், கட்டைப் பஞ்சாயத்து முறைகளும் முற்றிலுமாகத் தடுக்கப் பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை விடுதலைப் புலிகள் உட்படத் தீவிரவாதிகளின் நடமாட்டத்தைத் தடுக்க - பேட்டை, தில்லைவளாகம் ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகள் தொடங்கப்பெற்று ஊடுருவல் இல்லாமல் தடுக்கப்பட்டு வருகிறது. ●



*அச்சுத மங்கலம் சத்துணவு சமையற்கூடம்*

## தீயணைப்பு நிலையங்கள்

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 10 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

- திருவாரூர்
- குடவாசல்
- நன்னிலம்
- கொரடாச்சேரி
- வலங்கைமான்
- மன்னார்குடி
- நீடாமங்கலம்
- கோட்டூர்
- திருத்துறைப்பூண்டி
- முத்துப்பேட்டை

ஆகிய இடங்களில் அத்தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

# கலைஞர் கவிதைகளில் மரங்கள்



- பூவிதழின் மென்மையிலும் மென்மையான
  புனித உள்ளம். அன்பு உள்ளம்.
  அரவணைக்கும் அன்னை உள்ளம்! அவர் (அண்ணா)
  மலர் இதழ்கள் தமிழ்பேசும் -
  மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்.
  விழிமலர்கள் வேலாகும் வாளாகும்
  தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!...

- நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர் உலவும்
  நாடெல்லாம் காவல், காவல்! அந்தப் படைகளுக்கு
  இராவணன், காலம்காட்டும் சேவல், சேவல்!

- வெற்றி வேந்தனுக்கோர் தம்பி வீடணன்...
  வேங்கை மரத்துப் புல்லுருவி
  அண்ணனைச் சாய்த்துவிட்டு அரசாளக்
  காத்திருப்போன்!

- மலையோரம் மரத்தோரம் மறைந்திருந்து
  எலிபோலப் போரிட்டான் எதிரி இராமன்!

- எனைக் கொன்றவன் என்தம்பி,
  பனைமரத் தோளுடையான்!...

- மகிழம்பூ பிள்ளைதரும் பேரின்பம் மறுக்கின்ற
  காவியமும் இலக்கியமும் கள்ளி என்பேன்,
  கவைக்குதவாக் காட்டுச் சுள்ளியென்பேன்!...

- ...தென்னம் பாளை தெறித்ததுபோல்
  சிரித்து நின்றார் மாதரெல்லாம்

- தாழை மடலை எதிர்ப்புறமாய்த் தடவுதற்கும்
  அஞ்சுகின்ற கோழை நீ!
  வாழைமரம் வெட்டுதற்கும் வாள்பிடிக்கத் தெரியா
  மோழை! வந்தவழி போ!...

"மாண்புமிகு
முதலமைச்சர் கலைஞர்
அவர்களின்
பவளவிழா
நாளையொட்டித்
தமிழகமெங்கும்,
கோடானு கோடி
மரக்கன்றுகள்
நடப்பட்டன".

- செய்தி

- தருவே! உருவே! திங்கட் குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!...

- சந்தன மரங்கடைந்து சிலைசெய்து,
வெந்தழல் நிறமெடுத்து இதழ்பொருத்தி,
இந்திர வில்லனைய புருவத்தின் கீழ்
எழில்நீல மணியிரண்டை இமைக்குள் பதித்துச்
செந்தமிழ் மணக்கின்ற திருவாயை
அசையச்செய்து
சந்ததம் புகழ்பாடும் பான்மையிலே
உயிரூட்டிக் கொண்டுவந்த அற்புதமாம்!...

- வம்பென்றால் விலக்கிடுவேன்-கவிஞரிடை
வம்பென்றால் களித்திருப்பேன்...தமிழ்க்
கம்பெடுத்துச் சொற்சிலம்பம் ஆடிடுவீர்; கவி
அம்பெடுத்துத் தாக்கிக் கொள்வீர்...

- ஒட்டுமா பழம்உறவு? எனக் கேட்பீர்!
ஒட்டுமாம் பழ உறவு!
ஒட்டு மாம்பழ உறவு சேலத்தில் இயற்கை!...

- ...தென்னம்
பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச்சாறு;
வாழை வடிக்கும் கண்ணீரோ பால்ஆகும்;
ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல்ஆகும் -
வாள்ஆகும்!

- கந்தா கடம்பா கருப்பா முனியா என்று
கருவேல மரத்தடியில் மிராசுதார் போடும்
கூச்சல்...

- ஆலிட்ட விழுதுபோல அங்கங்கே பரவிடும்!
அதனாலே...
தாழிட்டுத் தடுத்திடுவீர் உட்பகையை!...

- பனைவெல்லம் போலினிக்கும் பாதருவார்!...

- நாவற் பழமென நல்லகவி உதிர்த்திடுவார்!...

- வேருக்குள் தூங்கும் பலாக்கனி நாங்களப்பா
பாருக்குள் எம்போலப் பாவையுண்டா?...

- சேர்வராயன் மலைக் கனியும்
சேலத்து மாங்கனியும்
செந்தமிழர் பெற்றுமகிழ்ந்தாலும்-என்
செம்மாதுளைக் கவிக்கிணையோ!...

- புன்னைமரம் நிழல் விரிக்கத்-தமிழ்
அன்னைமடி சுகம் அளிக்க
சென்னைநகர் ஒளிதெறிக்க
முன்னைஇருள் விலக்குதற்கு
முயல்கின்ற தமிழரசு!

- அன்பு - 'ஆல்'

அறநெறி - 'ஆல்'

கல்வி - 'ஆல்'

உழவு - 'ஆல்'

தொழில் - 'ஆல்'

கலைப்பெருக்கு- 'ஆல்'

ஆறுதலைப்பும் 'ஆல்' என்று முடிவதனால்

'ஆல்' களின் நடுவே நானோர் அரசானேன்!

- குயில்கூட்டம் பாடுகின்ற கோலச் சோலையிலே
கோட்டான்கள் காட்டுக் கூச்சல் கேட்டிடவோ?
மாணாடும் பொழில்-மயிலாடும் பூங்கா-
மந்திகளின் ஒய்யார மண்டபமாய் மாறுவதோ?...

- ஒதியமிலார்-முருங்கைக் கொம்பு
ஒடிபட்டுச் சிதறுதல்போல்-பகை
முறிபட்டுப் பஞ்சாய்ப் போகும்!...

- ஊன் கலந்து உயிர் கலந்து
தேன் கலந்த பலாச்சுளைபோல்-
தித்திக்கும் தமிழே!...

- சில நாடுகளில்...
ஏனோ தெரியவில்லை
ஜனநாயக ஆலமரம்
அந்த மண்ணில் விழுதுவிடுவதேயில்லை!
அடிமரத்தை வெட்டித்தான்
ஆணிவேரையும் பிடுங்கிவிட்டார்களே!

- இலட்சியமென்பது,
எட்டிப்பறித்திடும் மல்லிகையல்ல!
ஏறிப்பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடிநாட்டல்!

தொகுப்பு: பி.எல்.ஆர்.



# திருக்கோளிலி

## (திருக்குவளை)

*மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் பிறந்த ஊரான 'திருக்குவளை', புராணப் புகழ்பெற்றதாகும். தேவாரத்தில் அவ்வூர் பற்றிக் காணப்படும் செய்தி இது.*

**தல விளக்கம்:** காவிரி தென்கரைத்தலம்; திருக்குவளை என வழங்கப்படுகிறது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. பிரம்மன், அகத்திய முனிவர் வழிபட்டது. நவக்கிரகங்கள் ஒரு சேர வந்து பூசித்ததால் 'கோளிலி' எனப் பெயர் பெற்றது. பிரமதபோவனம், கதகாரண்யம், தென்கயிலை முதலான பெயர்களும் உண்டு.

'அந்தரத்தில் தேர்ஊரும்
அரக்கன்மலை அன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால்
ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்தை மறைபாட
வாள்அவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக்
கோளிலிஎம் பெருமானே !'

**தெளிவுரை:** வானத்தின்கண் தேரில் ஊர்ந்து சென்ற இராவணன் கயிலைமலையை எடுத்தபோது, ஈசன் அழகிய தன் திருப்பாத விரலால் ஊன்ற, உடல்நெரிந்து துன்புற்றுச் சாம கீதத்தை ஓதினான். அதனைக் கேட்டு மகிழ்ந்து மந்திரவாளை அவ்வரக்கனுக்கு வழங்கியவன் பிறைசூடிய கோளிலிப் பெருமான்.



**ஒரே வரிசையில் நவக்கிரகங்கள் - திருக்குவளை ஈசுவரன் கோயில்**

சுந்தர மூர்த்தி நாயனார்க்குக் குண்டையூர் கிழார் வேண்டுகோளின்படி பெற்ற நெல்முட்டைகளைப் பூதங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பித்த திருத்தலம்.

| | | |
|---|---|---|
| சுவாமி | : | பிரமபுரீஸ்வரர், கோளிலி நாதேஸ்வரர் |
| அம்பிகை | : | வண்டார் பூங்குழலி |
| தலவிருட்சம் | : | தேற்றா மரம் |
| தீர்த்தம் | : | விநாயக தீர்த்தம், சக்தி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், இந்திர தீர்த்தம், சந்திரநதி, மணிகர்ணிகை. |
| பண் | : | பழந்தக்க ராகம் |

திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் திருக்கோளிலி (திருக்குவளை) பற்றிப் பாடல் சில உண்டு; அவற்றுள், உதாரணத்திற்கு இதோ ஒரு பாடல்:

### சிங்காரமான ஊர்

திருவாரூர் மாவட்டத்தில் அழகான சிற்றூர்களில் ஒன்று 'திருக்கோளிலி'. திருக்குவளை என்றும் அதனை அழைப்பார்கள். திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள கிராமம். அங்கேதான் எங்கள் குடும்பம். எழில் நிறைந்த திருக்குளம். குளத்தைச்சுற்றிச் சோலை! எதிரே சிவன் கோயில்! மேற்கு எல்லையில் முனியன் கோயில்! தெற்கெல்லையில் ஐயனார் கோயில்! இவையெல்லாம் நான் கண்ட திருக்குவளை.

இப்போது அந்த அழகில் முக்கால் பகுதி குறைந்துவிட்டது. என் தந்தையார் காலத்திலே மிகச்சிங்காரமாக இருந்த ஊர் அது!

**- கலைஞர்**

- 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகத்திலிருந்து...

★ ★ ★

# கலைஞரின் தமிழ்

## -தாமரைமணாளன்

இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட பத்திரிகைத்துறை அனுபவமிருந்ததாலும் - பல்வேறு தலைவர்களுடைய புகழோங்கிய கால கட்டங்களில் நானும் ஊடாடி - பத்திரிகைகளில் பணிபுரிந்த வாய்ப்பு இருந்தும்.

எந்தப் பெரிய தலைவர்களுடனும் அதிக நெருக்கத்துடன் நான் பழகவில்லை. விதிவிலக்கு இருவர். காமராஜர் - எம்.ஜி.ஆர். இவர்களின் விஷயத்திலும் அரசியல் நெருக்கம் கிடையாது. பத்திரிகையாளனாகும் முன்னே காமராஜர் பேரில் - அவருடைய தூய தியாக வாழ்வில் ஏற்பட்ட பக்தி ஈடுபாடு. எம்.ஜி.ஆரோடு அவருடைய படங்கள் சிலவற்றிற்குத் திரைக்கதை,வசனம் எழுதும் பணி செய்த பழக்கம். இந்த இருவரும் முதல்வர்களாக இருந்தபோது நான் தேடிப்போய் பார்த்ததே இல்லை, அதேபோல், இன்றைய தமிழகத்தின் தலைசிறந்த தலைவரோடும், என் நெருக்கமும் அந்த நிலையில் உள்ளதுதான்.

அவர்தான், கலைஞர்.

அவரோடு நான் பேசிப்பழகிய சந்தர்ப்பங்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

ஒருமுறை, நானும் திரு.மணியனும் 'இதயம் பேசுகிறது' இதழுக்காக அவரைப் பேட்டி காணச் செல்வதாக இருந்தோம். நான்தான் தொலைபேசியில் கலைஞரிடம் அனுமதி கேட்டேன்.

"பேட்டி காண வருவது யார் ?" விசாரித்தார்.

"நானும், திரு.மணியனும்".

"இரட்டைக் குழல் துப்பாக்கியா ?" கேட்டுவிட்டு சிரித்தார். (என்னவோ, எங்கள் காகிதத் துப்பாக்கிக்குப் பயப்படுபவர்போல்! ஏ.கே.47-க்கே ஈடுகொடுக்கும் அவரா ? எங்களுக்கு உற்சாக மூட்ட, அப்படி 'ஜோக்' அடித்தார்.)

1989-ல் அவர் மீண்டும் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற சமயம், நான் குடியிருக்க வசதியான வீடு இல்லாமல் 40 கி.மீ. தொலைவிலுள்ள புறநகர்ப்பகுதியில் தங்கி சென்னைக்கு வந்து போய்க் கொண்டிருந்தேன். (இப்போதும்தான்). அதைக் கண்டறிந்த ஒரு நண்பர் (சினிமா டைரக்டர் சி.பி.கோலப்பன் என்று நினைவு) "நீங்க சீனியர் பத்திரிகையாளர், இப்படி சென்னைக்கு தொலைதூரத்திலிருந்து வந்து போய்க்கொண்டிருக்கிறீர்களே. ஒரு மனு எழுதிக் கொண்டு கலைஞரைப் போய் சந்திப்போம். உடனடியாக ஏதாவது அரசாங்க குடியிருப்பு வசதி செய்வார். அவரைத் திட்டுகிற பத்திரிகையாளர்களுக்கேகுடியிருப்பு வசதி செய்து கொடுத்திருக்கிறார்" என்றார். மனுகூட நான் தயாரித்தேன்.

ஆனாலும் ஒரு தயக்கம். கூச்சமா ? 'எப்படிப் போய்க் கேட்பது என்ற குழப்பமா ?' நாளது வரை புரியவில்லை. போகவே இல்லை! இப்படி ஒதுங்கியிருந்தாலும், அவரை அறிந்து கொள்வதற்கு அது ஒரு தடை அல்ல. கோபுரத்தின் மாட்சியை, அதன் உள்ளிருப்பவர்களைவிட, விலகியிருந்து பார்ப்பவர்கள், அதிகமாக ரசிக்க முடியும்.

'வாசுகியில்' ஆசிரியர் பொறுப்பேற்ற பின், தொலைவிலிருந்தே கலைஞரின் ஓர் அபூர்வத் தனித்தன்மையை கண்டுணர்ந்து வியக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அதுதான், தமிழ் இலக்கியத்தில் அவருக்கு உள்ள ஆழமான லயிப்பு.

அவரிடம் ஒருமுறை அரசியல் சம்பந்தமாக ஒரு கட்டுரை எழுதிக் கேட்டேன். கோவை மாநாட்டுப் பிரச்சினைகளில் மிகவும் மும்முரமாக இருந்ததால், எங்கள் பிரதிநிதிகளால் அவரை அணுகி கட்டுரையைப் பெற முடியவில்லை.

சில நாட்கள் கழித்து, மீண்டும் ஒரு பத்திரிகை விஷயத்துக்காக அவரைத் 'தொந்தரவு' செய்ய விரும்பினேன். அது உண்மையிலேயே, அவருக்குத் தொந்தரவான வேலைதான். அவர் எழுதிய எண்ணற்ற கவிதைகளிலிருந்து ஒரே ஒரு பக்க அளவுக்குள் 'மாணிக்க வரிகளை'த் தேர்ந்தெடுத்துத் தரும் சிரமமான பணி.

*அடடா! பாண்டியன் சபையில் கண்ணகி வீசிய சிலம்பின் மாணிக்கப் பரல்கள் துள்ளி எழுந்து பாண்டியன் நெடுஞ்செழியனின் வாயை அடைத்தது போல், அவர் தேர்ந்தெடுத்துத் தந்த மாணிக்க வரிகள் என்னை மட்டுமல்லாது, தமிழ்கூறும் நல்லுலகத்து வாசகர்கள் அனைவரையுமே பிரமிப்பில் வாயடைக்கச் செய்து விட்டன. ஆம்; இதுவரை 'வாசுகி'யில் வெளியான 'மாணிக்க வரிகள்' பகுதிகளில் மகத்தான வரவேற்பைப் பெற்றது, கலைஞரின் 'மாணிக்க வரிகள்' தாம்!*

இதை நான் பெற விரும்பிய வேளையிலும், அவர் முன்னை விட மிகமிக நெருக்கமான அரசியல் பிரச்சினைகளுக்கு இடையே பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்.

ஆனாலும் என் ஆர்வம் என்னை உந்தியது. நிருபர் ஒருவரிடம் என் வேண்டுகோளை, கடிதமாக எழுதிக் கொடுத்து அனுப்பினேன். 'அறிவாலயத்தில்' அரசியல் பிரச்சினைகளுக்காக அவரிடம் பதில் பெற எண்ணற்ற நிருபர்கள் காத்து நின்று கொண்டிருக்க 'ஒரு இளைஞன்' 'வாசுகி'யிலிருந்து தமிழுக்காக வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் உடனடியாக வரவழைத்துப் பேசியதோடு, உடனடியாக ஒரு மாலை நேரத்தைக் குறிப்பிட்டு, தன் இல்லத்துக்கே அந்த இளைஞனை வரும்படி கூறினார். அது மட்டுமல்ல; ஒவ்வொரு வினாடியும் அவரை அரசியல் பிரச்சினைகள்

பற்றி இழுத்துக் கொண்டிருக்கும்போது, தமிழ் இலக்கியத்துக்காக அந்தத் தலைவர் சுமார் 2 மணி நேரம் பொறுமையாகத் தன் நூல்களைத் தானே புரட்டி 'மாணிக்க வரி'களைத் தேர்ந்தெடுத்துத் தந்தார்.

அடடா! பாண்டியன் சபையில் கண்ணகி வீசிய சிலம்பின் மாணிக்கப் பறல்கள் துள்ளி எழுந்து பாண்டியன் நெடுஞ்செழியனின் வாயை அடைத்தது போல், அவர் தேர்ந்தெடுத்து தந்த மாணிக்க வரிகள் என்னை மட்டுமல்லாது, தமிழ்கூறும் நல்லுலகத்து வாசகர்கள் அனைவரையுமே பிரமிப்பில் வாயடைக்கச் செய்து விட்டன. ஆம்; இதுவரை 'வாசுகி'யில் வெளியான 'மாணிக்க வரிகள்' பகுதிகளில் மகத்தான வரவேற்பைப் பெற்றது, கலைஞரின் 'மாணிக்க வரிகள்' தாம்!

அவற்றைப் போற்றியவர்கள் எல்லாருமே தி.மு.க.வினர் தான் என்று கூறமுடியாது. கழகத்துக்குச் சம்பந்தமே இல்லாத பல தமிழ் நெஞ்சங்களும் வியந்து வியந்து எழுதியிருந்தார்கள். அப்போதுதான் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது.

கலைஞர் என்ற தலைவர் வேண்டுமானால், தி.மு.கழகத்தின் தனி உடைமையாக இருக்கலாம். ஆனால் அவருடைய தமிழ் இலக்கியம், கட்சி எல்லைகளைத் தாண்டி தமிழ் நெஞ்சங்களையெல்லாம் ஈர்த்து அரசோச்சுகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்திய அரங்கிலும், ஏன் உலகநாடுகளிலும்கூட - பல இலக்கியவாதிகள் அரசியலில் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். (முன்னாள் பாரதப் பிரதமர் நேருஜிகூட எழுத்தாளர் தான்) ஆனாலும், வேறு எவரும் தன் அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியிலும், கலைஞரைப் போல - ஒரு தவமாக இலக்கியத்தைப் பேணி வளர்க்கவில்லை. அந்த அம்சத்தில் உலகத்திலேயே, தனி வரலாறு படைத்தவர் கலைஞர்தான்; கலைஞர் ஒருவர் மட்டுமே!

எனவே, அவருடைய இலக்கியத் தமிழை ரசிக்கும் இந்தத் தமிழ் நெஞ்சத்தின் ஓர் ஆவல் -

சிறந்த இலக்கியவாதி ஒருவரின் தலைமையில் ஒரு குழு அமைத்து கலைஞரின் இலக்கியத்திறன் மிக்க படைப்புகளை மட்டும் தனியாகத் தொகுக்க வேண்டும். அவருடைய எழுத்துக்களில் கலந்திருக்கும் 'நடப்பு அரசியல்' விஷயங்களைப் பிரித்துவிட்டு, இலக்கிய வலிமை பெற்ற பகுதிகளை மட்டும் தொகுக்கும் இலக்கியத்தெளிவுள்ளம் கொண்டவர்கள் அப்பணியை நிறைவேற்றினால், பிற்காலத் தமிழ்ச் சந்ததியருக்கு ஓர் அரிய தமிழ்ச்செல்வம் கிடைக்கும். மற்றவர்கள் அப்பணியைச் செய்ய முடியாமல் மலைத்து நின்றால், கலைஞரேதான் அதைச் செய்ய வேண்டும். அவரால் முடியும்!

- ***"உள்ளத்தைக் கிள்ளியவர்கள்"*** என்ற நூலிலிருந்து.




**பாமணி உரத்தொழிற்சாலை**

"திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில், பாமணி உரத்தொழிற்சாலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1971 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை மூலம் நிறுவப்பட்டுள்ள உரத்தொழிற்சாலை இதுமட்டுமேயாகும்.

*இந்த தொழிற்சாலை திருவாரூரிலிருந்து 30 கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இதில் போடப்பட்டுள்ள மூலதனம் ரூ.27.22 இலட்சம். இங்கு 124 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.92.02 இலட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது.*

*1996-97இல் பாமணி உரத் தொழிற்சாலையின் உற்பத்தி 22,880 மெட்ரிக் டன் ஆகும்.*



★ **பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தீவிரமாகக் கண்காணித்துத் தடுக்கவேண்டும்;**

★ **ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் மாநிலத்தில் 50 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட வேண்டும்;**

★ **எல்லாத் தரப்பு மக்களின் ஒத்துழைப்புடன் மக்கள் இயக்கமாக மாற்றி சுதந்திரப் பொன்விழா ஆண்டு முடிவிற்குள் தீண்டாமையை அறவே நீக்க நடவடிக்கை !**

*சென்னை - தலைமைச் செயலக வளாகம் - நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு 6-6-98 அன்று நிறைவுற்றது. நிறைவுரையாற்றிய பின், இம் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் வழங்கினார். அவை வருமாறு:*

சிறைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதற்கு வேண்டிய கூடுதல் நிதியை அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

மதில் சுவர்களை உயர்த்துதல், மதில் சுவர் மீது மின்கம்பி அமைத்தல், பார்வையாளர்கள் அறைகளை மேம்படுத்துதல், குளோஸ் சர்க்யூட் டிவி.(Close Circuit T.V.)அமைத்தல் ஆகிய பணிகள் விரைந்து செய்யப்படும். பாளையங்கோட்டை சிறையை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குற்றங்களைக்கண்காணிக்கும் பணி தீவிரப்படுத்தப்படும். இதில் மாவட்ட கண்காணிப்பாளர்களின் பணி மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும். கணிப்பொறியில் குற்றவாளிகளைப் பற்றிய அனைத்து தகவல்களும் (Data Base) பதிந்து வைக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

**காவல்துறையை நவினப்படுத்த ஆய்வு**

காவல்துறையை நவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

குற்ற விவரங்கள் (Crime Data) வாகனங்கள் பற்றிய விவரங்கள், குற்றப்பத்திரிகை விவரங்கள் (Data on Punishment Role) ஆகியவற்றை உடனுக்குடன் கணிப்பொறி மூலமாகப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

சென்ற ஆண்டு 1,500 வாக்கி-டாக்கி கருவிகள், 840 நுண்ணலைக் கருவிகள் 6 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. இவை பயனுள்ளவையாக இருப்பதால், மேலும் இவற்றைத் தேவையான அளவு வாங்க இந்த ஆண்டு நிதிஒதுக்கீடு செய்யப்படும்.

காவலர்களுக்கான வீடுகள் கட்டும் பணி ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளையும், காவலர் வீடுகளை பழுது பார்க்கும் பணிகளையும் விரைந்து செய்யும்படியும், இந்த ஆண்டு 4,000 வீடுகள் கட்டி முடிக்கவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

காவலர் குடியிருப்புகளில் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதிலும், மேம்படுத்துவதிலும் சிறப்புக் கவனம் செலுத்தும்படி காவல்துறை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத்தீவிரமாகக் கண்காணித்து இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

**கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை**

கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்க அனைத்து மாவட்டத்திலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. முதல் கட்டமாக செங்கல்பட்டு காவல் மாவட்டம் முழுவதும் கள்ளச்சாராயம் இல்லாத மாவட்டமாக மாற்றிட D.I.G., S.P. முதலிய அலுவலர்கள் முயற்சி செய்து வெற்றியடைய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

காவல்நிலைய சாவுகள் இல்லை என்ற நிலை தொடர வேண்டும்.

காவல்நிலையங்களை, காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் ஆய்வு செய்து பணிகளை மேம்படுத்த வேண்டும். மேலும், அடிக்கடி காவல் நிலையங்களுக்குச் சென்று (visit) அப்பகுதியில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

சில கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குவளை என்றும், மற்றவர்களுக்கு ஒரு குவளை என்றும் இரு குவளைகள் வைத்து டீ கடைகளில் தேனீர் கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது.

சுதந்திரப் பொன்விழா ஆண்டில் இக்கொடிய பழக்கம் நீக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எடுக்கவேண்டும் என்றும், இக்கொடிய பழக்கத்தை அகற்றிட இதை ஒரு மக்கள் இயக்கமாக எல்லாத் தரப்பு மக்கள் ஒத்துழைப்புடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்திடவேண்டும் என்றும், தேவைப்படும் இடங்களில் சட்டத்தின் துணையுடன் இக்கொடிய பழக்கத்தை நீக்கிட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நடவடிக்கை எடுத்து இந்தப் பொன்விழா ஆண்டு முடிவதற்குள் இக்கொடிய பழக்கத்தை அறவே நீக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தொகுப்பு வீடுகளுக்கு ப் பயனாளிகள் தேர்வு செய்வதில் சில ஊராட்சிகளில் சில தவறுகள் நடப்பதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பயனாளிகள் தேர்வு செய்வதில் தவறுகள் நடக்காமல் தடுத்திட பயனாளிகளுக்கு பட்டா கிடைத்த முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

**தொகுப்பு வீடுகள் வழங்குவதில் தவறு நடந்தால் நடவடிக்கை**

தொகுப்பு வீடுகள், சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகிறது. அதில் எந்தத் தவறும் நடப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும், இதில் தவறு செய்யும் ஊராட்சிகள் மீது தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சாதி மற்றும் மதக் கலவரங்களினால் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இது மாநில நிதி ஒதுக்கத்திலிருந்து செய்யப்படவேண்டிய பணி என்ற அடிப்படையிலும், உடனடியாக நிவாரணத் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்திடவும் மாநில நிதி ஒதுக்கீட்டிலிருந்து (Budget allocations) நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம சபைகள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே முக்கியமான இடத்தைப் பெறுகிறது. கிராம சபை, அந்தக் கிராமத்திலுள்ள வாக்காளர்கள் கூடி, ஊரின் பொதுத் தேவைகள் பற்றி விவாதித்து செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் பற்றி முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

**கிராம சபை கூட்டம் நடத்த விதிகளில் திருத்தம்**

மாநாட்டில், கிராம சபைகள் கூட்டம் நடத்துவதற்கு போதிய "கோரம்" வருவதில்லை; அதாவது, மொத்த வாக்காளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதைக் கணக்கில் கொண்டு, சென்ற கூட்டத்தொடரில் சட்டப்பேரவையில், கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின் மூலம், மொத்த வாக்காளர்களில் 10 சதவிகிதத்தினர் கிராம சபைக்கு வந்தாலே கூட்டம் நடத்தலாம் என்ற வகையிலே விதிகளில் திருத்தம் செய்ய வழி செய்யப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டங்கள் கூட்டுவதை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்**

ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விரைவில் வழங்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது.

ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட மொத்தம் 3,032 குடியிருப்புகளில், ஏற்கெனவே 465 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998-99ஆண்டு மேலும் 750 ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு ரூ.38 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட மீதமுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் இரண்டாண்டுகளுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்படும்.

மாவட்டங்களில் போதுமான பொறியாளர்கள் இல்லாமையால், குடிநீர் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதாக சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறிப்பிட்டனர். இப்பிரச்சினைத் தீர்க்கும் பொருட்டு 100 உதவிப் பொறியாளர்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நேரடியாகத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

பம்மல், அனகாபுத்தூர், நாகல்கேணி ஆகிய பகுதிகளில் தற்போது 6 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வழங்கப்படுவதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

*"இப்போது, இங்கே இந்த மேடையிலே நான் அமர்ந்து, உங்களிடையே உரையாற்றுகின்ற நேரத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. யாரைப்பற்றி என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. இதுகுறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் அவரைத் தனியாக அழைத்துப் பேசிக் கொள்ளலாம் என்று அதைச் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். ஒரு மாவட்டத்திலே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற ஒரு கலெக்டர், அலுவலகத்திற்குள் வருகின்றவர்களை, "வாடா, போடா" என்றும், ஓரளவுதான் தமிழைக் கற்றுக் கொண்டவராக இருந்ததால், "வாடா, போடா" என்று சொல்லியிருக்கலாம்; ஆனால் ஆங்கிலத்திலும் "கெட் அவுட்" என்று சொல்லியிருக்கிற அளவிற்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் நடந்துகொண்டார் என்பதை ஒரு புகாராக, இது உரிய நேரம் என்று கருதி இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலகத்திலிருந்து வந்த அந்தக் கடிதத்தை நான் படித்து அதை நம்முடைய தலைமைச் செயலாளரிடம் கொடுத்திருக்கிறேன். அவர், உரியவரை அழைத்து தனியாகப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார். நாமா? நாமா? என்று யாரும் கேட்டுக்கொள்ளத் தேவையில்லை. அதைப் பேசியவர் உணர்வார் என்று கருதுகிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் இதைச் சொல்லத் தேவையில்லை. யாராவது அப்படிப்பட்ட மனப்பாங்கை வளர்த்துக் கொண்டிருந்தால், அதைவிட்டுவிட்டுத் தோழமை உணர்ச்சியோடு எல்லோரிடமும் பழகியாக வேண்டும்."*

**- கலைஞர்**

**(6-6-98 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய நிறைவுரையிலிருந்து.)**

"இப்போதுள்ள விஞ்ஞான வளர்ச்சியில் எவ்வளவோ, முன்னேற்றங்கள் வந்துள்ளன. கார்டில் எழுதி, கவரில் எழுதி, இங்கேயிருந்து பதிலைப் பெற்று, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் அதற்கு ஒருவார காலமாகும். அதனால், தொலைபேசியிலே நீங்கள் தொடர்பு கொண்டு என்ன செய்யவேண்டுமென்று கேட்டு அறிவுரைகளைப் பெறலாம். அவைகளைப் பெற்றவுடன், நடவடிக்கை எடுத்தால், போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு கிராமமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பணியாற்றுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தத் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க முற்படுவீர்களேயானால், நாம் நம்முடைய காலத்திலே மாபெரும் சாதனை செய்தவர்களாக இருப்போம்."

- கலைஞர்

(6-6-98 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய நிறைவுரையிலிருந்து.)

உடனடியாக பம்மல், அனகாபுத்தூர், நாகல்கேணி ஆகிய பகுதிகளில் லாரி மூலமாகக் குடிதண்ணீர் வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

நிரந்தரத் தீர்வு காண செம்பரம்பாக்கம் ஏரி பகுதியிலிருந்து குடிநீர் ஆதாரம் ஏற்படுத்திட ஆய்வு செய்யவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க என்ன செலவானாலும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட ஆறுகளில் குடிநீர் ஆதாரங்கள் அமைந்துள்ளன. எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் ஆதாரங்கள் உள்ளனவோ அதைச் சுற்றி ஒரு அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மணல் குவாரி எடுக்கக் கூடாது என்று ஆணையிடப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உரிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால், பணிகள் பட்டியல் கேட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டது.

எப்பொழுது கடிதம் அனுப்பப்பட்டது, எப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பதில் வந்தது என்ற விவரங்களைத் தொகுத்து முதலமைச்சருக்கு அனுப்ப வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பணிகளை நிறைவேற்றுவதற்கு, மாவட்ட ஆட்சியருக்கும் பொறியாளர்களுக்கும் என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ, அவை அனைத்தும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் பொருந்தும்.

மாவட்ட ஆட்சியர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து 1997-98 வரையிலான அனைத்து நிலுவைப் பணிகளையும் 30-9-98க்குள் முடிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வினை முனைப்போடு மேற்கொண்டு அனைத்து குடிநீர் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும் ஆய்வு செய்யவேண்டும். மேலும் நடப்பு ஆண்டில் மழைக் காலங்களில் பணியை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களையும் கவனத்தில் கொண்டு அனைத்து நடப்பாண்டு திட்டப் பணிகளையும் திட்டமிட்டு குறிப்பிட்ட கால அட்டவணைப்படி இந்த நிதி ஆண்டிலேயே முடிக்கப்பட வேண்டும்.

சிறுசேமிப்பு இலக்கு இந்த ஆண்டு ரூபாய் 1,400 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 1,500 கோடி வசூலித்தால் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு சுமார் ரூபாய் 1,000 கோடி கடனாகப் பெறலாம். இந்தத் தொகை மாநிலத்தில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதில் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு, சிறுசேமிப்புத் திட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இலக்கை எய்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறும் நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் தவறு செய்தால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் மற்றும் சில நிர்வாகப் பிரச்சினைகள் இருப்பது பற்றி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையில், உடனடியாக தவறு செய்யும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஆகஸ்ட் 15-க்குள் 50 சமத்துவபுரங்கள்

"சமத்துவபுரம்" மிகுந்த எதிர்பார்ப்புடன் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். எனவே, இதன் அடிப்படைக் குறிக்கோளை உணர்ந்து இந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் வெற்றிகரமான செயலாக்கத்தின் மூலம் 1998 ஆகஸ்டு 15க்குள் 50 சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டுமனைகள் வழங்குவதோடு, பயனாளிகள் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான உதவிகளை வழங்கிடவும், அவர்கள் வீட்டுப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும் மாவட்ட ஆட்சியர் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

மூவலூர் மூதாட்டி நினைவு ஏழைப் பெண்கள் திருமணத்திற்காக 10,000 நிதியுதவித் திட்டத்தில் சிறு தவறும் நடக்காமல் எச்சரிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக் கொள்வதோடு இதில் இடைத் தரகர்கள், தவறுகள் செய்யும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ★

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தீராவேட்கையைத் தீர்க்க வழிகோலுவதுதான் பால் பெருக்குத்துறை. வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு, பட்டி தொட்டி எல்லாம் பால் உற்பத்தியைப் பெருக்கி, தரமான பாலுக்கு நிறைவான விலை என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது; வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களின் வாழ்வில் ஒளி பிறக்கக் "கறவை மாடுகளைப் பேணுதல்" என்பதை திருவாரூர் துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் செயல்படுகிறது.

ஆலம் விழுதுகளாய் ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் நிறைந்திருக்க வேண்டும்! - என்பது குறிக்கோள். இம்மாவட்டத்தில் 20 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது செயல்படுகின்றன.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற "அமல் திட்டம்".

ஆனால் இங்கு பால் கூட்டுறவாளர்கள் தழுவி நின்றதோ பறந்து விரிந்த பல வருவாய்க் கிராமங்களின் பாலினைக் கொள்முதல் செய்ய ஆலமரம் போன்ற ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஏனெனில், எண்ணிக்கையில் 20 செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள். ஆனால் சங்கங்கள் கொண்டுள்ள கறவைக் களங்களின் எண்ணிக்கை 360 ஆகும். 360 கறவைக்களங்களும் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகச் செயல்படும் தன்னிறைவு உண்டு.

# திருவாரூர் மாவட்டத்தில் பால் பெருக்குத்துறை

**ஆர். பாலகிருஷ்ணன்,** பி.எஸ் சி,
துணைப் பதிவாளர் (பால்வளம்), திருவாரூர்.

குடவாசல் ஒன்றியம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், வலங்கைமான் ஒன்றியம், நன்னிலம் ஒன்றியம் ஆகியவற்றில் வருவாய்க் கிராமங்கள் வாரியாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் மனதில் துணைத்தொழில் என்ற உணர்வைப் போக்கி, இது ஒரு தலையாய தொழில் என்ற பேருணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசால் வகுக்கப்பட்ட செயல்திட்டங்கள் செயலாக்கம் பெற, பயனாளிகளைப் பயனுள்ள முறையில் அரசுத் திட்டங்கள் சென்றடைய வென்றே துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம் திருவாரூரில் தொடங்கப்பட்டது.

"சோழநாடு சோறுடைத்து" என்ற மொழியை மெய்ப்பிக்கும் நஞ்சை மகள் கொஞ்சி விளையாடும், மனுநீதிச்சோழனின் தலைநகராம் திருவாரூரைத் தலைமை இடமாகக் கொண்டு, திருவாரூர் மாவட்டத்தைச் செயல் எல்லையாகக் கொண்டு



இச்செயல் சீர்பெறக் காரணமானவர் - திருவாரூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வைத்த திருவாளர் இராஜரெத்தினம் என்பார் ஆவார். இவருடைய செயல்திறன் மூலம் 47 கறவைக் களங்களை அமைத்து பால் உற்பத்தி செய்ய வழிவகுத்தார். மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைக் "காந்தியின் தொண்டன்" திருவாளர் சுவாமிநாத கொத்தனார் தொடங்கிவைத்தார்; அவரே 150 கறவைக் களங்களை அமைத்து, பால் உற்பத்திக்கு வித்திட்டார். இவ்வண்ணமே நன்னிலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 28 கறவை மையங்களையும், நீடாமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 77 கறவை மையங்களையும் எடமேலையூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 43 கறவை மையங்களையும் கொண்டு பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மற்ற சங்கங்கள் 15 கறவைக் களங்களில் பால் எடுத்துவருகிறது. "பால் பெருக்கும் திட்டம்" என்றால், பெரியவர் "குரியனை" மறக்க முடியாது. குஜராத்தில் அவர் கண்ட திட்டமோ வருவாய் கிராமத்திற்கு ஒரு

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்ற அடிகளை மெய்ப்பிக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பால் உற்பத்தியாளர் நலன் மற்றும் நுகர்வோர் நலன் காத்து, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தரமான பாலைக் கொள்முதல் செய்து, தரமான பாலை விற்பனை செய்துவருகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு வேண்டிய தீவனம், பசும்புல் கரணைகள், கால்நடை மருத்துவ வசதி, சினை ஊசிபோடுதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களைச் செயல் எல்லையாகக் கொண்டுள்ளது.

"கொள்வதும் மிகைகொளாது கொடுப்பதும் மிகைகொடாது" என்ற கம்பனின் வார்த்தைகளை நெஞ்சிலே நிறுத்தி, பால் உற்பத்தியாளர்களிடத்தில் தன்னிறைவை ஏற்படுத்தி, பொருளாதார மேம்பாடு அடைய தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் சீரிய பணி ஆற்றி வருகிறது. திருவாரூர்

திருக்குவளைக்கு - கலைஞர் அவர்களின் அழைப்பிற்கிணங்க வந்து, அந்நாள் முதல்வர் திரு.எம்.பக்தவத்சலம் அவர்கள் திறந்துவைத்த தாய்சேய் நல விடுதி.



மாவட்டத்தில் சராசரியாக 10,000/- லிட்டர் பால் தினந்தோறும் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் நாள்தோறும் சராசரி பால் உற்பத்தி 23,000 லிட்டர் ஆகும்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எய்தும் நிகர லாபத்தில் 50 சதவிகிதம் மீண்டும் பால் வழங்கும் உறுப்பினர்களுக்குப் பிரித்து வழங்கப்படுகின்றன. இலாபத்தில் உறுப்பினர்கள் எடுத்துள்ள பங்கிற்கு இலாப ஈவுத்தொகை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் இலாபம் தனியாரைச் சென்றடையாது. சமதர்மச் சமுதாயத்தின் திறவுகோல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்றால் மிகையாகாது.

தனியார் பிடியில் இருந்து விடுபட்டு, பால் உற்பத்தியாளர்கள் நலன் காத்திட புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்திட வேண்டும். இப்பணிக்குத் தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூன்று மேற்பார்வையாளர்களைத் தனிப்பட ஒதுக்கீடு செய்துள்ளது.

செயலற்ற சங்கங்கள் 18 உள்ளன. கலைத்தலில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 66 ஆகும். கலைத்தலில் உள்ள சங்கங்களைப் புதுப்பிக்கவும், செயலற்ற சங்கங்களைச் செயல்படுத்தவும், திருவாரூர் மாவட்டம் ஆறு சரகங்களாகப் பிரிக்கப்பட்டு, திருவாரூர், மன்னார்குடி திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், வலங்கைமான், நன்னிலம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ஆறு முதுநிலை ஆய்வாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். துணைப்பதிவாளர் (பால்வளம்) திருவாரூர் அலுவலகம் நான்கு பிரிவு உதவியாளர்களையும், ஒரு கூட்டுறவு சார் பதிவாளரையும் கொண்டுள்ளது.

தட்டச்சர், ஈப்பு ஓட்டுநர், கண்காணிப்பாளர் பதவிகள் நிரப்பப்பட வேண்டும். மேற்கண்டுள்ள பணியாளர்களைக் களத்தில் இறக்கி வெண்மைப் புரட்சி கண்டிட இலக்கு நோக்கிச் செலுத்திடத் துணைப்பதிவாளர் (பால்வளம்) தலைமை அலுவலராக உள்ளார்.

இம்மாவட்டத்தில் பால் பெருக்குத்துறை மூலம் இவ்வலுவலகம் 1998 - 99 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் அன்றாடப் பால் உற்பத்தி பெருக்கிட அனைத்து வியூகங்களையும் வகுத்து, பால் பெருக்குத்துறையின் சிறப்பு - ஆணையர் சென்னை - 51 அவர்களால் வழிகாட்டப்பட்டு, செவ்வனே முயற்சித்துவருகிறது.

'ஆவின்' பால், குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பருகும் ஒரு சிறந்த உணவு. குழந்தை பிறக்கும்போது, தாய்ப்பால் உணவுப் பொருளாகிறது; ஆனால் பெரியோர்க்கு இறக்கும் வரையில் ஆவின் பால் தொடர்ந்து உணவுப் பொருளாகிறது என்பது உண்மைதானே!

பெருக்குவோம் பால் உற்பத்தியை!

நாடுவோம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை!

திருவாரூர் மாவட்டம் : **தொழிற்சாலைகள்**

- தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் (TNSC) நவீன அரிசி ஆலை - திருவாரூர்.
- தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலை - சுந்தரக்கோட்டை - மன்னார்குடி வட்டம்.
- நவீன அரிசி ஆலை - மன்னார்குடி
- ஆரூரான் சர்க்கரை ஆலை - வடபாதிமங்கலம்

திருவாரூர் மாவட்டம்:

# பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்!

'டான்வா' திட்ட அங்கம் - 2

திருவாரூர் மாவட்டத்தில் 1995 - 96ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 25 - 45 வயது உள்ள திருமணமான சிறு/குறு பண்ணை மகளிருக்கு விவசாயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:



**இத்திட்டத்தின் நீண்ட கால நோக்கங்கள்**

1) சிறு,குறு பண்ணைகளில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

2) பண்ணை மகளிரின் ஆக்கப் பூர்வமான பங்கினை அறிந்து கொள்ளுதல்.

3) சிறு,குறு பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்குவதில் பண்ணை மகளிரின் முழுத் திறனையும் பயன்படுத்துதல்.

**குறுகிய கால நோக்கங்கள்**

★ பொருத்தமான விவசாயத் தொழில் நுட்பங்களையும், முறைகளையும் பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப் பயிற்சி அளித்தல்.

★ பயிற்சி பெற்ற பண்ணை மகளிர், பயிற்சி பெறாத பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளித்தல்.

★ நடைமுறையில் உள்ள விவசாய விரிவாக்கப் பணிகளைச் சிறு,குறு பண்ணை மகளிர் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அதிகப்படுத்துதல்.

★ விவசாய விரிவாக்கப் பணிகளைத் திறமையாகப் பயன்படுத்த பண்ணை மகளிரைப் பயிற்றுவித்தல்.

★ வேளாண்மைத் துறையில் பெண் விரிவாக்க அலுவலர் எண்ணிக்கை அதிகப்படுத்துதல்.

**பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப்படுவதன் விதிமுறைகள்**

★ சிறு/குறு பண்ணை மகளிர்.

★ திருமணம் ஆனவர்கள்.

★ வயது - 20 லிருந்து 45க்குள்.

★ சொந்தமாகவோ சாகுபடியிலோ சொந்தமாக நிலம் உள்ளவர்கள்.

★ கற்றுத்தரும் செயல்முறை விளக்கங்களைக் கண்டுபிடித்து பிறருக்கு எடுத்துச் சொல்லவும் திறமை உள்ளவர்கள்.

### கிராமப்புறப் பயிற்சி

ஒவ்வொரு கிராமப்புறப் பயிற்சியிலும் 25 பண்ணை மகளிருக்கு விவசாயம் 10 தொழில்நுட்பங்கள் தொடர்ந்து 5 நாட்களுக்குக் கற்றுத்தருவதுடன் செயல்முறை விளக்கங்களாகவும் செய்து காட்டப்படுகிறது.

### பண்ணை மகளிர் கருத்தரங்கு

4 கிராமப்புறப் பயிற்சிகள் முடிந்தவுடன் ஒரு பண்ணை மாதிரி கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கில் பண்ணை மகளிர் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைக் கூறவும்,விவசாயம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### பண்ணை மகளிர் கருத்தரங்கு

4 கிராமப்புறப் பயிற்சிகள் முடிந்தவுடன் ஒரு பண்ணை மகளிர் கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கில் பண்ணை மகளிர் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைக் கூறவும்,விவசாயம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### தொடர் நடவடிக்கைப் பணி

தொடர் நடவடிக்கைப் பணியில் கிராமப்புறப் பயிற்சி பெற்ற ஒவ்வொரு பண்ணை மகளிரும் 10 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.




### சிறப்புப் பயிற்சி

கிராமப்புறப் பயிற்சி பெற்ற பண்ணை மகளிரிலிருந்து அதிக ஆர்வமுள்ள பண்ணை மகளிர்களைத் தேர்வு செய்து கால்நடைத்துறை, தோட்டக்கலைத்துறை, விதைச்சான்றுத்துறை, விளைபொருள் விற்பனைத்துறை ஆகிய துறை நிபுணர்களைக்கொண்டு ஐந்து நாட்கள் பயிற்சியும், ஒரு நாள் சுற்றுலாவும் அழைத்துச்சென்று, பண்ணை மகளிருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பண்ணை மகளிர் பயிற்சித்திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் —

- கிராமப்புறப் பயிற்சியில் - 375 கிராமப்புறப் பெண்களும்
- பண்ணை மகளிர் கருத்தரங்கில் - 375 கிராமப்புறப் பெண்களும்
- சிறப்புப் பயிற்சியில் - 90 கிராமப்புறப் பெண்களும்
- தொடர் நடவடிக்கைப் பயிற்சியில் - 4500 கிராமப்புறப் பெண்களும்

பயிற்சி பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் நெற்பயிரில் எழுபது சதவிகிதம் கூடுதல் மகசூல் பெற்றுப் பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் பயனடைந்து உள்ளனர். ★

## திருவாரூர் மாவட்டம்:

காவிரி வடி நில, துணைக் கோட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தின் நன்னிலம், குடவாசல் வட்டங்கள் அடங்கும் பகுதியில் உள்ள 37,337 ஏக்கர் நிலங்கள் அரசலாறு, நாட்டாறு மற்றும் நண்டலாறு ஆகிய ஆறுகளின் மூலம் பாசனம் பெறுகின்றன.

திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட, பேரளம் துணைக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

ஆறுகள், வடிகால்களும் திருவாரூர் மாவட்டத்தில் அவை பயணம் செல்லும் தூரங்களும் பற்றிய விவரம் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| அ. | அரசலாறு | : | 46 கி.மீ. |
| ஆ. | நாட்டாறு | : | 37 " |
| இ. | நூலாறு | : | 18 " |
| ஈ. | வாஞ்சியாறு | : | 20 " |
| உ. | நண்டலாறு | : | 11 " |
| ஊ. | தென்கோரையாறு | : | 12 " |
| எ. | வடகோரையாறு | : | 11 " |

- கடைசி மூன்றும் வடிகால்கள் ஆகும்.

பாசன வாய்க்கால்கள் : 98 எண்கள் 204.78 கி.மீ. ஆகும்.

மேற்கண்ட ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள், காடுகள் போல வளர்ந்துள்ளதாலும், பாசன ஆதாரங்கள் நீண்ட பல ஆண்டுகளாகத் தூர்வாரிப் பராமரிக்கப்படாததாலும், சில சமூக விரோத சக்திகளின் ஆக்கிரமிப்புகளாலும், தூர்ந்து போய், விவசாயக் காலங்களில் சரிவர தண்ணீர் கிடைக்காததாலும் மழைக்காலங்களில் வெள்ள நீர் வடியாமலும்,



பயிர்கள் சேதமடைந்து, விவசாயிகள் இருவழிகளிலும் பாதிப்புக்குள்ளாகி நட்டமடைகிறது. இதைத் தவிர்க்க அரசு எடுத்த சீரிய முயற்சிகள் காரணமாக, திருவாரூர் மாவட்டத்தில், பேரளம் துணைக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின், வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாகவும், பொதுப் பணித்துறையின், ''இயந்திரங்களைக் கொண்டு தூர் அகற்றும் பணிகள்'' மூலமாகவும், தூர் அகற்றிச் சீர் அமைக்கும் பணி, 1997-98 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அவற்றில் 1.7.98 முதல் கீழ்க்கண்டவாறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

# காவிரித்தாயின் கால்படும் இடங்கள்

### வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்

பேரளம் துணைக்கோட்டத்தில் 18.60 கி.மீ. நீளமுள்ள, 6 வாய்க்கால்களில், 2291 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாயில் ரூ.10,28,000 மதிப்பீட்டில், தூர் அகற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 88 கி.மீ. நீளமுள்ள 19 வாய்க்கால்களில் 7550 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாயில், ரூ.53,25,000 மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன.

மேலும் 34.30 கி.மீ. நீளமுள்ள 6 வாய்க்கால்களில் 2710 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற ரூ.19,82,000 மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 62.70 நீளமுள்ள 13 வாய்க்கால்களில், 6105 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற ரூ.34,20 ,000 க்கு மதிப்பீடுகள் தயாரித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பட்டியலும், ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் செய்து முடிக்கப்படும்.

இயந்திரங்கள் கொண்டு, பொதுப்பணித்துறையின் மூலம் தூர் அகற்றும் பணிகள் வருமாறு:

பேரளம் பிரிவில் 4.80 கி.மீட்டரில் ஆறுகளும் 27.80 கி.மீ. நீளத்தின் வடிகால்களும் 7.00 நீளத்திற்கு வாய்க்கால்களிலும் இயந்திரங்கள் கொண்டு, ரூ.65,90,000 மதிப்பீட்டில் தூர் அகற்றும் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் துவக்கப்பட உள்ளன. இதன் 14.860 ஏக்கர் நிலங்கள் முழுமையாகப் பாசன வசதி பெறுவதுடன் மழை, வெள்ளக்காலங்களில் பாதிப்புகள் மிகவும் குறைந்துவரும்.

இதுவரை முடிக்கப்பட்ட பணிகள் மூலம் வடிகால்கள், வாய்க்கால்களில், தூர் அகற்றி, அகலப்படுத்திக் கொடுத்துள்ளதால் விவசாயிகள் மிகவும் பயன் அடைந்துள்ளதால், அவர்கள் நேரிடையாகவும் ஊராட்சி மன்றங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றியும் தங்களது நன்றியையும் பாராட்டுக்களையும் அரசுக்குத் தெரிவித்துவருகின்றனர். ★



# கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் இந்த ஆண்டு முதல்

# கிராமப்புற மாணவர்களுக்குப் பதினைந்து சதவிகித இடஒதுக்கீடு

## கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் உரை

"தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைக்கின்ற அரிய வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த நல்ல விழாவிற்குத் தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையேற்று உரையாற்றியிருக்கின்றார். அவர் இந்த விழா நிகழ்ச்சிக்கு ஒப்புதல் அளித்து தலைமையேற்க வருகை தந்ததற்காகத் தமிழக அரசின் சார்பிலும், இந்த மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பல்கலைக்கழகம் 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டதாகும். இந்தப் பல்கலைக்கழகம் சென்னை மாநகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டபோது, அன்றைக்கு ஆளுநராக மேதகு அலெக்சாண்டர் அவர்கள் இருந்தார். இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் நம்முடைய அம்மையார் செல்வி பாத்திமா பீவி அவர்கள் ஆறுதலாக இருப்பது மிகமிகப் பொருத்த முடையதாகும்.

ஏனென்றால் நாட்டில் மத ஒற்றுமை தேவை என்று நாம் விரும்புகின்ற நேரத்தில், அன்றைக்குக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் கவர்னராக இருந்தார். இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த பெருமாட்டி பாத்திமா பீவி அவர்கள் தமிழக ஆளுநராக இருக்கின்றார். எப்போதுமே தமிழ்நாடு இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரையும் சமத்துவமாகக் கருதுகின்ற ஒரு மாநிலம் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற வகையில் இந்த இரு நிகழ்ச்சிகளும் இன்றைக்குக் காட்சி தருகின்றன.

### ஆசியாவிலேயே முதல் பல்கலைக்கழகம்

அன்றைய தினம இந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிவைத்தபோது ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்காக அமைக்கப்படுகின்ற முதல் பல்கலைக்கழகம் என்கின்ற சிறப்புச் செய்தி நாடெல்லாம் வெளியிடப்பட்டது. அத்தகைய சிறப்புக்குரிய இந்தப் பல்கலைக்கழகத்தை அதனுடைய தலைமையகத்தை மாதவரத்தில் திறந்துவைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஒருவேளை, மாடு - வரம் என்பதுதான் மாதவரம் என்று திரிந்து ஆயிற்றோ என்று எனக்கு விளங்கவில்லை. அத்தகைய மாதவரத்திலே இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் உருவாகியிருப்பது எல்லா வகையிலும் சாலச் சிறப்புடைய ஒன்றாகும்.

சற்றேறப்ப ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயில் இந்த அழகான ரம்யமான கட்டடம் - நவீனமான கட்டடம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கட்டடத்தை உருவாக்கிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் 94-ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின் படி பசுமாடுகளுடைய எண்ணிக்கை 90 இலட்சம், எருமைகளுடைய எண்ணிக்கை 29 இலட்சம், செம்மறியாடுகளுடைய எண்ணிக்கை 56 இலட்சம், வெள்ளாடுகளின் எண்ணிக்கை 58 இலட்சம், பன்றிகளின் எண்ணிக்கை 6 இலட்சம், கோழிகளின் எண்ணிக்கை 3 கோடியே 70 இலட்சம். தொடர்ந்து அந்த எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது. இவ்வாறு வளர்ந்துவருகின்ற கால்நடைகள் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

இங்கே அமைச்சர் பேசும்போது, கால்நடைகள் மீது நான் கொண்டுள்ள கருணையின் காரணமாக இந்த மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். அதில் ஒரு பாதிதான் உண்மை. ஒரு பாதி உண்மையல்ல. கால்நடைகளை வளர்ப்பதற்காகவும், கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களைத் தீர்ப்பதற்காகவும் மருத்துவப் பல்கலைக்கழகம் என்றாலும்கூட, அவைகளை வளர்த்து மக்களுக்கு உணவாக்கிக் கொள்வதற்காகவும் அதற்கான அறிவுபூர்வமான ஆராய்ச்சிகளைச் செய்வதற்காகவும், அவைகளை மேலும் மேலும் எப்படி ஊட்டமாக வளர்க்கலாம் என்பதற்காக அப்படி வளர்த்து எப்படிச் சாப்பிடலாம் என்பதற்காகவும்தான் இந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

### மனிதன் வாழ்வதற்கு !...

உலகத்தில் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பேசும்போது, அதிலே முழுமையாக நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு விடமுடியாது. ஏனென்றால் உலகத்தின் இயல்பே ஒரு ஜீவனை வதைத்துத்தான் இன்னொரு ஜீவன் வாழ வேண்டியிருக்கின்றது. மனிதர்களே கூட மனிதர்களை அடிக்கின்ற காலமிது. ஆனால், ஒரு உயிரைக் கொன்று இன்னொரு உயிர் வாழவேண்டிய தவிர்க்கமுடியாத நிலை இருக்கின்றது. உயிர்களை வதைக்கக் கூடாது, கொல்லக்கூடாது என்று வள்ளுவர் காலத்திலிருந்து போதிக்கப்படுகின்ற ஒரு அறிவுரை, அன்புரை என்றாலும் கூட மனிதன் வாழ்வதற்குத் தாவரங்கள் மாத்திரம் போதுமானதாக இல்லை. மனிதன் தாவரங்களோடு நின்றுவிடக்கூடாதா ? காய்கறிகளோடு நின்றுவிடக்கூடாதா ? என்ற இந்தக் கேள்வி எழாமல் இல்லை.

இங்கே வந்திருக்கின்ற அமைச்சர்களிலேயே மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வீராசாமி சைவம்தான். ஆனால் பக்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் தமிழ்க்குடிமகனோ, சுந்தரமோ அல்லது செங்குட்டுவனோ, நானோகூட சைவர்கள் அல்ல. வீணாக நாங்கள் மிருகங்கள் மீது அன்பு கொண்டவர்கள், கருணை கொண்டவர்கள் என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை.

ஒருமுறை ஒரு பெரிய மகானுக்கும், எனக்கும் ஒரு தர்க்கமே நடந்தது. அப்போது நான் பதினைந்து அல்லது பதினாறு வயது மாணவன். அந்த மகான் அன்பு என்பதைப் பற்றி உரையாற்ற

ஒரு மண்டபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது அவர் சொன்னார்: "ஆண்டவன் உயிர்களைக் கொன்று தின்பதற்காக உயிர்களைப் படைக்கவில்லை" என்று சொன்னார். அப்படி சொன்னபோது நான் கேட்டேன். "அப்படியானால் ஆண்டவன் சிங்கத்திற்காக, புலிக்காக எந்த உயிரைப் படைத்தார்?" என்று கேட்டேன். இதெல்லாம் விதண்டாவாதம் என்று பதில் வந்ததே தவிர, சரியான பதில் அந்த மகானிடமிருந்து எனக்குக் கிடைக்கவில்லை.

மகான் தொடர்ந்து பேசும்போது, இன்னொன்றைச் சொன்னார். "காய்கறிகளைத் தின்றால்கூட பாவமல்லவா என்று கருணாநிதியைப் போன்ற குதர்க்கவாதிகள் கேட்கக்கூடும். ஏனென்றால் மரங்களுக்கும் உயிர் இருக்கிறதே, அதை ஒடித்துச் சாப்பிடலாமா என்று கேட்பார்கள். முருங்கைக்காயைப் பறித்தால் மரம் சாவதில்லை. மாங்காயைப் பறித்தால் மரம் சாவதில்லை. எனவே இது பாவமில்லை" என்று சொன்னார். நான் அப்போது மாணவப் பருவம் - துடிப்பான பருவம். நான் எழுந்து கேட்டேன். "கீரைத்தண்டை அடியோடு பிடுங்கி சாம்பார் வைக்கிறார்களே, அப்போது என்ன சாகிறது?" என்று கேட்டேன். எனவே, உலகத்தில் உயிர்வாழ, மனித சமுதாயம் தனக்குக் கீழாக உள்ள கால்நடைச் சமுதாயத்தைத் தின்றுதான் வாழ வேண்டியிருக்கின்றது.

**நாட்டின் பொருளாதார வளமும் கால்நடைகளும்**

ஒரு நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார வளம் இவைகளெல்லாம்கூட கால்நடைகளைப் பொருத்தே இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இங்கே எனக்குத் தரப்பட்ட இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய குறிப்பிலே கூட, 89 ஆம் ஆண்டு இறைச்சி உற்பத்தி 3.33 இலட்சம் டன். 97,98 ஆம் ஆண்டு இது 4.4 இலட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? இந்த இறைச்சி எங்கிருந்து வந்தது? இறைச்சி என்று தனியாக ஒரு பொருளா? கற்கண்டு போல, சர்க்கரை போல? அல்ல. ஆகாயத்தில் இருந்து குதித்த பொருளா? அல்ல. இறைச்சி என்பது மாட்டிலிருந்து, ஆட்டிலிருந்து எடுக்கப்பட்டதுதான். அந்த உயிர் கொல்லப்பட்டால்தான் இறைச்சி கிடைக்கும். அந்த இறைச்சி கிடைத்தால்தான் பல உயிர்கள் வாழ முடியும். அப்படி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால்தான் ஒரு நாட்டின் பொருளாதாரமே இந்த இறைச்சியின் வாயிலாக வளம் பெற முடிகிறது, வலுப்பெற முடிகிறது.

மீன் உற்பத்தி கூட 89 ஆம் ஆண்டில் 3.61 இலட்சம் டன்னாக இருந்தது 97-98 ஆம் ஆண்டில் 4.49 இலட்சம் டன்னாக அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் எனக்குத் தரப்பட்ட குறிப்புகள் கூறுகின்றன.

இவைகளெல்லாம் மற்ற உயிர்களைக் கொன்று தின்று அதன் மூலமாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதற்காக, ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு இவைகளெல்லாம் தேவை என்பதற்காகத்தான் தரப்பட்டுள்ள குறிப்புகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்தப் பல்கலைக்கழகத்தைப் பொருத்தவரையில் இந்த அரசின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் வெளிநாடுகளில் இத்தகைய பயிற்சிகளைப் பெறுவதற்குப் பதினான்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ள அரசால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஐதராபாத்திலுள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக் கழகத்தில் 30 கலைப்புல உறுப்பினர்கள் இந்த அரசின் உதவியால் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள். அத்துடன் கணிப்பொறியை இயக்குவதற்கும் நானூற்று ஐம்பது அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொருத்தவரையில் இங்கே நண்பர்கள் பேசினார்கள்; அதிலும் குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர் தண்டாடு தீர்ந்தால் போதும் என்ற வகையில் ஒரு கோரிக்கையை வைத்துவிட்டு நிம்மதியாகப் போய் உட்கார்ந்துவிட்டார். ஆனால்



சென்னை - மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிங்காரவேலர் சிலையை 11.6.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரும் ஏராளமான பொதுமக்களும் இவ்விழாவில் பங்கேற்றனர்.

இந்த அரசைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டில் கடந்த காலத்திலும் சரி, இப்போது இந்த இரண்டாண்டு காலத்திலும் சரி; எத்தகைய திருப்புமுனைகளை உருவாக்கியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாணவர்களின் கோரிக்கை ஏற்பு!**

பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தில் இருந்து வருகின்ற மாணவர்கள் தொழிற் கல்லூரியில் - அது மருத்துவக் கல்லூரியானாலும் அல்லது இஞ்சினியரிங் கல்லூரியானாலும், வேளாண் கல்லூரியாக இருந்தாலும் எந்தத் தொழிற் கல்லூரியானாலும் அல்லது இந்தக் கால்நடை மருத்துவமாக இருந்தாலும், ஒவ்வொன்றிலும் பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த பத்து முதல் நிலை மாணவர்கள் வருவார்களேயானால் அவர்களுக்கு இலவசமாகவே தொழிற்கல்வி முழுமையாக வழங்குகின்ற திட்டத்தை 96-ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகின்ற அரசு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் இந்த அரசு ஒன்றுதான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இந்தத் திட்டத்திற்குக் கால்நடை மருத்துவக் கல்விக்குத் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும், ஆண்டுக்கு 16 ஆயிரத்து 362 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதையும் நான் கூற விரும்புகின்றேன்.

அது மாத்திரம் அல்ல; நகர்ப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களுக்காக மாத்திரம் அல்லாமல், கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களையும் முன்னேற்றும் நடவடிக்கையாகக் கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் கிராமப்புற மாணவர்களுக்கென்று பதினைந்து சதவிகிதம் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அதை மேலும் விரிவாக்கி இன்ஜினியரிங் கல்லூரி மாத்திரம் அல்ல, மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவம், சட்டக் கல்லூரி, வேளாண்மை ஆகிய மற்ற தொழில் கல்விகளிலும் விரிவுபடுத்திட இந்த ஆண்டு முதல் இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் பயனாக இந்த ஆண்டு முதல் பதினைந்து சதவிகிதம் கிராமப்புற மாணவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலும் சேர்க்கப்படுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பொருத்த வரையில் கல்விக்குரிய பயிற்சிக் கட்டணம் ஒரு பருவத்திற்கு 1,500 ரூபாய் என்றிருந்தது. இதைக் குறைக்கவேண்டுமென்று மாணவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று அந்தத் தொகையை 26.9.97 முதல் ஆயிரம் ரூபாயாக இந்த அரசு குறைத்திருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ரூ.25 இலட்சம் வைப்புநிதியில்**
**பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை**

பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை உங்களுக்குத் தெரியும். பட்டுக்கோட்டை அழகிரி பெயரால், பெரியார் பெயரால், அண்ணா பெயரால், காமராஜர் பெயரால் பல பேருந்துகளுக்குப் பெயர் வைக்கப்பட்டு, அவைகளெல்லாம் அகற்றப்பட்டால் தமிழ்நாட்டில் குமுறி எழுந்துள்ள சாதிக் கலவரங்கள் நிற்கும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் எடுத்த முடிவுக்கு இணங்க, அவ்வாறு அகற்றப்பட்ட பெயர்களில் ஒன்று பட்டுக்கோட்டை அழகிரியின் பெயர். அப்படி அந்தப் பெயர் பேருந்து போக்குவரத்துக் கழகத்திலிருந்து அகற்றப்பட்டாலும் அதற்கு ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டு "பட்டுக்கோட்டை அழகிரி அறக்கட்டளை" என்ற பெயரால் 25 இலட்சம் ரூபாய் வைப்புநிதியை ஏற்படுத்தியுள்ளது இந்த அரசு.

திருவாரூர் மாவட்டம்:

## திருவாரூர் மாவட்டத்தில் தீவிர போலியோ சொட்டு மருந்து திட்டம்

7.12.98 அன்று நடைபெற்ற முகாம் மூலம் உதவி பெற்ற பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை (சதவீதத்தில்)

நகர்ப்புறம் - 98.7%

கிராமப்புறம் - 98.5%

18.1.98 அன்று நடைபெற்ற முகாம்களில்

நகர்ப்புறத்தில் - 100.6%

கிராமப்புறத்தில் - 103.7%

இந்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு கல்லூரிக் கட்டணம், பாடப்புத்தகம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றிற்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் 1,500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் படிக்கின்றார்கள். எனக்கு முன்னால் உரையாற்றியவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் அதிலே 368 பேர் பெண்கள். 34 சதவிகிதம். பெண்களுக்கு 33 சதவிகிதத்திற்கு மேல் தரப்பட வேண்டும் என்ற அந்தக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலாக நிறைவேற்றிய மாநிலம் தமிழ்நாடு. நிறைவேற்றிய அரசு இந்த அரசு.

கடந்த காலத்தில் 89-90 ஆம் ஆண்டிலேயே வேலைவாய்ப்புகளில் பள்ளி ஆசிரியர் பதவிகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று ஆணையிட்ட அரசு இந்த அரசாகும். அதற்கொப்ப இந்தப் பல்கலைக் கழகத்தில் கூட இருக்கின்ற 1,500 மாணவ மாணவியர்களில் 34 சதவிகிதம் - அதாவது 368 மாணவியர் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். வரவேற்கத் தக்க ஒன்றாகும் என்பதை எடுத்துக்கூறி, இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தலைமையகத்தைத் திறந்துவைத்ததில் மிகுந்த மகிழ்ச்சியுற்று, அதிலும் இந்த விழா நிகழ்ச்சிக்கு நம்முடைய கவர்னர் செல்வி பாத்திமா பீவி அம்மையார் அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருப்பது மேலும் இந்தத் திறப்பு விழாவிற்கு ஒரு சிகரம் வைத்ததைப் போல அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, அவர்களையும் அரசின் சார்பாக, உங்கள் சார்பாக மீண்டும் மீண்டும் வரவேற்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாதவரத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையகக் கட்டடத்தைத் திறந்துவைத்து 26.5.98 அன்று உரை ஆற்றினார்.



# விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் கலைஞர் உரை

**வி**ழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8-6-98 அன்று திறந்துவைத்து 10,500 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

"இன்று காலையில் இந்த மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதியில் நடைபெற்ற சர்க்கரை ஆலை திறப்பு விழா; அதையொட்டி பல்வேறு அரசு கட்டடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சிகள் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவில் பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு உதவிகள் வழங்குகின்ற விழாவைத் தொடர்ந்து இதே மாவட்டத்தில் இந்த மாலை நேரத்தில் ஏறத்தாழ 37 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவிலான பல்வேறு நலத்திட்டப் பணிகள் மக்களுக்கு அர்ப்பணம் செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டு - இந்த நிகழ்ச்சியில் சிகரம் வைத்தது போல இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகக் கட்டடமும் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தை "மயன் மாளிகை போல இருக்கிறது" என்று சட்டப்பேரவை உறுப்பினர் தமா.காவைச் சேர்ந்த சிவராஜ் குறிப்பிட்டார். நான் மயன்மாளிகையைப் பார்த்ததில்லை. அவர் மகாபாரதத்தில் பார்த்ததாகச் சொன்னார்.

ஏற்றம், எழுச்சி, எழில், வலிவு, பொலிவு இத்தனையும் குலுங்கத்தக்க வகையில் இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகையை அமைத்துள்ள பொறியாளர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுக்கும், இதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்ட போக்குவரத்துத்துறை தம்பி பொன்முடிக்கும் இந்த மாவட்டத்து மக்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

எனக்கு ஒரு பொறாமை. இந்த மாவட்டத்தின் அமைச்சர் பொன்முடி இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை நம்முடைய தம்பி துரைமுருகன் சொன்னதைப் போலப் பதினொரு மாத காலத்தில் திட்டமிட்டு இவ்வளவு விரைவில் அமைத்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இங்கே உரையாற்றிய சிவராஜ் உள்பட அனைவரும் குறிப்பிட்டார்கள். ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்ட கட்டடம், இங்கே அமைக்கப்படும், அமைக்கப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்டு ஐந்தாண்டு காலம் இருந்த ஆட்சியிலே கும்பகர்ண தூக்கம் போட்டவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருந்துவிட்டு, இன்றைக்கு 2 ஆண்டுக்கால ஆட்சியிலே கடந்த ஆண்டு திட்டமிட்டு இந்த ஆண்டு இந்தக் கட்டடம் திறந்துவைக்கப்படுகின்றதென்றால், இதிலே எனக்கு என்ன பொறாமை என்று கேட்டால் - தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து நாகை மாவட்டம் என்றும், தஞ்சை மாவட்டம் என்றும், நான் வளர்ந்த திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவாரூர் மாவட்டம் என்றும் மூன்று மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

### நாகை - திருவாரூர் மாவட்டத்திற்கு விரைவில் கட்டடம்

ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இருக்கின்றது. நாகை மாவட்டத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கேயும் கட்டடம் கட்டப்படவில்லை. திருவாரூர் மாவட்டத்திற்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்படவில்லை.

அங்கே ஒரு அமைச்சர், இந்த மூன்று மாவட்டங்களையும் ஆதிக்கம் செலுத்துகின்ற அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் தம்பி கோ.சி.மணி. அமைச்சர்கள்தான் என்னைக் கேட்டுக்கொள்வது வாடிக்கை. நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். பொன்முடியைப் பார்த்தாவது தயவு செய்து திருவாரூர் மாவட்டத்திலும், நாகை மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களை விரைவிலே அமைத்துத் தருவதற்குத் தம்பி கோ.சி.மணி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களின் சார்பாக நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

### ரூ.2 கோடியில் ஆயுதப்படை வளாகம்

எழிலார்ந்த ஒரு கட்டடத்தை மிகக் குறைவான மாதங்களில் திட்டமிட்டு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அமைத்துள்ள இந்தப் பாங்கினை நான் மிகமிகப் பாராட்டுகிறேன். போற்றிப் புகழ்கிறேன். இன்றைக்கு 4 கோடி ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் அமைந்திருக்கிறது. இத்துடன் 21 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட விழுப்புரம் மாவட்ட நீதிபதி குடியிருப்புக் கட்டடமும் இன்றைக்குத் திறக்கப்பட்டுள்ளது. 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கா.குப்பம், ஆயுதப்படை வளாகமும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது. 25 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திண்டிவனம் அரசு மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடமும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது.

30 இலட்ச ரூபாய் செலவில் அனந்தபுரம், தருவாட்சி, தும்பூர், மணம்பூண்டி, நல்லான்பிள்ளைபெற்றாள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் திறப்புவிழாவும் இன்றைக்கு நடைபெற்றுள்ளது.

7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திண்டிவனம் ஆய்வு மாளிகை கட்டடத்தின் திறப்பு விழாவும், ஐந்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கீழப்பெரும்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்பறைக் கட்டட திறப்பு விழா, 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசுக் கல்லூரி வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழா, 'தாட்கோ' மூலம் 45 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கப்பூர், பில்லூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள 2 ஆதிதிராவிட நலப்பள்ளிகளின் திறப்புவிழா, 27 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலமேடு பெண்கள் விடுதி கட்டடத் திறப்புவிழா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஏறத்தாழ ஆறரைக் கோடி ரூபாய் செலவில் செஞ்சி அனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா, 17 பள்ளிக் கட்டடங்கள், 27 நியாய விலைக்கடை கட்டடங்கள், 3 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், ஆதிராவிட மக்களுக்காக-பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 96 தொகுப்பு வீடுகள், ஒரு நூலகக் கட்டடம், ஒரு பால் குளிரூட்டும் கூடம், 3 சத்துணவுக் கூடங்கள், 4 சமையல் அறைக் கட்டடங்கள் உள்பட 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 170 புதிய கட்டடங்கள் - ஆகமொத்தம் 15 கோடியே 94 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு துறைக்கான கட்டடங்கள் இந்த விழாவிலே திறந்துவைக்கப்பட்டுள்ளன.

## பத்தாயிரத்துக்கு மேல் பயனாளிகள்

ஏறத்தாழ பத்தாயிரத்து ஐநூறு பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்படுகின்றன. எல்லோருக்கும் வழங்க நேரமில்லை என்ற காரணத்தால் அடையாளமாகச் சிலருக்கு மட்டும் மேடையிலே வழங்கப்பட்டிருக்கிறது. விழா முடிந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைக்கு இணங்க மாவட்ட அதிகாரிகள், நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் அவர்களுக்கெல்லாம் உரிய முறையில் அந்தப் பயனாளிகளுக்கு எல்லாம் அந்தத் திட்ட உதவிகளை வழங்கவிருக்கிறார்கள்.

ஒன்றை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தம்பி பொன்முடி பேசும்போது, இந்த வட்டாரத்திற்காக, இந்த மாவட்டத்திற்காக இவ்வளவு காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், காலையிலும் சரி, இப்போதும் சரி, தம்பி சம்பத் உள்பட அனைவரும் மேலும் கோரிக்கைகளை வைத்தாலும்கூட இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள கோரிக்கைகள் எவையெவை என்பதை எண்ணிக் காட்டினார்கள். இதைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு பொன்முடி இங்கே சொன்னார். அரசின் சார்பில் இவ்வளவும் செய்கிறார்கள். ஆனால் நாம்தான் சில நேரங்களில் நன்றி காட்டத் தவறிவிடுகிறோம் என்று குறிப்பிட்டார்.



*மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளினையொட்டி 5. 6. 98 அன்று தலைமைச் செயலக வளாகத்தில் சந்தன மரக்கன்று மற்றும் வேப்பமரக் கன்றினை நட்டார்.*

## நான் இருக்கிறவரை பணிகள் தொடரும்

நான் ஒன்றைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நன்றி காட்டினாலும் சரி, காட்டாவிட்டாலும் சரி; என்னுடைய கடமை; நான் இருக்கின்ற வரையில் இந்தப் பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாண்டுக் காலம் கட்டப்படாமலேயே கேட்பாரற்றுக் கிடந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை ஓராண்டுக் காலத்தில் கட்டி முடித்திருக்கிறோம். இதற்குப் பரிசு என்ன தெரியுமா? மாநிலங்களவையிலே இன்றும் வெளிநடப்புச் செய்கிறார்களாம், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று,கேட்டால் சொல்வார்கள் - 'நாங்கள் ஐந்தாண்டுக் காலம் கட்டாமல் வைத்திருந்த கலெக்டர் ஆபீஸை ஏன் கட்டினாய்? ஆகவே இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்' - என்று இந்த புத்திசாலிகள் சொல்வார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

'நாங்கள் நினைக்கவே எடுத்துக்கொள்ளாத பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகிறார்களே, இவர்களுடைய ஆட்சி இருக்கலாமா? ஆகவே கலைக்க வேண்டும்' - என்று சொல்லுகிறார்களா? என்று எனக்குத் தெரியவில்லை. மக்களுக்காக அல்லும் பகலும் அனுவரதமும் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சி இந்த மாவட்டத்தில் மட்டும் அல்ல; பல்வேறு மாவட்டங்களில், நேற்று நான் திருச்சி சென்றேன். அங்கேயும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; த.மா.கா. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் அங்கே பேசும் போது எவ்வளவு திட்டங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருச்சி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் தொகுத்துச் சொல்லிப் பாராட்டினார்கள்.

இவ்வளவு திட்டங்களும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குறைகள் இருக்கலாம். குறைகள் வேறு; குற்றங்கள் வேறு. குறைகள் இருந்தால் அதைத் திருத்திக் கொள்ளக்கூடிய ஆட்சி உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆட்சி. குற்றங்கள் இருந்தால் அதைத் திருத்தவே முடியாது என்று எனக்குப் பட்டால், நானே பதவியை விட்டு விலகிவிடுவேன் என்ற அந்த உறுதியையும் நான் உங்களுக்குத் தருவேன்.

### சட்டம் ஒழுங்கு எங்கே கெட்டுவிட்டது?

குற்றங்கள் மலிந்த ஒரு ஆட்சியை ஐந்தாண்டுக் காலம் அனுபவித்த மக்கள் தமிழ்நாட்டு மக்கள். அந்த ஆட்சிக்கு உரியவர்களாக இருந்தவர்கள்தான் இன்று டெல்லிப் பட்டணத்தை வலியுறுத்திச் சொல்கிறார்கள், பார்! பார்! தமிழ்நாட்டிலே பாகிஸ்தான் ஊடுருவல் இருக்கிறதென்று. பாகிஸ்தான் ஊடுருவலாம்; சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டு விட்டதாம்.

பாகிஸ்தான் ஊடுருவல் எங்கே இருக்கிறதென்று வாஜ்பாய்க்குத் தெரியாதா? அது காஷ்மீரில் இருக்கிறதா? அல்லது விழுப்புரத்தில் இருக்கிறதா? என்று வாஜ்பாய்க்குத் தெரியாதா? தெரியும் அவருக்கு. காஷ்மீரிலே இல்லாத பாகிஸ்தான் ஊடுருவல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தில் இருக்கிறது. அதற்காகவே காஷ்மீரத்தில் தினம்தினம் களம் அமைகின்றது. ரத்தக்குளம் உருவாகிறது; இது காஷ்மீரத்தின் அன்றாட நடவடிக்கை!

அசாம் மாநிலம் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு, ஒரு செய்தியைத் தந்தது. மாநிலத்திலுள்ள பல்வேறு பாலங்கள் எல்லாம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு, போக்குவரத்தே இல்லாத சூழ்நிலை அசாம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்றது என்று.

அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கு அமைதி வாழ்கின்றதாம்! தமிழகத்திலே வாழவில்லையாம்! இங்கே மதுரையில் கள்ளழகர் வைகையிலே இறங்கும் திருவிழா, இலட்சக்கணக்கான மக்கள் புடைசூழ நடைபெறுகின்றது. எந்தவித அசம்பாவிதமும் இல்லை - ஆனால் இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம். இங்கே திருக்கோவில் குடமுழுக்குகள் எல்லாம் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லை. ஆனால் இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம்!

பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம் ஏன்? அத்தகைய வன்முறை! மதக் கலவரம்! அதன் காரணமாக, ஊரடங்கு சட்டம் போட்டுக் கலவரத்தை அடக்க வேண்டிய சூழ்நிலை. 7 பேர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியுள்ளனர். பலபேர் காயமடைந்து இருக்கிறார்கள் என்ற செய்தி. ஆந்திராவின் ஒரு பகுதியே கலவரப் பகுதியாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறி, இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், குறிப்பாக எதைச் சொல்லுகிறார்கள் என்றால் - அவர்களையும் அறியாமல் மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்கள், தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருப்பதைத் தடுக்கவேண்டும் என்ற தீய நோக்கத்தோடு அவர்கள் செயல்படுகிறார்கள்.

நான் உங்களைக் கேட்பதெல்லாம் - உங்களுக்கு, உங்கள் சந்ததியினருக்கு, உங்கள் வாரிசுதாரருக்கு, உங்கள் மக்களுக்கு, உங்களுடைய எதிர்காலத்திற்குத் தேவையான திட்டங்களைத் தருகின்ற ஒரு ஆட்சி நிலைக்க வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்விக்கு நீங்களே விடை காணுங்கள்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார். ★


## கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

**கும்பகோணம்.**

**மற்ற வணிக வங்கிகளைவிட வைப்புத்தொகைகளுக்குக் கூடுதல் வட்டி வழங்குகிறோம்.**

நகைக்கடன்; அரிசி மில், மாவுமில், எண்ணெய் மில், ஆயத்த ஆடைகள் தயாரித்தல் போன்ற பண்ணை சாராக் கடன்களும் - வீடு கட்ட, வீடு வாங்க, மருத்துவச் செலவு, கல்விச் செலவு போன்றவற்றிற்கு அடமானக் கடன்களும் வழங்குகின்றோம்.

*கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர்! பயனடைவீர்!*

எஸ். நீலமேகன் எம்.ஏ.,
தனி அலுவலர்



# சமத்துவபுரம் மூலம் பெரியார், அண்ணா, காமராசர், காயிதேமில்லத் விரும்பிய சமத்துவம் உருவாக்கப்படும் !

## திருச்சிராப்பள்ளி விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை

திருச்சிராப்பள்ளி-தெப்பக்குளம் பிஷப் ஹீபர் மேநிலைப்பள்ளி வளாகத்தில் 7.6.98 அன்று மாலை ரூ.40 கோடியே 37 இலட்சம் செலவிலான சமத்துவபுரம் திட்டத் தொடக்க விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்புற நடந்தது.

மாண்புமிகு கூட்டுறவு - உணவுத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வை.மூர்த்தி வரவேற்றுப் பேசினார்.

புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசினார். அப்போது அவர் கூறியதாவது :-

"இங்கே நான் திறந்து வைத்துள்ள திட்டங்களின் அடிக்கற்கள் காணப் படுகின்றன. நான் மாவட்ட ஆட்சித் தலைவரையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொள்வது, இந்த அடிக்கற்களை அதற்கான உரிய இடங்களில் பதிய வைத்து, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதை விரைவில் அறிவிக்கவேண்டும்.

### சொன்னதைச் செய்வோம்

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்பது எனக்கு மட்டும் அல்ல; அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உரிய சொற்றொடர் ஆகும். மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றில் உள்ள மக்கள் பிரதிநிதிகளும் உச்சரிக்கக் கூடிய, உள்ளத்தில் பதிய வைத்து உச்சரிக்க கூடிய சொற்றொடர்தான் அது.

இவ்வளவு பெரிய திட்டங்கள் பற்றி விளம்பரப்படுத்தப் படவில்லை என்று முன்னாள் மத்திய மந்திரி முரசொலிமாறன் இங்கே கூறினார். விளம்பரப்படுத்துவது என்பது புகழை எடுத்துக்காட்ட அல்ல. இந்தத் தொகுதி மட்டும் அல்லாமல் இதைப்பார்த்துப் பிறதொகுதி மக்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தவும், அதிகாரிகளும் தங்கள் பகுதிகளில் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் விளம்பரம் பயன்படும். பூக்கடைக்கும் விளம்பரம் தேவைப்படும் காலம் இது. முரசொலிமாறன் பேசியது போல் செய்தித்துறை கூர்மையாகக் கவனித்து பணியாற்றினால்தான் அரசுக்கு மட்டும் அல்ல, மக்களுக்கும் திட்டங்களின் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ள முடியும். விளம்பரமும் தேவைதான்.

ஒன்று படாதவரை யாருக்கும் நல்வாழ்வு இல்லை;
ஒன்றுபட்டுவிட்டால் நமக்கு இணை யாரும் இல்லை.

- காயிதேமில்லத்

**சமத்துவபுரம்**

கல்லக்குடியிலும், பண்ணைப் பட்டியிலும் ஒவ்வொன்றும் ரூ.1 கோடி செலவினதாக சமத்துவபுரம் தொடங்கப்பட உள்ளது. இந்தியாவில் எங்கும் இல்லாத அளவு எல்லாப் பிரிவு மக்களும், எல்லா ஜாதி மக்களும் சமத்துவபுரத்தில் வீடுகளைப் பெற்றுச் சமமாக வாழ்வதுதான் சமத்துவபுரம்.

கடந்த ஆண்டு வேலூர் மாவட்டம் பொய்கை கிராமத்தில் சமத்துவபுரத்துக்கு அடிக்கல் நாட்டினேன். அதை இன்னும் சில நாட்களில் திறந்துவைக்க இருக்கிறேன். அங்கு வீடுகளைப் பெற ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், செட்டியார், முதலியார் போன்ற மேல்மட்ட ஜாதியினர், ஏன் - அய்யர் குடும்பத்தினரும் கேட்டுள்ளனர்.

பொதுவான தெரு, மின்விளக்குகள் ஆகியவை அரசு செலவிலேயே செய்து கொடுக்கப்படுகிறது. மேலும் அவரவருக்குத் தேவைப்படும் வசதிகளை, அவர்களே செய்துகொள்ளலாம். மின்சார மீட்டர் பொறுத்த ஆகும் செலவு ஆயிரம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று நேற்று ஆணை பிறப்பித்து இருக்கிறேன்.

இதுபோன்ற சமத்துவபுரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்கப்படும். இதனால் மதமோதல்கள் அகலும், ஜாதி வேற்றுமை ஒழிக்கப்படும். பெரியார், அண்ணா, காமராஜர், காயிதேமில்லத் ஆகியோர் விரும்பிய சமத்துவம் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைக் கல்லக்குடியிலும், பண்ணப்பட்டியிலும் மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் விரைவில் முடிக்கவேண்டும்.

**திருமண உதவித் திட்டம்**

8-வது படித்த ஏழைப் பெண்களுக்கு மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 1989-ல் ரூ.5 ஆயிரம் வழங்கினோம். இடையில் 5 ஆண்டுகள் அது கிடப்பில் போடப்பட்டது.

1996-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ரூ.5 ஆயிரம் உதவித்தொகையை ரூ.10 ஆயிரம் ஆக உயர்த்தி 61 ஆயிரம் பெண்களுக்கு வழங்கினோம்; இது பயனாளிகளுக்குப் போய்ச் சேரவேண்டும்.

நெல்லுக்கு இறைத்த நீர் சிறிது புல்லுக்கு போனால் பரவாயில்லை. ஆனால் முழுவதும் புல்லுக்கே பாய்ந்தால் பொறுத்துக் கொள்ள முடியாது. சில சமூக விரோதிகள், இடைத்தரகர்கள் அந்த உதவித்தொகையைத் தங்கள் பைக்கு மாற்ற எண்ணுகிறார்கள்.

அதை நான் மன்னித்தாலும், இறைவன் என்று ஒருவன் இருந்தால் மன்னிக்கமாட்டான். அது ஏழைகளுக்கு ஊற்றும் பால்; அதை எடுக்க நினைத்தால் அதுவே பாசானமாக மாறும்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும் வை.மூர்த்தி நல்ல முறையில் பணிகளைக் கவனித்துவருகிறார். அமைச்சர்கள் திரு.நேரு, திரு.செங்குட்டுவன் ஆகியோரும் இந்த மாவட்டத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு உள்ளனர்.

மாநகராட்சி மேயர் புனிதவல்லி பழனியாண்டி அவர்கள் ஏழை, எளியவர் வீடு கட்டுவதற்கு அப்ரூவல் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார். அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படும்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.

**அமைச்சர்கள்**

விழாவில் மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆர்க்காடு வீராசாமி, திரு.கோ.சி.மணி, திரு.தமிழ்க்குடிமகன், திரு. செங்குட்டுவன், திரு.ரகுமான்கான், மாநகராட்சி மேயர் புனிதவல்லி பழனியாண்டி மற்றும் பலர் பேசினார்கள்.

**பாய்லர் ஆலைக்குக் கேடயம்**

முன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தில் அதிக வசூல் செய்ததற்காக பாய்லர் ஆலை கூட்டுறவுச் சங்கத்துக்குக் கேடயம் பரிசு வழங்கினார்.

சமத்துவபுரத்துக்காக பாய்லர் ஆலை சார்பில் ரூ.1 இலட்சத்துக் கான காசோலையை பாய்லர் ஆலை பொது மேலாளர் இராமநாதன் மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கினார்.

விவேகம் என்னும் வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும் !

- கலைஞர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி






பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23


கலைஞர்
அரசும்
காவலர்
நலனும்

# கலைஞர் அரசும்
# காவலர் நலனும்!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
25-5-98 அன்று, சட்டப்பேரவையில்,
காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப்
பதிலளித்து ஆற்றிய உரை.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 13

'தமிழரசு' இலவச வெளியீடு

1-6-1998

வெளியிடுபவர்:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

# கலைஞர் அரசும் காவலர் நலனும்!

*காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து, 25-5-98 அன்று சட்டப்பேரவையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

காவல்துறை மானியத்தின் மீது உறுப்பினர்கள் பலரும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல அரிய கருத்துரைகளை இங்கே வழங்கி இருக்கின்றார்கள். வழக்கம் போல் நான் நீண்டநேரம் இவற்றுக்கெல்லாம் விளக்கம் அளிக்க முடியாத நிலையில் உடல் நலிவோடு இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்கின்றேன். கடந்த இரண்டு நாட்களாக கடும் காய்ச்சல். பேசவே முடியாத அளவிற்கு குரல் நிலை. இருந்தாலும் பதில் உரையை ஒத்தி வைக்கக்கூடாது என்கின்ற முனைப்போடு மருத்துவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக பதில் உரைக்கு என்னை தயார்படுத்திக் கெண்டு இயன்ற வரையில் உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கை புத்தகத்தில் உள்ள சில குறிப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள், செல்லக்குமார், திருநாவுக்கரசு, குமாரதாஸ் ஆகியோர் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள்.

## இந்த ஆண்டு கூட 10 ஆயிரம்பேர் காவல்துறையில் சேர்க்கப்படவுள்ளனர்

அகில இந்திய சராசரி, ஒரு இலட்சம் மக்களுக்கு 134 காவலர்கள் என்று இருக்கும்போது, தமிழ்நாட்டில் 127 காவலர்கள்தான் இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டினார்கள். அதுகூட நாங்களே கொடுத்த குறிப்புத்தான். அதை மறைக்க வேண்டுமென்று கருதாத காரணத்தால் அந்தக் குறிப்பை கொள்கை

விளக்கப் புத்தகத்திலேயே வெயிட்டு இருக்கின்றோம். ஒருவேளை கொடுக்காவிட்டாலும் நீங்களே எப்படியும் கண்டுபிடித்து பேசினாலும் பேசுவீர்கள்.

இருந்தாலும் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்திலே ஒரு இலட்சம் மக்களுக்கு சராசரி காவலர்கள் 101 பேர்தான்; கர்நாடகாவிலே 118 பேர்தான்; கேரளாவிலே 124 பேர்தான், பீகாரில் 84 பேர்தான்; மத்தியப் பிரதேசத்தில் 124 பேர்தான்; ஒரிசாவில் 99 பேர்தான்; உத்திரபிரதேசத்தில் 103 பேர்தான்; மேற்கு வங்கத்தில் 108 பேர்தான்; ராஜஸ்தானில் 119 பேர்தான்; இந்தக் கணக்கை எல்லாம் காட்டி இதற்கு மேல் உயர்த்த முடியாது என்று நான் சொல்லமாட்டேன். மேலும் உயர்த்த வேண்டும் - இங்கே 127 என்று இருப்பது போதாது, மேலும் உயர்த்தவேண்டும் என்பதற்காகத்தான், இந்தஆண்டு 10 ஆயிரம் பேர் காவல்துறையிலே சேர்க்கப்பட இருக்கின்றார்கள் என்பதும் அதற்கான தேர்வுகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 7 கிராமத்திற்கு ஒரு காவல்நிலையம் என்று அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, அது ரொம்ப சுலபம்தான் என்று சொன்னார்கள். எனக்கு வந்த ஆசையில், அவரைக் கொஞ்ச நேரம் உள்துறை அமைச்சராக உட்கார வைத்து, "அதைச் செய்து காட்டுங்கள் பார்க்கலாம்" என்றுகூட கேட்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது.

இப்போது கிட்டத்தட்ட தமிழகத்திலே 1300 காவல்நிலையங்கள் இருக்கின்றன. புறக்காவல் நிலையம், மகளிர் காவல்நிலையம் எல்லாவற்றையும் சேர்த்து. கிராமங்கள் என்று எடுத்துக் கொண்டால், வெறும் பஞ்சாயத்துக் கிராமங்கள் அல்லாமல் - 58 ஆயிரம் கிராமங்கள் - கிராமங்கள் என்ற நிலையிலே உள்ளவைகள் 58 ஆயிரம் இருக்கின்றன. இந்த 58 ஆயிரம் கிராமங்களுக்கும், 7 கிராமத்திற்கு ஒரு காவல் நிலையம் என்றால் 8300-க்கும் மேற்பட்ட காவல்நிலையங்கள் தேவை. இது இப்போது இருப்பதைவிட 6 அல்லது 7 மடங்கு அதிகம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதெல்லாம் பெரும் மலைப்பைத்தான் நமக்கு உண்டாக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

இன்னொன்று, கடந்த காலத்திற்கும், இந்தக் காலத்திற்கும் உள்ள சில வேறுபாடுகளை நம்முடைய திருநாவுக்கரசு, செல்லக்குமார் ஆகியோர் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

கொலைகள் என்ற அந்தக் குறிப்பில் 1995 ஆம் ஆண்டு 93 கொலைகளில் கண்டுபிடிக்கப் பட்டவை 54 ஆக இருக்க, 1997 ஆம் ஆண்டில் 99 கொலைகளில், கண்டுபிடிக்கப்பட்டது 48தானா என்று கேட்டு, 50 சதவீதத்தைவிட இது குறைவு என்று குறிப்பிட்டு, ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்றெல்லாம் அடுக்குமொழியிலே செல்லக்குமார் இங்கே எடுத்துக் காட்டினார்.

ஆனால், நான் பதில்களாக அல்ல, ஒரு விளக்கத்திற்காக சொல்ல விரும்புகின்றேன்; இதை எப்படிப் பார்க்க வேண்டும் என்றால், 95-ஆம் ஆண்டில், அந்தக் குறிப்பையும் நாம் பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, 1996-97 ஆம் ஆண்டு, தரப்பட்ட அந்தப் புத்தகத்தையும் பார்த்தால், 95ஆம் ஆண்டிலே கொலைகள் 93, கண்டுபிடிக்கப்பட்டது 40 என்றுதான் இருக்கிறது. அந்த 40 இப்போது 54 ஆக ஆகியிருக்கிறது. காரணம் அதற்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலத்தான் இப்போது 48 ஆக இருப்பது, இந்த ஆண்டிலே மேலும் அதிகமாகும் என்ற விளக்கத்தை அவருக்கும், அதைப் போலவே பேசிய மற்றவர்களுக்கும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன். 40, 54 ஆக ஆகியிருக்கிறது. இப்பொழுது 54 என்று சொல்லப்படுவது 95-ல் 40 ஆகத்தான் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டவைகள்; அது இப்போது 54 ஆக ஆகியிருக்கிறது. அதைப்போல் 48 என்று இருப்பது இந்த ஆண்டில் மேலும் அதிகமாகும் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெரிய திருட்டுக்கள் 17,349 என்று இருந்தது இப்போது 18,511 என்று உயர்ந்துவிட்டது என்று திரு.செல்லக்குமார் இங்கே குறைப்பட்டுக் கொண்டார். இதை வரிசைப்படி பார்த்தால், 62-ஆம் ஆண்டு 20,252 ஆக இருந்தது; 64-ல் 20,880 ஆக இருந்தது; 65-ல் 20,007 ஆக இருந்தது; 66-ல் 22,612 ஆக இருந்தது. இப்போது 18,511 ஆக இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நான் சொன்ன இந்த ஆண்டுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சி நடைபெற்ற ஆண்டுகள் அல்ல என்பதையும் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, துப்பாகிச் சூட்டைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டு குமாரதாஸ் அவர்கள் வெகுவாக தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தார். "1997-லே 63 துப்பாக்கிப் பிரயோகமா?" என்று கேட்டார். துப்பாக்கிப் பிரயோகம் திடீரென்று 63 ஆக ஆகிவிடவில்லை. இப்போது குறைந்திருக்கிறது. 1997-லே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுவதற்கான காரணம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மதக்கலவரம், ஜாதிக் கலவரம் இவைகளெல்லாம் வெகுவாக மூன்டெழுந்து, அப்போது ஏற்பட்ட கலவரங்களை அடக்குகின்ற சூழ்நிலையிலே துப்பாக்கிப் பிரயோகங்கள் தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டன.

1991-ஆம் ஆண்டு 33 துப்பாக்கிப் பிரயோகம்; 1992-ல் 67 துப்பாக்கிப் பிரயோகம்; 1993-ல் 63; 1994-ல் 23; 1995-ல் 32; 1996-ல் 24; 1997-ல் 63; 1998-ல் இந்த மாதம் வரையில் 5.

அதைப்போலவே காவல்நிலைய மரணங்கள் என்று எடுத்துக்கொண்டாலும் - 'லாக்-அப்' சாவு. அது வெகுவாகக் குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## காவல்நிலைய மரண எண்ணிக்கை குறைந்துள்ளது

1995-ல் 19 ஆக இருந்த காவல் நிலைய மரண எண்ணிக்கை 1996-97ல் முறையே 13,16 என்ற அளவிலே குறைந்தது. 1998-ஆம் ஆண்டில் இதுவரையில் அப்படி காவல் நிலையத்திலே - போலீஸ் லாக்கப்பில் ஒரு நிகழ்வு கூட ஏற்படவில்லை என்ற நிலையிலே என்னிடத்திலே அந்தப்பட்டியல் தரப்பட்ட வரையில் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சில குறைபாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்களுக்கும் வார்த்தைகளுக்கு எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. திரு.செல்லக்குமார் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன் என்று சொன்னார். பகடைக்காயாகக் காவலர்களை நான் பயன் படுத்துவதாகச் சொன்னார். நான் அவைகளுக்கு எல்லாம் பதிலுக்கு பதில் அளித்து ஒரு நல்லுறவைக் கெடுத்துக் கொள்ள

விரும்பவில்லை. இருந்தாலும் அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்காவிட்டால் அதற்குப் பதிலே இல்லை போலும் என்று ஆகிவிடும் என்பதற்காக அதிலே சில விளக்கங்களை நான் அளிக்க விரும்புகின்றேன்.

தீயணைப்புத் துறையைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிலே ஒருவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார். தீயணைப்புத் துறையிலே கருவிகள் வாங்கியதில் ரூ.2 கோடிக்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்ட வழக்கையொட்டி மாநில குற்றப்புலானாய்வுத் துறை விசாரணை செய்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் ஹரிஹரன், வீரராகவன் ஆகிய இரண்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். இந்த வழக்கு விசாரணையின்போது தீயணைப்புத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் தாமாகவே முன்வந்து நீதிமன்றத்தில் பிரிவு 164 சி.ஆர்.பி.சி-ன் கீழ் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். இந்த வாக்குமூலத்தை ஆராய்ந்து அவர்களைக் குற்றவாளியாகக் கருதவேண்டாம் என்றும், சாட்சியாக ஏற்றுக் கொள்ளலாம் என்றும் மாநில குற்றப் புலனாய்வுத் துறை முடிவு செய்து, அரசுக்கு அறிக்கை அனுப்பியது. இதை அவரே அன்றைக்குச் சொன்னார். வழக்கு மேல் விசாரணையிலே இருக்கிறது. ஆகையால் தீயணைப்புத் துறையைச் சார்ந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவில்லை. புலன் விசாரணையின்போது குற்றவாளியா, இல்லையா என்பதை உறுதி செய்த பின்புதான் நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் அந்த அதிகாரியின் மீது 'ஃபிளோட்டிங் பம்ப்ஸ்' வாங்கிய விவகாரத்திலே மேலும் விஜிலென்ஸ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட விசாரணைகள் நடைபெறும்பொழுது அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்திடத் தேவையில்லை என்ற ஒரு கொள்கை முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது. ஏனென்றால் விஜிலென்ஸ் விசாரணை என்று போட்டு, அந்தக் காரணத்தைக் கொண்டே அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்துவிடக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அது அவர்களை மிகவும் பாதிக்கும் என்பதற்காக விஜிலென்ஸ் விசாரணை என்பதற்காக பதவி உயர்வு தடுக்கப்படத் தேவையில்லை என்ற ஒரு நிலையை எடுத்திருப்பதால்தான் இந்தச் சூழ்நிலையே தவிர, வேறு அல்ல.

**விஜிலென்ஸ் விசாரணை...**

டாக்டர் ஆ. செல்லக்குமார் : நான் குறிப்பிட்ட அதிகாரி - அவர் மீது விஜிலென்ஸ் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விசாரணை நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லக் கூடியவர். விசாரணையிலே உட்பட்டிருக்கின்ற ஒரு அதிகாரி அந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டிருப்பார் என்று சொன்னால், அந்த விசாரணையிலே எப்படி உண்மை வெளிவர முடியும்? அந்த அதிகாரியே அந்தத் துறையினுடைய தலைவராக இருந்து, அந்த விஜிலென்ஸ் அவர் மீது விசாரணை நடத்தும் என்று சொன்னால் சாட்சியங்களை அவர் கலைத்துவிடமாட்டாரா? இதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்கப்பட்ட இரண்டு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சர் சொன்ன காரணமும் அதுதான். அவர்கள் பணியிலே தொடருவார் என்று சொன்னால், சாட்சியங்களை அவர்கள் கலைத்துவிடுவார்கள் என்று நீதிமன்றத்திலே இந்த அரசின் மூலமாக வாதிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் நான் சொல்கிறேன், விசாரணை நடைபெற்று உண்மை வெளிவருகின்ற வரை எப்படி அந்த அதிகாரி அந்தத் துறையினுடைய தலைவராக நீடிக்க முடியும்.

**யாரையும் பழிவாங்கிவிடக் கூடாது
என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவு**

மாண்புமிகு கலைஞர் : அவர் அந்த இலாகாவில் தலைவராக இருக்கிறார் என்ற காரணத்தினால், சாட்சியங்களை கலைத்துவிடுவார் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், அவர்களே சேர்ந்துதான் முதலிலே சாட்சியங்களாக ஆகி, சாட்சியம் அளித்திருக்கிறார்கள். அதனால் அவர்கள்மீது, 'இவர்களைக் குற்றவாளிகளாகக்' கருதவேண்டாம், சாட்சியாக ஏற்றுக்கொள்ளலாம்' என்று குற்றப்புலனாய்வுத் துறையே முடிவுசெய்து, அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி உள்ளது. விஜிலென்ஸ் என்கொயரி என்பது யார் மீது யார் வேண்டுமானாலும் போட்டுவிடலாம். யார் மீது வேண்டுமானாலும் விஜிலென்ஸ் விசாரணைக்காக ஒரு குற்றச்சாட்டை யாரும் ஒரு மொட்டை கடிதாசியாக இருந்தாலும் உருவாக்கிவிடலாம். அதற்காக யாரையும் பழிவாங்கி விடக்கூடாது என்பதற்காகத்தான் அரசு இந்த நிலையை எடுத்திருக்கிறது என்பதை முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்த விளக்கத்தை நான் தந்திருக்கின்றேன்.

மற்றொன்று, விபத்து ஏற்பட்டதாக இன்ஷூரன்ஸ் பணத்தை ஏமாற்றிப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்பது போன்ற ஒரு குற்றச் சாட்டை செல்லக்குமார் குறிப்பிட்டார். இது 1987-88 ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்ற ஒன்று. சென்னை காவல் போக்குவரத்து புலன்விசாரணைப் பிரிவின் Traffic investigation Wing விபத்து நடக்காமலேயே நடந்ததாக, காப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொண்டார்கள். இதுகுறித்து, பாலச்சந்திரன், கோட்டி சுப்பிரமணியன், ஜானகிராமன், தேவசகாயம், ராமசாமி, கன்னியப்பன், இராமய்யன் ஆகிய 7 பேர் மீது ஊழல் தடுப்புப்பிரிவும், சி.பி.ஐ. விசாரணையும் 1993லேயே சி.பி.ஐ.விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த சி.பி.ஐ. விசாரணையின் காரணமாக உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் தற்காலிகப் பணிநீக்கம் செய்ப்பட்டு, அதன் பிறகு அவர் நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி படிகளைப் பெறுகிறார். அவர் சஸ்பெண்டு செய்யப்பட்டார். தீர்ப்பாயத்திலே, அவர் முறையீடு செய்து கொண்டு தீர்ப்பாயத்தினுடைய உத்தரவுப்படி பணியிலே இருந்து வருகிறார். உதவி ஆய்வாளர்கள் ஜானகிராமன், தேவசகாயம், தலைமைச் காவலர் ராமசாமி இவர்கள் ரிடையர்ட் ஏஜ், ஒய்வு பெறும்வயதை அடைந்து விட்ட காரணத்தினால், தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இந்தச் சம்பவம் ஏதும் இப்போது நடைபெற்ற சம்பவம் அல்ல. இன்னொன்று, சி.பி.ஐ. அறிக்கை அனுப்பினால், அதன்மீதுதான் மாநில காவல்துறை நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அறிக்கை அனுப்பாமல் இருக்கும்போது அது நடவடிக்கை எடுக்க இயலாது. இதுவரையிலே சி.பி.ஐ. அவர்களைப்பற்றி எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்பதை சி.பி.ஐ. விசாரணையிலே அதிக அக்கறை உள்ள நண்பர்களுக்கு, எல்லாம் நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, சேலம் கோர்ட் நிகழ்வினைப் பற்றி செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிலே விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. விரிவஞ்சி விடுக்கின்றேன். ஏன் அந்த வழக்கு ஏற்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டை, பயங்கரமான குற்றச்சாட்டை, பல விளக்கங்கள்அளிக்கப்பட்ட பிறகும்

அந்தக் குற்றச்சாட்டை செல்லக்குமார் அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்; வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாயை கையாடல் செய்துவிட்டார் என்பது. அப்படி ஒரு திட்டமே அங்கு நிறைவேற்றவில்லை, 2 கோடி ரூபாய் கையாடல் செய்யவும் இல்லை என்று வேளாண்மைத் துறை அமைச்சர் பல விளக்கங்கள் அளித்த பிறகும், "நான் நிரூபிக்கத் தயார்" என்று திரும்ப, திரும்ப செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்ட காரணத்தினாலே, அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வழக்கு போட நேரிட்டது. அந்த வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வளாகத்திற்குச் சென்றபோது, ஊர்வலமாகச் சென்று, ஊர்வலமாகச் சென்ற நிலையிலே வளாகத்திற்குள்ளே தகராறு ஏற்பட்டு, அந்தத் தகராறு நடைபெற்று இருக்கக்கூடாது என்பதிலே எனக்கு இருவிதமான கருத்தே கிடையாது. எந்தப்பக்கத்திலே இருந்து தகராறுக்கான சூழ்நிலை இருந்து இருந்தாலும் அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது என்பதை நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். எனவே, இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே எந்த மன உணர்வுகளின் காரணமாக ஏற்பட்டவை என்பதை எண்ணிப்பார்த்தால் அந்த உணர்வுகளிலிருந்து நம்மை மீட்டுக் கொள்வோமானால் இத்தகைய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படாது என்பதை மாத்திரம் நான் மிகுந்த பணிவன்போடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கொடுங்கையூர் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். திரு.செல்லக்குமாரும் சொன்னார். அனேகமாக பேசிய அத்தனை பேரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு.சுப்பராயன் உட்பட.

சுப்பராயன் கூட ஒரு விபத்திலே குழந்தையைக் காப்பாற்றிய காசிப்பாண்டியனைப் பற்றிக்கூட குறிப்பிட்டிருக்கிறார். காசிப்பாண்டியனுக்குக் கூட ஏதோ ஓரளவுக்குச் சிறுதொகை வெகுமதியாக அளிக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானது அல்ல என்ற குறை இருந்தாலும் கூட அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

கொடுங்கையூரிலே வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்ட சம்பவம், கோவை துணை ஆய்வாளர் சந்திரசேகர் சட்டம், ஒழுங்கு பணியிலே

திறமையாக ஆற்றிய தன்மை, இவைகள் மாத்திரம் அல்ல; இவர்களைப் போலவே தீவிரவாதிகளை அடக்குவதிலும், மற்றும் தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதிலும், இதுபோன்ற சோதனைகளை உயிருக்குத் துணிந்து சென்று தங்களுடைய திறமையைக் காட்டிய வகையிலும் தகுதி வாய்ந்தவர்கள் யார், யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கான அண்ணா பதக்கம் வழங்கும் விழாவிலே அவர்கள் எல்லாம் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.தாமரைக்கனி வரவில்லை. இருந்தாலும் அவர் சொன்னது ரெக்கார்டில் இருக்கும். ஆகவே பதில் சொல்லுகிறேன். போலிக் கையெழுத்திட்டு, போலி ஆவணங்கள் மூலமாகச் சொத்து உரிமை கொண்டாடினார்கள் என்று சொல்லி அது திராவிட முன்னேற்றக் கழகத்தை அத்தோடு இணைத்து இங்கே பேசினார்.

ஜே.கே.கே.சுந்தரம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர் என்பது உண்மை. ஆனால் இதிலே சம்பந்தப்பட்டு இருப்பவர் யார் என்றால், அவருடைய தம்பி மறைந்து விட்ட நடராஜன். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். காங்கிரஸில் மிகுந்த தீவிரமாகப் பணியாற்றியவர். அவர் மறைந்து விட்டார். அவருடைய மனைவிக்கும், அவருடைய வளர்ப்பு மகளுக்கும் தகராறு. ஒரு உயில் தகராறு. அந்த உயிலிலே கையெழுத்து இட்டு இருப்பது நடராஜன் என்பது மகளுடைய வாதம். என் கணவர் கையெழுத்திடவில்லை என்பது அவருடைய துணைவியாரின் வாதம். இந்த வாதங்கள் இரண்டு நீதிமன்றங்களிலே சென்னை உயர்நீதிமன்றம் வரையிலே வந்து கடைசியாக திருவில்லிப்புத்தூர் முதன்மை நீதிமன்ற நடுவரிடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலே நீதிபதி, ஆவண நிபுணர்களின் கருத்து ஏற்க இயலாது என்றும் இந்த ஆவணங்களை மீண்டும் பரிசோதனை செய்ய வேறு மாநில தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்புமாறும் 11.5.98ல் உத்தரவிட்டிருக்கிறார்கள். இது முழுக்க, முழுக்க சிவில் வழக்கு. இதிலே ஏதாவது வந்து முடிவுற்று யாராவது குற்றம் சாட்டப்பட்டு இன்னார் இதிலே தவறு செய்திருக்கிறார்கள் என்று வந்தால் அதற்குப் பிறகுதான் இது கிரிமினல் வழக்காக மாறி போலீசார் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கிடையிலே இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அமைச்சர்களையும் சேர்த்துப்

பேசியது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. பேசிய பிறகு அவர் பேசிய குறிப்பை என்னிடத்திலே கொடுத்தார். அதைப் படித்துப்பார்த்தேன். படித்துப் பார்த்தபோதுதான் எனக்கு ஒரு உண்மை விளங்கியது. அதிலே முழுப் பேச்சையும், அதிலே எழுதி வைத்திருக்கிறார். பார்த்தால் அந்தப்பேச்சில் அந்த ஜே.கே.கே. சுந்தரம் என்று வருகிறது; நடராஜன் என்று வருகிறது; அந்தப் பெண் பெயர் வருகிறது; மனைவி பெயர் எல்லாம் வருகிறது. அதிலே அடுத்து அவர் பேச இருப்பது யார், யார் மீதோ நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்ல வந்தவர் "முன்னாள் அமைச்சர்களை எல்லாம் கைது செய்தீர்கள்; முன்னாள் வாரியத் தலைவர்களை எல்லாம் கைது செய்தீர்கள்; என்று சொல்ல வந்தவர் அதைப் படிப்பதற்குப் பதிலாக, அமைச்சர்களுக்கு எல்லாம் இதிலே சம்பந்தம் இருக்கிறது" என்று சொல்லிவிட்டார் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் அந்தப் பேச்சில் திடீர் என்று அமைச்சர்கள் பெயர் வருகிறது; ஆகவே, திரு.தாமரைக்கனி இதைத் தவறுதலாக படித்து இருப்பார் என்று கருதுகிறேன். இதிலே எந்த அமைச்சருக்கும், எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும் இது ஒரு சிவில் விவகாரம், இதிலே இந்த அரசுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

## டாக்டர் ராமதாஸ் மருத்துவமனை தாக்கப்பட்ட வழக்கில் 5 பேர் கைது

திண்டிவனத்திலே டாக்டர் ராமதாஸ் மருத்துவமனை தாக்கப்பட்டது பற்றிச் சொல்லி, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நம்முடை ஐ.கணேசன் அவர்கள் சொன்னார். விசாரிக்கப்பட்டது. அந்த மருத்துவமனையினுடைய மேலாளர் திருநாவுக்கரசு. அவர் கொடுத்த புகார் மீது திண்டிவனம் காவல் நிலையத்தில் குற்ற எண்.122/88-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இ.பி.கோ. பிரிவு 147, 148, 448, 427, 323 -இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 5 குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கு தீவிர புலன் விசாரணையிலே உள்ளது.

ஐ.கணேசன் இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார், சேலத்திலே மது பானக்கடைகளை ஏலம் செய்ததில் தவறுகள் நடந்தன என்று.

சேலத்திலே மொத்தம் 161 கடைகள் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றினுடைய மொத்த குறுமத் தொகை - குறுமத்தொகை என்றால் அப்செட் பிரைஸ் - ரூ.8.04 கோடியாகும். ஆனால், இந்த அப்செட் பிரைஸுக்கு மாறாக ஏலத்திலே கிடைத்த மொத்தத் தொகை ரூபாய் 17 கோடி - 17.03 கோடி கிடைத்தது; இது குறுமத் தொகையைவிட - குறுமத் தொகை என்றால் ரொம்ப தூய தமிழ், அது அந்த அப்செட் பிரைஸ் - அதற்குமேலே கிடைத்தது எவ்வளவு என்றால் 112 சதவிகிதம் அதிகம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய ஐ.கணேசன் குறை சொன்னார்.

குறுமத்தொகை சென்ற 3 ஆண்டுகளில் கிடைத்த உரிமைத் தொகையின் அடிப்படையிலேதான் நிர்ணயிக்கப்படுகிறது. மிக அதிக அளவிலே இருந்தது. ஆனால் அதைவிட மிகக் கூடுதலாக, சேலம் மாவட்டத்தில் ஏலத்தில் தொகை கிடைத்திருப்பது மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியும் என்றே நான் நம்புகின்றேன்.

அரசினுடைய அறிவுரைகளின்படி சென்ற ஆண்டு கிடைத்த உரிமைத் தொகைகளை விட குறைவாகக் கிடைத்திருந்தாலோ அல்லது கடையின் விற்பனையிலே 10 சதவீதத்திற்குக் குறைவாகக் கிடைத்திருந்தாலோ அந்தக் கடைகளை மறு ஏலத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பது அரசின் கொள்கை.

அந்த அடிப்படையில் அந்த மாவட்டத்தில் 23 கடைகள் மறு ஏலத்திற்குக்கொண்டு வரப்பட்டன. இந்த 23 கடைகளுடைய குறுமத்தொகை 87 இலட்சம் ரூபாய். அதற்கு மாறாக ரூ.1.31 கோடி முதலில் கிடைத்தது - முதல் ஏலத்தில் இந்தக் கடைகளின் வாயிலாகக் கிடைத்த தொகை ரூ.1.31 கோடி. மறுபடியும் ஏலம் விட்டதிலே கிடைத்த தொகை ரூ.1.81 கோடி ரூபாய் கிடைத்தது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவே, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் கடைகள் மறு ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அரசாங்கத்தினுடைய இந்தச் சீரிய கொள்கையால் - அன்றைக்குத் திருநாவுக்கரசு சொன்னார்கள்; எனக்கு நன்றிகூற வேண்டுமென்று. அவர் நன்றி கூற வேண்டுமென்றால், 750 கோடி வந்திருக்க வேண்டுமென்று கணேசன் சொன்னார். நம்முடைய ஞானசேகரன் "நானாக

இருந்தால் 1000 கோடி இந்த ஏலத்திலே சம்பாதித்திருப்பேன்" என்று சொன்னார்.

1000 கோடி அல்ல, 2000 கோடி அல்ல. அது 250 கோடியாக இருந்ததை 500 கோடியாகக் கொண்டு வந்தார்கள் என்று ஒரு பாராட்டுக் கிடையாது. அவர் 750 கோடி என்கிறார். இவர் 1000 கோடி என்கிறார். யார் யார், எப்படி எப்படி ஏலம் எடுத்தார்கள் என்று தெரியும். நமக்குள்ளே பேசக் கூடாது அதெல்லாம். யார் யார் எங்கெங்கே கூட்டணி நடந்தது? கூட்டணி அரசியலிலே மாத்திரமா இருக்கிறது கூட்டணி?

சேலம் ஜில்லாவிலே ஒரு ஏலக்கடையிலே இந்தக் கூட்டணியிலே வந்த பணத்தை வைத்து ஒருவர் பொதுக் குழுவே நடத்தினார். பொதுக்குழுவிற்குச் செலவே அவர்தான் செய்தார் என்று கேள்விப்பட்டேன். விவரங்களிலே நுழைய நான் விரும்பவில்லை. அது எல்லோருக்கும் தெரியும்.

நண்பர் குமாரதாஸ் அவர்கள் மதுவிலக்கிலே 3 இலட்சம் வழக்குகள் போடப்பட்டிருப்பதை ரொம்ப ஆச்சரியமாகக் குறிப்பிட்டு, "3 இலட்சம் வழக்குகளா, கள்ளச்சாராயம் அந்த அளவுக்குப் பெருகி விட்டது'' என்று அங்கலாய்த்துக் கொண்டார். அவருடைய அங்கலாய்ப்பிலே நியாயம் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அது போதாது. இன்னும் அதிகமாகப் போடப்பட்டிருக்க வேண்டும்.

இங்கே நம்முடைய லத்தீப் அவர்களெல்லாம் பேசியதைப் பார்க்கும்பொழுது 3 இலட்சம் வழக்குகள் அல்லது 3 இலட்சம் பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதெல்லாம் குறைவுதான். அதிகமாக இதிலே கவனம் செலுத்தப்பட்டிருக்கவேண்டும் - அதைப்பற்றி பிறகு வருகிறேன்.

அவருக்கு நான்சொல்கிற விளக்கம், இப்பொழுது ஆறரை, ஆறேகால் கோடி மக்கள் தமிழ்நாட்டிலே. மூன்றரை கோடி மக்கள் இருந்த காலத்திலே -

1956-லே 1 இலட்சத்து 35 ஆயிரம் வழக்கு.

57-லே 1 இலட்சத்து 29 ஆயிரம் வழக்கு.

58-லே 1 இலட்சத்து 10 ஆயிரம் வழக்கு.

1966-லே 1 இலட்சத்து 89 ஆயிரத்து 548 வழக்கு.

3 கோடி பேருக்கு 1 இலட்சத்து 89 ஆயிரம் என்றால், 6 கோடி பேருக்கு 3 இலட்சம் வருவது ஆச்சரியமில்லை. இன்னும் நிறைய வழக்குகள் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இன்னும் நிறைய வழக்குகள் வர வேண்டும்.

நான் இன்றைக்கு இப்படித்தான் பேச முடியும். என்னால் வேகமாகப் பேச முடியாது. உடல்நிலை கருதி இப்படித்தான் துண்டு துண்டாகப் பேசுவேன். மன்னித்துக் கொள்ள வேண்டும்.

## நியாயத்திற்கு மாத்திரம் பயப்படுவேன் வேறு யாருக்கும் பயப்பட மாட்டேன்

கோவை குண்டுவெடிப்பு பற்றி ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஞானசேகரன் கேட்டார். திரு.குமாரதாஸ் கேட்டார். இன்னும்சில பேர் இங்கே கேட்டார்கள். அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பாராட்டிய நம்முடைய செல்லக்குமார் கூட யாருக்கோ பயந்துகொண்டு எடுக்கப்பட்டது மாதிரி சொன்னார். அவர் பேசுவதிலேயுள்ள நயம் எனக்குத்தான் புரியும். பல பேருக்கு புரியாமல் கூட இருந்திருக்கலாம். ஏதோ பா.ஜ.க. ஆட்சி வந்தவுடன் பயந்துகொண்டு எடுத்தது மாதிரி, அவ்வாறு தொனிக்கிறது மாதிரி சொன்னார். நான் யாருக்கும் பயப்படுவதில்லை, நான் நியாயத்திற்கு மாத்திரம் பயப்படுவேன். வேறு யாருக்கும் பயப்பட மாட்டேன். எமர்ஜென்சிக்கு பயப்படாத ஆள் ஆயிற்றே நான். எமர்ஜென்சியின்போது என் மகன், மருமகன், பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற வீராசாமி, கோ.சி.மணி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன் இங்கே உட்கார்ந்திருக்கிறார்களே இதிலே பாதி பேர் எமர்ஜென்சியில் ஜெயிலில் இருந்தார்கள் மிசா கைதியாக. அப்பொழுதும் பயப்படவில்லை.

ஆளே அனுப்பியிருந்தார்களே டெல்லியிலிருந்து, இங்கிருந்த கவர்னரே கேட்டாரே? “இந்தத் தீர்மானத்தை மாத்திரம் வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள், கேரளாவில் கொடுத்ததை மாதிரி ஒரு வருடம் ஆட்சியை நீட்டித் தருகிறோம்” என்று கேட்பதற்கு ஒரு மந்திரி வந்தார். “நான் அண்ணாவினுடைய தம்பி, எழுதிய

தீர்மானத்தை திருப்பி எழுதமாட்டேன்'' என்று சொன்னேன். தீர்மானத்தை வாபஸ் வாங்கியிருந்தால் இன்னும் ஒரு வருடம் அப்போது ஆட்சியில் இருந்திருப்போம். 400, 500 பேர் ஜெயிலுக்கு போயிருக்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் அவ்வளவு அவதிப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுடைய வீடு, ஆபிசில் எல்லாம் 'ரெய்ட்' நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வளவு நடந்தது. நடந்து போனதற்குப் பிறகு இனி நடக்காமல் இருப்பதற்காக நடவடிக்கைகள்தான் அவை.

முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், நான் திருப்பி கேட்க முடியாதா? உளவுத்துறை 'சைபர்', 'சீரோ' எதற்கும் லாயக்கில்லை அப்படியெல்லாம் திரு.ஞானசேகரன் இங்கே சொன்னார். நான் இப்படித் திட்டுவதைப் பற்றி வருத்தப்படமாட்டேன். ஏனென்றால் திட்டத் திட்ட உளவுத்துறை நன்றாக இருக்குமென்பதற்காக தம்பி சொல்லியிருப்பார். இந்த கவர்மெண்டிலே இருக்கின்ற உளவுத்துறையை குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொன்னதாக நான் கருதமாட்டேன். Utter failure அது Success ஆக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் Utter failure என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பார் என்று நான் கருதுகிறேனேயல்லாமல் வேறல்ல.

### தேசத் தலைவர்கள் பற்றிச் சொல்ல முடியாத உளவுத்துறை

நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த உளவுத்துறை உலக உத்தமர், தேசப்பிதா, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி கொல்லப்படப் போகிறார் என்பதைச் சொல்லாத உளவுத்துறை Utter failure-ரா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

"அன்னை" என்று நம்மால் பாராட்டப்பட்ட, இந்தியாவினுடைய அன்னை என்று நம்மால் இன்றைக்கும் பாராட்டப்படுகின்ற இந்திராகாந்தியை அவர்களுடைய வீட்டுத் தோட்டத்திலேயே அவர்களுடைய பாதுகாவலர்கள் சுட்டுக்கொல்லப் போகிறார்கள் என்ற அதை உளவுத்துறை கண்டுபிடிக்க முடியவில்லையே?

13 தடவை வந்து விட்டுப்போனார் ராஜீவ்காந்தி; நான் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டிற்கு; ஒரு துரும்பு அவர்

மேல் படாமல் பாதுகாப்பாக டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், கடைசியாக வந்தபோது, கவர்னர் ஆட்சியிலே வந்தபோது, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு 3 மாதங்கள் கழித்து கவர்னர் ஆட்சியில் ராஜீவ்காந்தி வந்தார். இவ்வளவு பாதுகாப்பு இருந்தும்கூட அவர் கொல்லப்பட்டு ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டு அவரது உடல் டெல்லிக்கு அனுப்பப்பட்டது. மூப்பனாரும் மற்ற சில பேரும்தான் இருந்து அனுப்பி வைத்தார்கள். அன்றைக்கு அவர்களும் கூட போனார்கள்.

ஏன் முன்கூட்டியே உளவுத்துறை இதைச் சொல்லவில்லை. எங்கே போனது உளவுத்துறை? பிறகுதான் விசாரிக்கிறோம் என்ன பண்ணியது உளவுத்துறை என்று. பிறகுதான் கமிஷன் போடுகிறோம். அதுமாதிரி எதுவும் வந்து மின்னல் வேகத்தில் நடக்கும் போது, ஏன் முன்கூட்டியே செய்யவில்லை, எங்கே போனது உளவுத்துறை என்று கேட்பதெல்லாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிற - உஷார்படுத்துகின்ற காரியங்களாக இருக்கலாமே தவிர, அதையே ஒரு குற்றச்சாட்டாக வைத்துக்கொண்டு அதிலே பேசிக் கொண்டிருப்பது நியாயமில்லை என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

உளவுத்துறை சில நேரங்களில் நல்ல முறையிலே செயல்படுகின்றது. சில நேரங்களில் அவர்களையும் மீறி சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன.

## எங்களுக்கு வந்த செய்தியை வைத்துத்தான் அத்வானியைக் காப்பாற்ற முடிந்தது

எங்களுக்கு வந்த செய்தியை வைத்துக்கொண்டுதான் அத்வானியைக் காப்பற்ற முடிந்தது. நான் முதலிலே சொல்லும்போது கூட அத்வானிக்கு மனித வெடிகுண்டு வரவில்லையென்ற செய்திதான் கோவையிலிருந்து வந்தது. பிறகு மெல்ல மெல்ல அந்தச் செய்திகள் புலன்விசாரணைக்காக விடப்பட்ட பிறகு, தனிப் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு, அத்வானியைக் கொல்வதற்காக மனிதகுண்டுகளுடன் சில சில பேர் வர முயன்றதாகவும், அவர்கள் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடியாத அளவிற்கு போலீஸ் பாதுகாப்பு இருந்ததாகவும் சொல்கிறார்கள். அந்தச் செய்தி வந்தது.

அதைத்தான் WhitePaper-ல் இங்கே நான் வைத்தேன். அதையும் நீங்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு.அத்வானியை ஏன் காப்பாற்றினோம்? சில நேரங்களில், உளவுத்துறையானாலும், போலீஸ் ஆனாலும் சரியாகச் செயல்படும்போது பெரிய தலைவர்களைக் காப்பாற்றிவிட முடிகிறது. மிகப் பெரிய தலைவர்களான உத்தமர் காந்தி, திருமதி. இந்திராகாந்தி, திரு.ராஜீவ்காந்தி இவர்களையெல்லாம் காப்பாற்ற முடியாமலே போய்விட்டது. இவைகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

முன்கூட்டியே புலன்விசாரணையிலே தகவல் வந்தது. உளவுத்துறையினுடைய தகவல் வந்தது. அதை வைத்து நாங்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான் பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 13ஆம் தேதி முடிய தமிழ்நாடு முழுவதும் உள்ள போலீஸ் இலாகா மாவட்ட ரீதியாக ஆங்காங்கு பணியாற்றியதன் காரணமாகத்தான் மாநிலம் முழுவதும் 49 வழக்குகள், 81 பேர் கைது, நாட்டு வெடிகுண்டுகள் 2000 கைப்பற்றப்பட்டன. ஜெலட்டின் குச்சிகள் 586 கைப்பற்றப்பட்டன. டெட்டனேட்டர்கள் 1595, உரிமம் இல்லாத துப்பாக்கிகள் 8, ரிவால்வர் 2 என்று கைப்பற்றப்பட்டன.

ஆனால், அங்கேமாத்திரம், கோவையிலே மாத்திரம் அத்வானியைக் காப்பாற்றுவதிலே காட்டிய அக்கறை, அவர்களுக்குச் சரியான தகவல், அங்குள்ள உள்ளூர் போலீஸ்காரர்களால் தரப்படாததால் ஏற்பட்ட தொய்வு, இவைகளின் காரணமாக போலீஸ் கமிஷனர் நடவடிக்கை எடுக்கத் தவறியது. அதற்காகத்தான் இந்த அரசு அவர் மீது இன்றைக்கு விளக்கம் கேட்டு கடும் நடவடிக்கைக்கான குற்றச்சாட்டை அவர் மீது சுமத்தியிருக்கின்றது. இவ்வளவுக்கும் பிறகும், இதிலே குறைபட்டுக் கொள்ள என்ன இருக்கிறது என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

சி.பி.ஐ., சி.பி.ஐ. என்று இதற்குக்கூட சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டும் என்று நம்முடைய திரு.ஞானசேகரன் இங்கே வலியுறுத்தினார். எங்கேயோ ஆரம்பித்து, போயஸ் கார்டனிலே ஆரம்பித்த சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டும் என்பது திரு.ஞானசேகரன் வரையிலும் வந்தாயிற்று.

## கோவையில் குண்டுவெடிப்பு என்றதும் கோட்டைக்குத்தான் வந்தேன்.

நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன். திரு.அத்வானி கோவைக்கு வந்து இவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன என்ற செய்தி எனக்கு எப்போது கிடைத்தது என்றால், த.மா.கா. தலைவர் திரு.மூப்பனாரும், நானும், திரு.மாணிக்கம் அவர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களும், நம்முடைய திரு.அப்துல் லத்தீப் அவர்களும், எல்லோரும் சென்னையிலே அன்றைக்கு, 14-ஆம் தேதியன்று சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டதினுடைய இறுதிக் கூட்டத்திலே பேசிவிட்டு நான் காரிலே ஏறுகிறேன். அப்போது திரு.மாறன், திரு.வீராசாமி ஆகிய இவர்கள் எல்லாம் நான் காரிலே ஏறுவது வரையிலே என்னிடத்தில் சொல்லாத செய்தியை காரிலே ஏறி உட்கார்ந்ததுமே சொன்னார்கள், இப்படி கோயம்புத்தூரிலே குண்டுவெடித்து விட்டது என்று.

நான் நேராக வீட்டுக்குச் செல்லவில்லை. கோட்டைக்குத்தான் வந்தேன். வந்தவுடனே தலைவர் மூப்பனார் அவர்களுக்கு போன் செய்தேன்; திரு.மாணிக்கம் அவர்களுக்கு போன்செய்தேன்; திரு.சங்கரய்யா அவர்களுக்கு போன் செய்தேன்; ஜனதா தளத்திலே திரு.வடிவேலு அவர்களுக்கு போன் செய்தேன்; மற்றவர்களுக்கும் போன் செய்தேன். அவர்கள் கிடைக்கவில்லை. திரு.அப்துல் லத்தீப் அவர்கள் ஊரில் இல்லை. அன்றைக்கு உடனடியாகப் புறப்பட்டு எங்கேயோ போய்விட்டார். திரு.சமது அவர்களுக்குக்கூட போன் செய்தேன். இப்படி எல்லோருக்கும் போன் செய்தேன்.

திரு.மூப்பனார் அவர்கள் உடனடியாக இங்கே வந்தார்கள். திரு.மாணிக்கம் அவர்களும் வந்தார்கள். திரு.நல்லக்கண்ணு அவர்களும் இங்கே வந்தார்கள். வந்தவுடனே, அவர்களிடத்திலே நிலைமைகளைப் பற்றி சொன்னேன். சாயுங்காலம் ஐந்தரை அல்லது ஆறு மணிக்கு வந்தவர்கள் இரவு ஒன்பதரை மணி வரை என்னோடு கோட்டையிலே முதலமைச்சர் அறையிலேதான் இருந்து நாங்கள் விவாதித்தோம். அவர்களிடத்திலே குறிப்பை எடுத்துக்காட்டினேன். இன்னின்ன இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே பரிந்துரை வந்தது, கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம் என்பதற்காக எப்பொழுதோ

கையெழுத்து போட்டிருக்கிற ஃபைல் இதோ இருக்கிறது என்று அந்த ஃபைலைக் கூட காட்டினேன். பிறகு அவர்களிடத்திலே கலந்து பேசித்தான் இரவு எட்டரை மணி அளவிற்கு அந்த இரண்டு இயக்கங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று சொல்லி, உடனடியாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

## இதற்கெல்லாம் ஒரு உள்நோக்கம் யாரும் கற்பிக்கக் கூடாது

இதற்கெல்லாம் ஒரு உள்நோக்கம் யாரும் கற்பிக்கக் கூடாது. ஏதோ வேண்டுமென்றே அலட்சியப்படுத்தி விட்டோம் என்று யாரும் கருதக்கூடாது. அரசாங்கமே இதைச் செய்திருக்கலாம் என்று எண்ணக்கூடாது. அரசாங்கம் என்ன செய்ய முடியும். வருகிற செய்தியை அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க முடியும். அப்படித்தான் தெரிவித்திருக்கிறோம்.

இங்கேகூட ஒரு பழைய நிகழ்ச்சி இந்த அவையிலே நடந்தது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகிறார், "பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே எழுப்பும்போது, காவல்துறையிடமிருந்து நான் விவரங்களைப் பெற்றுதான் இந்த அவைக்குத் தரமுடியும். தனிப்பட்ட முறையில் நான் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியில் போய் புலனாய்வு செய்ய முடியாது. "நானே, ஒற்றர் மாதிரி போய், அல்லது ஒரு பெரிய துப்பறியும் நிபுணர் மாதிரி, 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியில் நானே நேரடியாகப் போய் செய்ய முடியாது. போலீஸ்காரர்கள் தான் செய்ய வேண்டும்" என்று சொல்லி விட்டு, இன்றைக்கு என் மேலே குறை சொல்லிக்கொண்டிருக்கின்ற ஜெயலலிதா, இதே அவையிலே பேசி இதிலே அச்சிடப்பட்டு, நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது.

## சி.பி.ஐ. விசாரணை கோரியும் மத்திய அரசு மறுப்பு

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், ஒழுங்காக யார் யாரோடு கலந்து பேசி, எந்தெந்தத் தலைவர்களோடு ஆலோசித்துச் செய்ய வேண்டுமோ, அப்படித்தான் ஆலோசித்துச்

செய்யப்பட்டிருக்கின்றன. அதைவிடுத்து, சி.பி.ஐ. சி.பி.ஐ. என்றால், சி.பி.ஐ.யில் வழக்குகள் நீண்ட நாட்கள் ஆகின்றன. சி.பி.ஐயை நான் குறை சொல்ல மாட்டேன். ஆனால் அதே சி.பி.ஐ. கேட்டு, மேலவளவு நிகழ்ச்சிக்கு தேவர் பேரவை எனக்குக் கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை நான் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் அவர்களிடம்- அவர்தான் அப்பொழுது அதற்குப் பொறுப்பு, அமைச்சர் - கேட்டு எழுதினேன். "இல்லை" என்றுதான் பதில்வந்தது. இப்பொழுது சி.பி.ஐ. தர இயலாது. போலீஸ்காரர்கள் விசாரிக்கிறார்கள். அதுவே போதும்" என்று பதில் வந்தது.

மதுரை லீலாவதி, கம்யூனிஸ்டு கட்சியினுடைய கவுன்சிலர் கொலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தார் சம்பந்தப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் மீது குற்றச்சாட்டு இருந்தபோது கூட, எந்தவிதமான பாரபட்சமும் காட்டாமல், அன்று கைது செய்யப்பட்டவர்கள் - எத்தனையோ பேர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் வந்திருக்கிறார்கள் எங்களுக்கும் தெரியும். ஆனால் இந்த வழக்கில் 10,11 மாதங்கள் ஆகின்றன. இன்னும் யாரும் ஜாமீனில்கூட வரவில்லை. அவர்களுக்காக சி.பி.ஐ. வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய அரசாங்கத்தை நம்பியோ, நம்பாமலோ சி.பி.ஐ. வேண்டுமென்று கேட்டார்கள். சி.பி.ஐ. வேண்டுமென்று பரிந்துரை செய்து எழுதினேன். அதற்கும் 'இப்பொழுது ஒழுங்காகத்தானே போலீஸ்காரர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் சி.பி.ஐ. அனுப்ப இயலாது' என்று எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள்.

அடுத்து, இரயில் குண்டு வெடிப்பு அண்மையில் நடைபெற்றது. பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அப்பொழுதும் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று இரயில்வே துறைக்கும், மத்திய அரசுக்கும் எழுதினேன். சி.பி.ஐ. அனுப்ப இயலாது என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் சி.பி.ஐ. இல்லாமலேயே இப்பொழுது நடைபெறுகின்ற கோவை குண்டு வெடிப்பு தொடர்பான அந்த விசாரணையில் நல்ல முன்னேற்றம் இருக்கின்றது.

தீவிரவாதிகளுடைய தலைவர்களெல்லாம் பிடிபடுகிறார்கள். பிடிக்கவே முடியாது என்று எண்ணப்பட்ட ஏர்வாடி காசிம் கூட இரண்டு நாட்களுக்கு முன்புகைது செய்யப்பட்ட அந்தச் செய்தியை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன்.

எனவே, வெகுவேகமாக இந்தப் புலன் விசாரணை முன்னேறிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், சி.பி.ஐ. தேவையா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு உறுப்பினர்களுக்கு உண்டு என்பதை நான் எடுத்துக் காட்டி, இந்த அளவோடு இதை நிறுத்துகின்றேன்.

இன்னொன்று, போலீசார் சில போராட்டங்களில் அத்துமீறி தலையிடுகிறார்கள் பாராபட்சமாக நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் கூட இங்கே பேசினார்கள். நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் நான்வரும்போது அதைத்தான் பேசிக்கொண்டிருந்தார். கிருஷ்ணசாமிக்காகச் சொல்லவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட போராட்டங்களால், அரசு ஒரு கோரிக்கைக்கு இணங்க அறிவிக்கப்பட்ட பிறகும் போராட்டம் நடத்துகிறது, ஏன் அறிவித்தாய் என்று, அதுதான் வேடிக்கை.

இதே அவையில், இவ்வளவு பேர் சாட்சியாக, இடைநிலை ஆசிரியர்கள் பற்றி நான் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதிலே ஒரே ஒரு சங்கடம் என்னவென்றால், அதன் காரணமாக, அமைச்சுப் பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள், இந்த 3 பேரும் அந்த Category-ல் உள்ளவர்கள். இரண்டரை இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்த இரண்டரை இலட்சம் பேரும் தங்களுக்கும் அதிலே முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுத்தது போல, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்பார்கள். எனவே, அவர்களைக் கூப்பிட்டு சமாதானப்படுத்தி, ஒரு சமரசம் செய்து அதற்குப் பிறகு அறிவிக்கப்படும் என்று சொன்னோம். என்றைக்கு அறிவிக்கப்பட்டாலும் முன்தேதியிட்டுத்தான் கொடுக்கப்போகிறோம். அதாவது 1.1.96 இருக்கிறதே அந்த 1.1.96 தேதியிட்டுத்தான் கொடுக்கப் போகிறோம். இவ்வளவு சொல்லி ஆகிவிட்டது. இவ்வளவு சாட்சியோடு சொல்லி ஆகிவிட்டது. சொன்ன பிறகும், முதலமைச்சர் அழைத்துப் பேசவேண்டும் - முதலமைச்சர் அழைத்துப் பேசவில்லையா? முதலமைச்சர் அழைத்துப் பேசிய படத்தைக் காட்டவா? படம் கூட என்னிடத்திலே இருக்கிறது. இந்தப் படத்தில் அவர்களெல்லாம் இருக்கிறார்கள். முரசொலியில் வந்திருக்கிறது. எல்லாப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இந்தப் படம் வந்திருக்கிறது. வந்து பேசினார்கள்; பேசிவிட்டு One Man

Commission -க்கு போகமாட்டோம் என்று சொல்கிறார்கள். ஏன் போகக்கூடாது? அவர் என்னைவிட பெரிய ஐ.ஏ.எஸ். ஆபீசர்தான். ஐ.ஏ.எஸ் ஆபீசராக இருந்தவர்தான். தனிப்பட்ட தகுதி என்று பார்த்தால், அவர் சாதாரண ஆள் இல்லை.

One Man Commission-க்குப் போய் நிலையை விளக்கிச் சொன்னால் என்ன? நீங்கள் வேண்டுமானால் போகவேண்டாம். அவர்களைக் கூப்பிட்டுப் பேசி முடித்துவிட்டு, பிறகு ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறோம் என்று சொன்னால், கேட்கமாட்டோம், நாங்கள் போராடித்தான் தீருவோம் என்றால், என்ன அர்த்தம்?

நேற்றைக்குப் போராட்டம். போராட்டம் நடத்தியவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார்கள் என்று அர்த்தம் அல்ல, அங்கிருந்து அகற்றப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மறுபடியும் போராட்டம், தொடரும் போராட்டம். நாளைக்குப் பிறந்த நாள் நேரத்தில் போராட்டம். நடத்துங்கள். என்னுடைய பிறந்த நாள் நினைவாக நீங்கள் போராட்டம் நடத்துவதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதற்காகப் பிறந்த நாளில் போராட்டம் நடத்தினால், உடனே பணிந்துவிடுவேன் என்று நினைத்தால் அதற்கெல்லாம் பணிகிற ஆள் நான்அல்ல, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கையை நிறைவேற்றுவதாகச் சொன்ன பிறகும்கூட, நீ கூப்பிட்டுப்பேசு என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதற்காக நான் கூப்பிட்டுப் பேச வேண்டும்? கூப்பிட்டுப் பேசக்கூடாது என்று இல்லை. எல்லோரையும் கூப்பிட்டுப் பேசியிருக்கிறேன். எந்தப் பிரிவு, எந்தத் தரப்பாக இருந்தாலும் பேசியிருக்கிறேன். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், சமமானவர்கள், சமமற்றவர்கள் என்றெல்லாம் நான் பாகுபாடு வைத்து நடந்தது கிடையாது. இந்த இரண்டு வருட கால ஆட்சியிலே, நான் எப்போது ஆட்சியிலே இருந்தாலும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் யாரைக் கூப்பிட்டுப் பேசாமல் இருந்திருக்கிறேன்? வியாபாரிகளா அல்லது விவசாயிகளா அல்லது தொழிலாளிகளா, ஒவ்வொரு பிரிவினரையும் ஒரு மணி நேரம், 2 மணி நேரம், 8 மணிநேரம் கூட அழைத்துப் பேசியிருக்கிறேன். பி அண்டு சி விவகாரத்திலே 8 மணி நேரம் பேசியிருக்கிறேன். பேச மாட்டேன் என்கின்ற மாதிரியும், அதை ஒரு குறையாக வைத்து,

அதற்காகப் போராட்டம் என்று சொன்னால், இதையெல்லாம் இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குப் பின்னால் நின்றுகொண்டு தூண்டுகிறவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எங்கே, எத்தனை மாநிலங்களில் மத்திய அரசுக்கு சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தைக் கொடுத் திருக்கிறார்கள்? சொல்லுங்களேன். எத்தனை மாநிலங்களிலே கொடுத்திருக்கிறார்கள்? கொடுக்கப்பட்ட மாநிலங்களிலே, அதே விகிதாசாரத்தை எத்தனை இடங்களில் ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். இல்லாத இடம் எத்தனை என்பதை அன்றைக்கே நான் பட்டியல் போட்டு காண்பித்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன், கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டாகிவிட்டது. கொள்கை ரீதியாக. அதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஒரேயொரு பிரச்சினை, அன்றைக்கே சொன்னேன். ஒரு சடங்கு, சம்பிரதாயம் பாக்கி இருக்கிற 3 கேட்டகிரி பியூப்பிளையும் கூப்பிட்டு, அவர்களை அழைத்துப் பேசி, அதற்குப் பிறகு முடிவை அறிவிக்கிறேன் என்று சொன்னால், நீ முடிவு அறிவிக்கிறேன் என்று சொன்னதே தப்பு என்பதைப்போல, நாங்கள் போராடித்தான் தீருவோம்; போராடி வந்தது என்று சொன்னால்தான்அதிலே எங்களுக்கு 'கிக்' இருக்கும் என்று சொன்னால், அதையெல்லாம் நான் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அதைப்பற்றி அவ்வளவுதான் நான் சொல்லமுடியும்.

எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே நான் பேச விரும்புகிறேன். நேற்றைக்கே இதைப் பற்றியெல்லாம் அதிகாரிகளிடத்திலேயும், துறைச்செயலா ளரிடத்திலேயும் கலந்து பேசி பல அறிவிப்புகளை இப்போது செய்ய இருக்கிறேன்.

## காவல்துறையை நவீனப்படுத்த 2 ஆண்டுகளில் ரூ.47 கோடி செலவு.

காவல்துறையை மேலும் வலுப்படுத்தவும், செம்மைப் படுத்தவும், நவீனப்படுத்தவும், வாகனங்கள், இயந்திரங்கள், புதிய காவல் அணிப்பிரிவுகள், கடலோர சோதனைச் சாவடிகள், கணிப்பொறிகள் - பேப்பர் கூடாது என்று சொன்னாரே அதற்காக கணிப்பொறிகள் -

இவைகளுக்காக இந்த இரண்டு ஆண்டுகளிலே 47 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1998-99க்கு மேலும் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஃதன்னியில் மத்திய அரசிடம் 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

காவலர் பயிற்சிக் கழகம்; நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னார்கள், காவலர்களுக்கு அதிகப் பயிற்சி வேண்டுமென்று. காவல் துறையைப் பற்றித் தனித் தனியே எதுவும் பேசவில்லை. காவல்துறையைப் பற்றிக் குறிப்பிட்டு அதிக உபதேசத்தினை நம்முடைய லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு காவல்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் புதிதாக சீருடைப் பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கும் உயர்தரப் பயிற்சி அளிக்கும் நோக்குடன் ரூபாய் 20 கோடி செலவில் தமிழ்நாடு காவல் பயிற்சிக்கழகம் நிறுவ தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. திரு.லத்தீப் சொன்ன கருத்து. இக்கழகம், மாவட்ட அளவில் பயிற்சி மையங்களில் நடைபெறும் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் உயரிய தலைமைக் கழகமாகவும், செயல்பட உள்ளது. பயிற்சிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் மானியத்தை இதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு உத்தேசித்துள்ளது. சென்னை வண்டலூர் அருகில் இக்கழகம் அமைக்கப்பட சுமார் 133 ஏக்கர் நிலத்தை காவல்துறைக்கு மாற்றம் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. அங்கு காவலர் பயிற்சிக் கழகம் நிறுவுதல் தொடர்பாக காவல்துறைத் தலைமை இயக்குநர் மதிப்பீடுகளைத் தயாரித்து வருகிறார். உரிய உள்கட்டுமான வசதிகளோடு காவலர் பயிற்சிக் கழகம் விரைவில் தொடங்கப்படும்.

## மூன்று நிரந்தரக் காவல் பயிற்சிப் பள்ளிகள்

காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுதவற்காக, முதற்கட்டமாக, மூன்று நிரந்தரக் காவல் பயிற்சிப் பள்ளிகள் உருவாக்கப்படவுள்ளன. அதற்காக 1.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று காவலர் தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன.

தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 25 காவல் நிலையங்களுக்கு, முதற்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் செலவில்

கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. தற்போது தமிழ்நாடு அதிரடிப்படையினர் தலைமையகம் இயங்கும் மருதம் வளாகத்தில் மற்றுமொரு மேல்தளம் இருபது இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது.

சென்னை, எழும்பூரில் உள்ள காவல் ஆணையர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலர்களின் உணவுக்கூட இரண்டாவது மாடியில், குளிர்சாதன வசதியோடு கூடிய கூட்ட அரங்கம் ஒன்று 25 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது.

விருதுநகரில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு 16 இலட்ச ரூபாய் செலவில் புதிய குடியிருப்பு கட்டப்படும். தடய அறிவியல் துறையில் ஒரு குடிநீர் வழங்கல் திட்டம் ஒரு இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும். தடய அறிவியல் துறையில், மானிடயியல், வெடி மருந்துகள், ஆவணங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகிய பிரிவுகளுக்கு 1.68 இலட்சம் ரூபாய் செலவில் சீர்வளி வசதி செய்து தரப்படும். அறிவியல் உதவியாளர் பதவி 2.75 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் அலுவலர் பதவியாக நிலை உயர்த்தப்படும்.

ஐந்து இலட்சத்து, ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு டி.எம்.ஈ அடர்த்தி வீத அளவை மீட்டர் வாங்கப்படும். 15 இலட்ச ரூபாய் செலவில் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு மூன்று டி.எஸ்.டி.ஸ்கேனர் வாங்கப்படும். மேற்கண்ட திட்டங்களுக்காக 3.76 கோடி ரூபாய் செலவிடப்படும்.

## ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் - காவல்துறையினர் பங்கேற்கும் பயிலரங்கம்

மனித உரிமைகள், மனித நேயம் பற்றிய காவல் துறையினுடைய பயிலரங்கம், பொதுமக்களிடையே காவல் துறையின் மதிப்பை உயர்த்தும் வகையில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகர காவல் ஆணையர்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினர் பங்கேற்கும் பயிலரங்கங்களை நடத்தலாம் என அரசு உத்தேசித்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் மனித நேயம் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்கள் மற்றும் காவல்துறை மட்டத்தில் ஏற்படுத்த இப்பயிலரங்குகள் உதவும். குறைந்த பட்சம் காலாண்டிற்கு ஒருமுறை

இப்பயிலரங்கங்கள் நடத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப் பட்டுள்ளது. இதற்குரிய செலவினத்திற்கு அரசு முதல் தவணையாக ரூ.10 இலட்சம் அளித்துள்ளது.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 386 காவல் நிலையங்களில் 79 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. அந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் உள்ள பின்வரும் 40 காவல் நிலையங்களுக்கும் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முடிவெடுத்துதுள்ளது. இதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்துள்ள ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக 60 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

அவையாவன :

| | |
|---|---|
| காஞ்சிபுரம் மாவட்டம் | : 1. கேளம்பாக்கம்<br>2. மறைமலை நகர்,<br>3. சூணாம்பேடு |
| கடலூர் மாவட்டம் | : 4. நடுவீரப்பட்டி |
| விழுப்புரம் மாவட்டம் | : 5. திருவெண்ணெய்நல்லூர்,<br>6. கச்சிராப்பாளையம் |
| திருவண்ணாமலை மாவட்டம் | : 7. மேலசங்கம்,<br>8. பிரம்மதேசம்,<br>9. வடவனகருப்பட்டி |
| வேலூர் மாவட்டம் | : 10. கே.வி.குப்பம்,<br>11. வேலூர் குற்றம் (வடக்கு)<br>12. வேலூர் (வடக்கு) மகளிர். |
| ஈரோடு மாவட்டம் | : 13. காங்கேயம்,<br>14. தாராபுரம்,<br>15. பவானி |

| | | |
|---|---|---|
| விருதுநகர் மாவட்டம் | : | 16. வீரசோழம் |
| சிவகங்கை மாவட்டம் | : | 17. பூலான்குறிச்சி,<br>18. ஆராவயல்<br>19. தேவகோட்டை |
| கரூர் மாவட்டம் | : | 20. தென்னிலை,<br>21. பழவிடுதை |
| தஞ்சாவூர் மாவட்டம் | : | 22 அதிராமபட்டினம் |
| மதுரை மாவட்டம் | : | 23. அப்பன்திருப்பதி,<br>24. சமயநல்லூர் |
| இராமநாதபுரம் மாவட்டம் | : | 25. இராமநாதபுரம் பஜார்<br>26. அபிராமம் |
| தருமபுரி மாவட்டம் | : | 27. களவாய்,<br>28. சிங்காரப்பேட்டை,<br>29. மகராஜகனை,<br>30.காவேரிப்பட்டினம்,<br>31. அதியமான் கோட்டை,<br>32. தோப்பூர்,<br>33. பொம்மிடி,<br>34. எரையூர் |
| தூத்துக்குடி மாவட்டம் | : | 35. நாசரேத்,<br>36. கொப்பம்பட்டி,<br>37. பசுவந்தனை,<br>38. கோவில்பட்டி,<br>39. சூரன்குடி<br>40. சாயர்புரம் |

காவல்துறைக்கான கூடுதல் வாகனங்கள் வாங்க, 1997 - 98 ஆம் ஆண்டில் 9.02 கோடி ரூபாய் செலவில் 320 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன.

காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், மேலும் 69 வாகனங்கள், 2.34 கோடி ரூபாய் செலவில் வாங்க அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. பயனற்றவை என்று கழிவு செய்யப்பட்ட 227 வாகனங்களுக்குப் பதிலாக 1998-99ல் புதிய வாகனங்கள் வாங்க, 10.35 கோடி ரூபாய் செலவாகும். நிதிநிலை அறிக்கையிலே, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4 கோடி ரூபாய்க்கு மேலாக, கூடுதலாக 6.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

## ரோந்துப் பணிகளை மேம்படுத்த, கூடுதல் வாகனங்கள்

கோயம்புத்தூர், காவல் ஆணையகத்திற்கு 10 வாகனங்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; சென்னை ஆணையகத்திற்கிகு 10 வாகனங்கள்; செங்கை கிழக்கு காவல் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; மதுரை ஆணையகத்திற்கு 3 வாகனங்கள் - ஆணையகம் என்றால் கமிஷனர் வட்டம். மதுரை மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; ஆக 54 ரோந்து வாகனங்கள் வாங்க தொடராச் செலவினம், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய்.

காவல்நிலைய தளவாடச் சாமன்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்து குறிப்பிட்டார்கள். காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்கள் அமர்வதற்கும், காவலர்கள் அமர்ந்து பணி செய்வதற்கும், காவல்நிலையங்களில், தற்போது போதுமான அடிப்படை வதிகள் இல்லை. இவ்வசதிகளை அங்கே ஏற்படுத்துவதற்கும், போதுமான நிதிஒதுக்கீடு இல்லை என்ற குறை அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதைப் பரிசீலித்து, பொதுமக்கள் உட்காருவதற்காக நாற்காலிகள், காவலர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலிகள், பதிவேடுகளை வைத்துக்கொள்வதற்குத் தேவையான அலமாரி போன்ற பொருள்கள் வாங்க, ஒவ்வொரு காவல்நிலையத்திற்கும் 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

அது மட்டுமல்லாமல், காவல் நிலையங்களில், இது வரையில் இல்லாத ஒன்று; அவசிய செலவின வசதி, காவல்நிலையங்களில் ஏற்படும் சில்லறைச் செலவினங்களுக்குப் போதுமான பணம்

ஒதுக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு காவல்நிலையத்திற்கும் ஆண்டுக்கு 5,000 ரூபாய் சில்லறைச் செலவுக்காகப் பணம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அரசுக்கு ஒருகட்டச் செலவினமாக 69 இலட்ம் ரூபாய் ஆகும். அதுபோல ஒவ்வொரு ஆயுதப்படை முகாமிற்கும் ஆண்டொன்றிற்கு 10 ஆயிரம் ரூபாய் சில்லறைச் செலவுக்காக ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

நாகை மாவட்டக் காவல் அலுவலகம், 1971 முதலாகவே, அங்கே இந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, நாகை வெளிப்பாளையம் என்ற இடத்திலே அனைத்து காவல் அலுவலங்களும் ஒரே இடத்திலே செயல்பட வசதியாக 62 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை, நாகை மாவட்ட காவல் தலைமை அலுவலகத்தைக் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

காவலர்களுடைய நலன் காக்க, நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று டாக்டர் குமாரதாஸ் குறைப்பட்டுக் கொண்டார்கள். ஏதோ 4 சதவிகிதம்தான் இருக்கிறது; அதை 6 சதவிகிதமாக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள்; நாம் அதிலே என்றும் குறை வைக்கவில்லை.

நான் முதலிலே சொன்னதெல்லாம், காவல் துறையினை நவீனப்படுத்துவதறகாக சொன்ன செலவுகள். காவலர்களுடைய நலனுக்காக என்று எடுத்துக் கொண்டால், நிறைய செய்திருக்கிறோம். 1991-92ல் என எடுத்துக் கொண்டோம் என்றால், 89 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். காவலர் நலனுக்காக, 1992-93லே, 12.80 கோடி ரூபாய்; 1993-94லே 16 கோடி ரூபாய்; 1994-95லே 20 கோடி ரூபாய்; 1995-96லே, பதினான்கரை கோடி ரூபாய். இவையெல்லாம் 5 வருடங்களுக்கான செலவு. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, 1996-97ல் 52 கோடி ரூபாய்; 1997-98லே 99 கோடி ரூபாய்; 5 வருடங்களிலே, காவலர் நலனுக்காக முன்பிருந்த அரசு செலவழித்தது 65 கோடி ரூபாய். 2 வருடங்களிலே, நாம் செலவழித்தது 151 கோடி ரூபாய். இதைக்கூட, பத்திரிகையிலே செய்தியைப் பார்த்துவிட்டு, அந்த அம்மா அறிக்கை விட்டாலும் விடுவார். ''இவையெல்லாம் நான் நினைத்தது'' என்று. ''நான் நினைத்ததை, அவர் கொடுத்திருக்கிறார்'' என்று சொல்வார். பரவாயில்லை, நினைத்ததற்காகவாவது நன்றி கூறுவோம்.

காவலர்களுக்கான உணவுப்படி. சட்டம் - ஒழுங்கு, மற்ற அவசரகாலப் பணிகளில், காவலர்களை ஈடுபடுத்தும் போதும், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகளைக் கவனிக்க மற்ற இடங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயங்களிலும் காவலர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. 1997- ஆம் ஆண்டில், உணவுப்படி பின்வருமாறு இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 16 ரூபாயிலிருந்து 25 ரூபாய் என 1997லே உயர்த்தினோம். முதல்நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களுக்கு 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய். உதவி ஆய்வாளர், ஆய்வாளர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 45 ரூபாய். தற்போது வழங்கப்படும் உணவுப்படி போதுமானதாக இல்லை எனவும் ஆகவே உயர்த்தித் தர வேண்டுமென்றும் காவலர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 25 ரூபாயிலிருந்து 35 ரூபாய் எனவும், முதல் நிலைக் காவலர், தலைமைக் கவாலர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 40 ரூபாய் எனவும் உயர்த்தப்படுகிறது.

காவல்துறையில் பணியாற்றும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை தற்பொழுது 12 கிலோ அரிசி மானிய விலையிலும், 8 கிலோ அரிசி பொது விநியோக விலையிலும் வழங்கப்படுகிறது. இனிமேல் 20 கிலோ அரிசியும் மானிய விலையிலேயே காவலர்களுக்கு வழங்கிட வேண்டுமென இவ்வரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 84,000 ஆகும். இதற்காக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஒன்றரை கோடி ரூபாய் செலவாகும்.

## மகளிர் காவலர் சீருடை பற்றி மூவர் கமிட்டி முடிவு செய்யும்

சீருடைப்படி : சீருடையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அந்த உடை எப்படி இருக்கலாம் என்று நானும் அவர்களும் கலந்துபேசி - மகளிர் காவலர்களுக்கான உடை எப்படி இருக்கலாம் என்று நான், அவர், அக்காள் பொன்னம்மாள் எல்லோரும் உட்கார்ந்து கலந்து பேசி மூன்று பேர் கொண்ட கமிட்டி இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், ஏ.எஸ்.பொன்னம்மாள் ஆகிய மூன்று பேரைக் கொண்ட

ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி அந்தச் சீருடையப் பற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் மெஜாரிட்டி அவர்கள்தான் இருக்கிறார்கள்.

### சீருடை உயர்வு:

1996 ஆம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றபின் காவலர், தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட சீருடைப்படி 25 ரூபாய் என்பதை 30 ரூபாய் என உயர்த்தி வழங்கியது. தற்போது, சீருடைப்படி காவல் பணியாளர்களுக்குப் பின்வருமாறு மீண்டும் உயர்த்தி வழங்கப்படவிருக்கிறது. காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக்காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு 40 ரூபாய் என்பது 60 ரூபாய் எனவும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 50 ரூபாய் எனவும், தலைமைக்காவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 40 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்படுகிறது. இதன் காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே பதினெட்டு இலட்ச ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

### சீருடைகளைத் தைத்தோ, துணியாகவோ பெற்றுக்கொள்ளலாம்

காவலர்களுக்கு வழங்கப்படும் சீருடை எப்படி வழங்கப்படுகிறது என்றால் தற்போது சீருடை தைத்து வழங்கப்படுகிறது. சரியாக அளவெடுத்து தைக்கப்படாத காரணத்தால் இந்தச் சீருடைகளை மறுபடியும் தைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறதென்றும், இதனால் அரசு வழங்கும் சீருடையை காவலர்கள் சரியகாப் பயன்படுத்த முடிவதில்லை என்றும் குறிப்பிட்டு, தங்களுக்கு சீருடைக்குரிய துணியை வழங்கிடுமாறு கோரி வருகிறார்கள்.

இக்கோரிக்கையினை ஏற்று காவலர்கள் அவரவர் விருப்பப்படி சீருடைகளைத் தைத்தோ அல்லது துணியாகவோ பெற்றுக் கொள்ளலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. மாதர் சங்கங்கள் மூலம் தைத்துக் கொள்வதாக இருந்தால் தையல்கூலி ரூபாய் 65 என்றிருப்பது ரூபாய் 75 ஆக உயர்த்தப்படுகிறது.

காவலர் குடியிருப்புகள், அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல்துறை கட்டடங்களைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் ஏதுவாக, இது வரை பொதுப்பணித்துறையால் செய்யப்பட்டு வந்த இப்பணிகள் 1.4.98 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக இந்த ஆண்டு ரூபாய் 5 கோடி செலவிட அரசு உத்தேசித்துள்ளது. இத்தொகை மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்டங்களில் உள்ள காவலர் குடியிருப்புகளின் அவசியத் தேவைகளின் அடிப்படையில் இத்தொகை செலவிடப்படும்

## காவலருக்கு 5000 வீடுகள் கட்ட ரூ.85 கோடி செலவிடப்படும்

ஏற்கெனவே ஆண்டொன்றுக்கு 1,500 வீடுகள் என்ற அளவில் கட்டப்பட்டு வந்தன. சென்ற ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 2,500 வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. அதுபோல, 98-99 ஆம் ஆண்டிலும் மேலும் 2,500 வீடுகள் கட்டிட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 5000 வீடுகள் காவலருக்கென இந்த அரசின் முயற்சியால் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென 85 கோடி ரூபாய் செலவிடப்படும். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 28,792 காவலர் குடியிருப்புகளில், மின்விசிறி உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 17,652. மின்விசிறிகள் இல்லாத 11,140 குடியிருப்புகளுக்குக் காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் இந்த மின் விசிறிகள் இணைத்துக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

அடுத்து, தமிழ்நாடு காவலர் உடல் நல நிதி திட்டத்திற்காக ஆண்டு மானியம்தற்போது 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த மானிய உதவி இந்த ஆண்டு 50 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

காவல்துறையில் தற்போது தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.20 வீதம் மிகைப் பணிக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலைகளைக் கருத்தில்

கொண்டு Extra Time Remuneration 20 ரூபாய் என்பதற்குப் பதிலாக 50 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதன் காரணமாக 77,473 காவல் பணியாளர்கள் பயன்பெறுவர். ஆண்டு ஒன்றுக்கு 11.16 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

**இடர்படி உயர்வு:**

அடுத்து, காவலர் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிவதால் அவர்களுக்கு மாதந்தோறும் இடர்படி Risk Allowance வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 20 ரூபாய் என்றும், துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 30 ரூபாய் என்றும் இடர்படி இருந்து வருகிறது. இனிமேல் இந்த இடர்படி பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும். காவலர் முதல் ஆய்வாளர் வரை ரூபாய் 50 என்றும், துணைக்கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ரூ.60 என்றும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு 5.16 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

**கூடுதல் பதவி உயர்வுகள்:**

காவல்துறையிலே பதவி உயர்வு இல்லாமல் தேக்கநிலை ஏற்பட்டு இருப்பதாக பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. தெரிந்தோ, தெரியாமலோ, தெரிந்தும் வேண்டுமென்றோ சில பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருக்கின்றன.

இதுகுறித்து சில குறிப்புகளை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன். இதிலே டி.ஐ.ஜி.

Director - General of Police. Additional Director - General of Police

எல்லாம் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

Additional Superintendent of Police என்று எடுத்துக் கொண்டால் 55 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Deputy Superintendent of Police என்று எடுத்துக் கொண்டால் 130 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Taluk) என்று

எடுத்துக் கொண்டால் 255 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக் கொண்டால் 53 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub Inspector of Police (Taluk) என்று எடுத்துக் கொண்டால் 173 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக் கொண்டால் 208 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Head Constable என்று எடுத்துக் கொண்டால் 1000 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன.

Grade - I Police & Constable என்று எடுத்துக் கொண்டால் 10106 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Women Head Constable என்று எடுத்துக் கொண்டால் 400 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. மொத்தம் 20,500 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Actual Strength 80322, Percentage of Actual Strength benefitted through promotion - 25.52%

அதாவது இருபத்தைந்தரை சதவிகிதம் பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறது. மேலும் பதவி உயர்வு அளிப்பது என்ற அடிப்படையில் 15 ஆண்டுகள் பணிசெய்த காவலர்களுக்கு தலைமைக் காவலர் பதவி உயர்வு அளிக்கப்படும் என, சென்ற ஆண்டு இந்த அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 9000 காவலர்கள், தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து இப்போது தலைமைக் காவலர்கள் தங்களையும் உதவி ஆய்வாளர்களாக (S.I.) பதவி உயர்வு செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றனர்.

இதனையும் அரசு பரிவுடன் கவனித்து 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர்கள் (Special S.I) பதவி உயர்வு அளித்து மற்ற உதவி ஆய்வாளர்களுக்கு இணையான சம்பளத்தை இவர்களுக்கும் வழங்கிடலாம் என இந்த அரசு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் இரண்டாம்நிலைக் காவலராகப் பணியில்சேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

Ministerial Staff - அமைச்சுப் பணியிடங்கள், காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று பல காலமாக, கோரி வருகின்றனர். குறிப்பாகப்

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களிலும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆயுதப் படைப்பிரிவிலும் போதுமான அமைச்சுப்பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும் கோரி உள்ளனர். அரசு இக்கோரிக்கையை ஏற்று, தேவையான புதிய அமைச்சுப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். அதற்கான பிரேரணைகள் காவல்துறைத் தலைவரிடமிருந்து பெற்று ஆணைகள் வெளியிடப்படும்.

**காவலர் குறைகளைத் தீர்க்க**
**புதிய அணுகுமுறைத் திட்டம்**

காவல்துறையில் பணிபுரியும் காவலர்கள் தங்களது குறைகளைத் தங்களுடைய மேல் அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ சரியான முறையில் தெரிவிக்க முடிவதில்லை என்ற குறை அவர்கள்மத்தியில் நெடுங்காலமாகவே இருந்து வந்தது. காவல்துறையில் காவலர்களின் குறைகளைக் களைய பல நடைமுறைகள் செயல்படவில்லை என்பதால் காவலர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக புதிய அணுகுமுறைத் திட்டம் ஒன்றைப் புகுத்துவது குறித்து அரசு பரிசீலித்தது.

அதன்படி காவலர்கள், தங்களுடைய குறைகளைச் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் விரைந்து தீர்த்து வைப்பதற்கும், தக்க செயல்முறை நடவடிக்கைகளை வரையறுத்து அவற்றைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென்று அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையர்கள் ஆகியோருக்கு அறிவுரைகள் வழங்கி அரசு சமீபத்திலே ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னை காவல்துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்திலும், அரசு தலைமைச் செயலகத்திலுள்ள உள்துறையிலும் காவலர்களின் குறைகளைக் களைவதற்கான தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதுவிலக்கு பற்றியும் கள்ளச்சாராயம் பற்றியும் நிரம்பப் பேசப்பட்டிருக்கிறது. இந்த மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு முன்பு தனியாக செயல்பட்டு வந்தது. இதை காவல்துறையிலுள்ள மற்ற பிரிவுகளோடு இணைத்தால் மதுவிலக்கு நல்ல முறையிலே

அமலாகும் என்ற கருத்துக்கள் கூறப்பட்டன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்பட்டு மாவட்ட காவல் துறையோடு இணைக்கப்பட்டது. அதனுடைய செயல்பாடுகள் மிகவும் மந்தமான நிலையில் இருந்தன என்பதற்கு புள்ளி விவரங்களே அத்தாட்சி.

குமாரதாஸ் குறிப்பிட்டாரே அந்த மூன்று இலட்சம், அதுவே குறைவு என்று நான் சொன்னேன். 1996 ஆம் ஆண்டு இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இருந்தபோது, 1996 ஆம் ஆண்டிலே 5,17,799 வழக்குகள்; ஆனால் அந்தப் பிரிவு எடுக்கப்பட்ட பிறகு 3,05,054 என்று அது குறைந்துவிட்டது. கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையும் அப்படித்தான்.

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மீண்டும் தனியாகச் செயல்படும்

1996இல் மதுவிலக்கு குற்றத்திலே கைதானவர்கள் 4,91,141 பேர். இதை அறிவித்தபிறகு 2,96,000 என்று குறைந்துவிட்டது. எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏற்பட்ட தொய்வு நிலையைக் கருத்திலேகொண்டு,, கள்ளச் சாராயத்தை ஒழித்து சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேட்டைத் தடுக்கும்நோக்கில் கள்ளச்சாராயம் ஒழிப்பு போன்ற வேலைக்கு சம்பந்தப்பட்ட பணிகளைத் தனித்து திறம்படக் கவனிப்பதற்காக முன்பு இருந்ததைப் போலவே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு - 30 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக மீண்டும் அந்தப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விருதுநகர் - காவலர்களின் கோரிக்கையை ஏற்றுப் பணிமாற்றம் ரத்து

விருதுநகரில் 31.3.98 அன்று, மாவட்ட ஆயுதப்படைக் காவலர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சுமார் 250 நபர்கள் காவலர்களுடைய சில பணிக்கால கோரிக்கைகளுக்காக திடீரென்று சாலை மறியலில் ஈடுபட்டார்கள், காவலர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கட்டுப்பாடு உள்ள காவல்துறையில்

இத்தகைய செயல்கள் ஏற்புடையது அல்ல என்பதால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 27 காவலர்கள் விருதுநகரிலிருந்து பணி மாற்றம் செய்யப்பட்டார்கள். அதில் தற்போது 26 காவலர்கள் தங்கள் குடும்பத்தினர் சிலர் வேண்டாத நபர்களின் தூண்டுதலால் இச்செயலில் ஈடுபட்டதாக கூறி இந்தச்செயல்களுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கோரி அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி மாற்றத்தை ரத்து செய்து, ஏற்கெனவே பணி செய்த இடத்தில் பணி புரிய ஆணையிடக் கேட்டுக் கொண்டார்கள்.

காவலர்களுடைய நலனில் எப்போதும் அக்கறை கொண்டஇந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை, மனிதாபிமான அடிப்படையில் ஏற்று அவர்களுக்கு வழங்கிய பணி மாற்றத்தை ரத்து செய்து அந்தப் பணி மாற்றத்திற்கு முன்பு எங்கேங்கே பணிபுரிந்தார்களோ அங்கேயே பணிபுரிய ஆணையிடப்பட்டுள்ளது.

**தீயணைப்பு நிலையங்கள்**

தீயணைப்பு நிலையங்களை பலபேர் கேட்டிருக்கிறார்கள். ஒன்றுகூட கொடுக்கப் போவதில்லை. ஏனென்றால், முந்தைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்திலே 29 தீயணைப்பு நிலையங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தி.மு.க ஆட்சியில் இந்த இரண்டு வருடத்தில் 47 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த 47 தீயணைப்பு நிலையங்களுக்கும் தேவையான முழு அடிப்படை வசதிகளையும் உருவாக்குவதிலும் இந்த அரசு இந்த ஆண்டு கவனம் செலுத்தப் போகிறது. இல்லாவிட்டால் ஒவ்வொருவரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள்.

தினமும் காவல்துறைக்கு ஒரு கேள்வி, தீயணைப்பு நிலையங்களுக்கு ஒரு கேள்வி, புதிய வளாகங்களுக்கு ஒரு கேள்வி. இந்தக் கேள்விகள் எனக்கு வரும். அந்தக் கேள்விகளிலே ஒரு கேள்வியாக எப்போது கட்டடம் கட்டப்படும் என்று கேட்பீர்கள். எப்போது தீயணைப்புத்துறைக்கு வசதிகளைச் செய்துதருவீர்கள் எனக் கேட்பீர்கள், அந்தக் குறையைத் தீர்க்க இந்த ஆண்டு பூராவும் 47 தீயணைப்பு நிலையங்கள்

உருவாக்கப்பட்டவைகளில், இவைகளையெல்லாம் செம்மைப் படுத்த அடிப்படை வசதிகளைக் கவனிக்கக் கருதியிருக்கிறோம்.

**புதிய காவல்நிலையங்கள்**

புதிய காவல்நிலையங்கள், பாளையம் அமரமூர்த்தி, அரியலூர் அவர்கள் கேட்டார். பெரம்பலூர் மாவட்டத்திலே வெங்கனூரில் ஒன்று உண்டு; சங்ககிரி முத்து கேட்டது நாமக்கல் மாவட்டத்தில் தேவூர் பேரூராட்சியிலே; தூத்துக்குடி பெரியசாமி கேட்டது தூத்துக்குடியிலே தாளமுத்து நகர்; முல்லைவேந்தன் கேட்டது மகேந்திர மங்கலம், தர்மபுரியிலே; பெருந்துறை பெரியசாமி கேட்டது ஈரோடு மாவட்டம் காஞ்சி கோயில்; பெரணமல்லூர் பாண்டுரங்கன் அவர்களும், அமைச்சர் பிச்சாண்டியும் சேர்ந்து கேட்டது திருவண்ணாமலையிலே பொன்னூரிலே.

உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அன்றைக்குக் கேள்வி கேட்டபோதுகூட, 'பொன்னூர் பரிசீலிக்கப்படும்' என்று சொன்னேன். அவர் மறுபடியும் கேள்வி கேட்டார். பரிசீலிக்கப்படுவது குற்றம் என்றால் வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னேன் இப்போது கொடுத்தாகிவிட்டது.

பவானி பாலசுப்பிரமணியம் கேட்டது ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல்; குழந்தை தமிழரசன் கேட்டது கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம்; ஆலங்குடி வெங்கடாசலம் கேட்டது, சுயேட்சை உறுப்பினர், அவர் இன்று இல்லையா? அதை மாற்றிக் கொடுத்து விடலாம் அவர் கேட்டது, கரம்பக்குடியிலே; வாசுகி முருகேசன், கரூர் - கரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம்; தீரன், ஆண்டிமடம் - இரும்புலிக்குறிச்சி;

அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கெங்கவல்லி; முகையூர் ஏ.ஜி.சம்பத் கேட்டது விழுப்புரம் மாவட்டத்திலே கண்டாச்சிபுரம்; திருமங்கலம் முத்துராமலிங்கம் கேட்டது மதுரை மாவட்டம் குட்டக்கோயில்; ஒசூர் வெங்கடசாமி கேட்டது தர்மபுரியில் உத்தன்ன பள்ளி; சோழவந்தான் லா.சந்தானம் கேட்டது மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சி;

புறக்காவல் நிலையங்கள் படிப்படியாக நிதி வசதிக்கேற்ப முழுக் காவல் நிலையங்களாக - எல்லாப் புறக்காவல் நிலையங்களும் தரம் உயர்த்தப்பட இந்த ஆண்டு முதலே வேலை தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு உறுப்பினர் மணிவர்மா, தச்சம்பட்டில் காவல் நிலையம் வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகக் கேட்டார். அதனால் கொடுக்கப்படுகிறது. இதையே அவர் வழக்கமாக வைத்துக்கொள்ளக்கூடாது என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்களுடைய...

**இரா. தாமரைக்கனி** :- என்னுடைய தொகுதியில், மல்லியில் புதிய காவல்நிலையம் வேண்டுமென்று கேட்டேன். எல்லோருக்கும் கொடுத்துவிட்டீர்கள். எனக்கு மட்டும் கொடுக்கவில்லை.

**முதல்வர் கலைஞர்** :- 'பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே' தரப்படும் என்று கூறி அமைகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், காவல்துறை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து உரையாற்றினார்.

★ ★ ★

காவலர் நலனுக்காகச்
செலவிடப்பட்ட தொகை
கடந்த ஆட்சியில், 5 ஆண்டுகளில்,
ரூ. 65 கோடி மட்டுமே!
**கலைஞர்** ஆட்சியில்
2 ஆண்டுகளில், ரூ. 151 கோடி.

காவல்துறையை நவீனப்படுத்த
2 ஆண்டுகளில் ரூ. 47 கோடி;
இவ்வாண்டில் ரூ. 10 கோடி.

கடந்த 2 ஆண்டுகளில்,
57 புதிய காவல் நிலையங்கள்;
இவ்வாண்டில்,
19 புதிய காவல் நிலையங்கள்.

வண்டலூரில், 133 ஏக்கரில்,
ரூ. 20 கோடி செலவில்
தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம்.

காவல்துறையில்
இரண்டே ஆண்டுகளில்,
20,500 பதவி உயர்வுகள்!
10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப்
பணிமுடித்தவர்கள் அனைவருக்கும்,
சிறப்பு உதவி - ஆய்வாளர்களாகப்
பதவி உயர்வு!

காவலர் குறைகளைத் தீர்க்க
புதிய அணுகுமுறைத் திட்டம்.

கடந்த 2 ஆண்டுகளில்,
ரூ. 15.29 கோடியில்
81 காவல் நிலையங்களுக்குப்
புதிய கட்டடங்கள்.
இவ்வாண்டில், ரூ. 1.60 கோடியில்
40 காவல் நிலையங்களுக்குப்
புதிய திட்டங்கள்.

ரூ. 85 கோடியில்
5,000 காவலர் குடியிருப்புகள்;
13,932 காவலர் குடியிருப்புகளுக்கு
தனி மின் மீட்டர்கள்;
ரூ. 1 கோடி செலவில்
11,140 குடியிருப்புகளுக்கு
மின்விசிறிகள்.